

Sri Andal
Srivilliputtur

© Srinidhi

2606

திருப்பாவை - 1/4

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ.எண்: 26048
நாள்: 27/10/2009
நூலகம்

திருப்பாவை

பெரியவாச்சான் பிள்ளை
அருளிய மணவாளப் பெருமாள் நாயனார்
அனுக்ரஹத்தால் (9) ஆயி – 2 வ்யாக்யானங்கள்

Total 4 Vyaakhyaanams.

600/-



ஸ்ரீ:

ஸ்ரீமத்யை கோதாயை நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அந்சுகுடிக்கோரு சந்ததியான ஆண்டாள் அருளிய

திருப்பாவை மூலமும்

பதவுரையும், அதன் வ்யாக்யானங்களான

ஸுவியிரப்படி (ஸுன்ற அரும்பதவுரைகளுடன்), ஆருயிரப்படி,

ஈராயிரப்படி, நாலாயிரப்படிகளும்

ஸ்வாபதேஸவ்யாக்யானங்களும், ப்ரமாணத்திரட்டு முதலானவையும் அடங்கிய

திருப்பாவை வ்யாக்யானங்கள்

(TIRUPPAVAI COMMENTARIES)

கிடைக்குமிடம் & பதிப்பாசிரியர்

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி

ஆசிரியர், "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"

38, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

Copyright reserved] 1991 [விலை ரூ. 60.00

Published with financial assistance from the Government of India, Ministry of Education, vide Sanction No. 4—4/90 L. G. CELL dated 20—11—90 Copyright vests with Shri S. Krishnaswamy Iyengar, Editor, Sr Vaishnava Sudarsanam, 3-B, Puthur Agrahaa Tiruchirapalli-620 017 (Tamil Nadu).

ஸ்ரீவாணி பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17

தோட்டத்தில் திருத்துழாய் மண்ணின் கீழே தோன்றினவள் ஆண்டாள் என்று குருபரம்பரை நூல்கள் கூறும். த்ரேதாயுகத்திலே விதேஹ தேசத்தில் மிதிலா நகரில் ஸ்ரீ ஜனகமஹாராஜன் யாகசாலை அமைப்பதற்காகக் கலப்பைகொண்டு பூமியை உழுகையில் ஸ்ரீ தேவியின் அவதாரமான ஸீதாதேவி தோன்றியது போல, கலியுகத்திலே பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருத்துழாய்ப்பாத்தி அமைப்பதற்காகக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவனத் தைக் கொத்துகையில் பூதேவியின் அம்ஸமாகத் திருத்துழாய் மண்ணின் கீழே இந்த கோதாதேவியும் அயோநிஜையாகத் தோன்றினாள். பிள்ளைப் பேறற்ற பெரியாழ்வாரும், பரமதரித்ரன் பெருநிதி, எடுத்ததுபோலே அக் குழந்தையை எடுத்துத் தமது தர்மபத்னியின் கையில் கொடுத்து, கோதை என்று திருநாமம்சாத்தி "ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால், திருமகள்போல வளர்த்தேன்" [பெரியாழ்-திரு 3-8-4] என்று தாமே அருளிச்செய்தபடி அக்குழந்தையை அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் பாலித்து வளர்த்து அவளுக்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைச்செய்து பரம ஜ்ஞானத் தையும் ஊட்டி வளர்த்தார்.

உலகெல்லாம் வியக்கும்படி இளமையிலேயே எம்பெருமானிடத்திலே பக்திப் பெருங்காதல்கொண்டு, பிஞ்சாய்ப்பழுத்தவளாய், அவனையே மணம் செய்துகொள்ளக்கருதி, அப்பெருமானது பெருமைகளையே எப்பொழுதும் நினைத்தல் துதித்தல் முதலியன செய்து நின்றாள் அச்சுதப்பார் குழற்கோதை. தினந்தோறும் விஷ்ணுசித்தர் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்து வதற்காகக் கட்டிவைத்த திருமாலையை, அவரில்லாத ஸமயம்பார்த்து எடுத்து, தன்குழலிலே தரித்துக்கொண்டு, சிறந்த ஆடையாபரணங்களையும் அணிந்து கொண்டு "அப்பெருமானுக்கு நான் பொருந்தியிருக்கிறேனே? இல்லையோ?" என்று தன் அழகைக் கண்ணாடியிலே கண்டு; பெரியாழ்வார் வருவதற்கு முன்பே மலர்மாலையைக் கொணர்ந்து முன்போலவே பூக்கூடையில் நலங்காமல் வைத்துவந்தாள். தமக்குத் தெரியாமல் நடக்கிற அதை உணராமல், ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய்ப் பெருமாளுக்குச் சாத்திவர, பெருமாளும் உகப் புடன் சாத்திக்கொண்டிருந்தார். இப்படிப் பல நாள்கள் கழிந்தபின், ஒருநாள் வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்தபோது கோதை பூமாலை சூடி யிருப்பதைப் பார்த்துக்கோபம் கொண்டு "பெண்ணே! நீ செய்த இக்காரியம் எம்பெருமானுக்கு அபசாரமாகும். இனி இப்படிச் செய்வதற்கு நினைவும் கொள்ளாதே" என்று நங்கைக்கு நற்புத்தி சொல்லிவிட்டு, அன்று பெருமாளுக்கு மாலைசாத்தாமல், அக்கைங்கரியத்திற்கு இடையூறு நேர்ந்ததற்கு மிகவும் மனம் வருந்தியிருந்தார். அன்றிரவு வடபெரும் கோயிலுடையான் ஆழ்வாருடைய கனவிலேதோன்றி "இன்று நீர் நமக்கு மாலை கொண்டுவராதது ஏன்?" என்று கேட்க, அவர் தம் திருமகளாருடைய தவருன காரியத்தை விண்ணப்பிக்க, அது கேட்டு அப்பெருமான் "அவள் சூடிக்கொடுத்த மாலையேகாணும் நறுமணம்

ஆண்டாள் வைபவம்

கர்க்கடே (ஆஷாடே₄) பூர்வப₂ல்கு₃ந்யாம் துளஸீகாநநோத்₃ப₄வாம் ।
பாண்ட்₃யே விஷ்வம்ப₄ராம் கோ₃தா₃ம் வந்தே₃ ஸ்ரீரங்க₃நாயகீம் ॥

[பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய துளஸித் தோட்டத்தில் தோன்றியவளாய், பூ₄மிதே₃வியின் அவதாரமாகத் திருவாடிப்பூரத்தில் அவதரித்தவளாய், ஸ்ரீரங்கநாதனின் பத்னியானவளான கோதை எனப்படும் ஆண்டாளை வணங்குகிறேன்.]

தே₃வஸ்ய மஹிஷீம் தி₃வ்யாம் ஆதே₃ளா கோ₃தா₃முபாஸ்மஹே ।
யந்மௌலிமாலிகாம் ப்ரீத்யா ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு₄: ॥

[எவள் சூடிக்களைந்த மாலையை ஸர்வேச்வரனே உகப்புடன் ஏற்றுக் கொள்கிறானோ, அந்த விஷ்ணுவின் தி₃வ்யமஹிஷியான அத்தகைய கோதையை முதலிலே உபாஸிக்கிறோம்.]

ஸ்ரீமாஸி பாண்ட்₃யபு₄வி பூர்வப₂ல்கு₃நீக₃நபே₄ நவீநதுளஸீவநாந்தராத் ।
உதி₃தாமுதா₃ரகு₃ணரங்க₃நாயகப்ரியவல்லபா₄ம் வஸு₂மதிமுபாஸ்மஹே ॥

[பாண்டியதேசத்தில் ஆடிமாதத்தில், பூரமென்னும் சிறந்த நக்ஷத்திரத்தில், புதிய துளஸித் தோட்டத்தின் நடுவினின்றும் அவதரித்தவளாய், க₃ம்பீ₄ரமான கு₃ணங்களையுடைய ரங்கநாதனுக்கு இனிய மனைவியாய், பூ₄மிப்பிராட்டியின் அம்சமான ஆண்டாளை உபாஸனை செய்யக்கடவோம்.]

ஸித்₃தா₄நாம் ஸரதா₃ம் கலாவக₃மே வர்ஷே நளாக்₃யே ரவௌ
யாதே கர்க்கடகம் விதா₄வுபகிதே ஷஷ்டே₂ऽஹநி ஸ்ரீமதி ।
நக்ஷத்ரேऽர்யமதை₃வதே க்ஷிதிபு₄வோ வாரே சதுர்த்₃யாம் திதௌ₄
கோ₃தா₃ ப்ராது₃ரபூ₄த₃சிந்த்யமஹிமா, ஸ்ரீவிஷ்ணுசித்தாத்மஜா ॥

[கலியுகத்தில், 'ஸித்₃த₄' என்னும் இரண்டு எழுத்துக்களால் (கடபயாதி₃ ஸங்க்₂யைப்படி) கிடைத்த தொண்ணூற்றேழு வருடங்கள் கழிந்தவளவில், நள வருஷத்தில் ஸூர்யன் கடகராசியை அடைந்திருக்கும் ஆடிமாதத்தில், சந்திரன் வளரும் சுக்ல பக்ஷத்தில், ஆறுவது தேதியில், அர்யமாவை தே₃வதையாகக் கொண்ட அழகிய பூர நன்னாளில், செவ்வாய்க்கிழமையிலே சதுர்த்தி₂ திதியில் எண்ணமுடியாத பெருமையையுடைய ஸ்ரீ விஷ்ணுசித்தருடைய பெண்ணான கோதா₃தே₃வி அவதரித்தருளினாள்.]

முற்கூறிய தனியன்களிலும் வைப₂வ ச்லோகங்களிலும் முன்னோர்கள் அநுஸந்தி₄த்த ரீதியில், கலிபிறந்து தொண்ணூற்றேழு வருடங்களுக்குப் பிறகு தொண்ணூற்றெட்டாவதான நள வருடத்தில், ஆடிமாதம் சுக்லபக்ஷம் சதுர்த்தி₂ செவ்வாய்க்கிழமை கூடிய பூரநக்ஷத்திரத்தில், பூ₄மிப்பிராட்டியாரின் அம்சாவதாரமாய், ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய துளஸித்

மிக்கு, நமக்கு மிக உகப்பாயிருப்பது! ஆகையால் இனி நாள்தோறும் அவள் சூடிக்களைந்த மாலையையே நமக்குக் கொண்டு வருவீர்'' என்று அருளிச் செய்தான். உடனே கண்விழித்த பெரியாழ்வார் தாம் பெற்றெடுத்த பெண்பிள்ளை எம்பெருமானுடைய தேவிகளில் ஒருத்தியின் அவதாரமே என்று அறுதியிட்டு அவளுக்கு அது காரணமாக ''ஆண்டாள்'' என்றும், எம்பெருமானுக்குரிய மலர் மாலையைத் தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு அவனுக்குக்கொடுத்தது காரணமாக ''சூடிக்கொடுத்த நாச்சியார்'' என்றும் திருநாமம் இட்டு அழைத்து வந்தார்.

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாகிற ஆண்டாளுடைய ஜ்ஞான பக்திகள் க்ஷணந்தோறும் பகவத்விஷயத்திலே கைவளர்ந்து வந்தன. ஒரு கொள் கொம்பிலே சேர்க்கவேண்டும் பருவத்தையடைந்தாள் ''மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்னும்படியான உறுதியையுடையவளானாள். அவளுக்கு வடபெருங்கோயிலுடையானுடன் தழுவி முழுசிப் பரிமாற வேணும் என்னும் ஆற்றுமை கரைபுரண்டது. அப்பெருமானிடம் சென்றபோது அவன் முகங்கொடாதேயிருந்தான். ''ஐம்வர்யார்த்திகளுக்காகத் திருவுலகளந்தருளின களைப்பாலே சாய்ந்து கிடக்கிறான்போலும்'' என்று நினைத்துத் தன் திருமுலைத்தடங்களாலே அப்பெருமானை நெருக்கினாள். அவ்வளவிலும் பேசக் கண்டிலள். விசிறி முதலியவைகளாலே சிசிரோபசாரம் பண்ணியும் எழுந்திருக்கக் காணவில்லை. ''இது களைப்பல்ல; நம்மிடம் ப்ரணயாபராதத்தினாலே முகங்கொடாதே கிடக்கிறான்'' என்றறிந்து வருந்தி ''இவனை அனுபவித்தாருண்டோ' என்று ஆராய்ந்தாள். ''திருவாய்ப்பாடியில் பெண்பிள்ளைகள் இவனை அனுபவித்தார்கள்; ஆனால் அது காலாந்தரத்திலேயாகையாலே நாம் அதுக்கு உதவப்பெற்றிலோம்'' என்று ஏங்கினாள். ''இனி அவன் உலாவிப்போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாய்த் திளைத்த யமுனையும், அவன் எடுத்த கோவர்த்தனமும் கிடந்ததாகில் அவற்றைக் கண்டாகிலும் உயிர்வாழ்வோம்'' என்று பார்த்து, அவ்விடங்களுக்குப் போக பலமில்லாமையாலே கலங்கினாள். ''ஜன்கராஜன் திருமகளைப்போலே 'வில்' என்று ஒரு அவதிபெற்றிலேன்; நப்பின்னைப்பிராட்டியைப்போலே சிஷபுங்கள் என்று ஒரு அவதிபெற்றிலேன் என்செய்வேன்?'' என்று நிலைதடுமாறினாள். அப்போது சில பெரியோர்கள் ''ராஸக்ரீடை செய்த பிறகு க்ருஷ்ணனைப் பிரிந்த இடைப்பெண்கள் தங்கள் ஆற்றுமையாலே க்ருஷ்ணனாகத் தங்களை பாவித்துக்கொண்டு உயிர்தரித்தார்கள்; அம்மாதிரியே நீயும் அனுகரிப்பாயாக'' என்று உரைத்தனர். இவளும் 'க்ருஷ்ணனை அனுகரிப்பதைக் காட்டிலும் அவனை அனுகரித்த பெண்களை அனுகரிப்பது நல்லது'' என்று அறுதியிட்டு, ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தன்னை அவர்களிலே ஒருத்தியாகவும் வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், வடபெருங்கோயிலுடையானை க்ருஷ்ணனாகவும் பாவித்து இடைப்பெண்கள் நோற்ற நோன்பைத் தான்

நோற்கிறான். பூர்வநாப்ரகர்ஷத்தாலே (நினைவின் முதிர்ச்சியாலே), இவளுக்கு இடைநடையும், இடைமுடியும், இடைப்பேச்சும் முடைநாற்றமும் உண்டாயின. 'திருவாய்ப்பாடியில் மழைபொழியவேண்டும்' என்று நோன்பு நோற்கும்படி ஆயர்களால் நியமிக்கப்பெற்ற திருவாய்ப்பாடிப் பெண்கள் அதை வியாஜமாகக் கொண்டு கண்ணனைப் பெறுவதற்காக நோன்பு நோற்ற ப்ரகாரத்தை அனுகரித்து, பாதகங்கள் தீர்ப்பதாய், பரமனடி காட்டுவதாய், வேதம் அனைத்துக்கும் வித்தாவதான திருப்பாவையைப் பாடியருளினாள் ஆண்டாள்.

இவ்வநுகாரம் நாச்சியார் திருமொழியென்னும் இவளது மற்றொரு ப்ரபந்தத்திலும் தொடர்ந்தது. திருப்பாவையில் "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று முதற்பாட்டிலும், "கறவைகள் பின்சென்று" (28) "சிற்றம் சிறுகாலே" (29) என்னும் கடைசிப் பாசுரங்களிலும் எம்பெருமானே உபாயம் என்றும், அவன் உகப்புக்கான அடிமைசெய்வதே ப்ராப்யமென்றும், தன் உறுதிலை அறுதியிட்டபின்பும், தான் விரும்பியபடி எம்பெருமானைப் பெருமையாலே அவனைப் பெறவேணும் என்னும் மிகுந்த த்வரை ஏற்பட்டு, அதனாலே அறிவு கலங்கி, நாச்சியார்திருமொழி முதற்பதிகமான "தையொரு திங்க"ளில் பிரிந்தாரைக் கூட்டும் இயல்புடைய காமதேவனை "அனங்கதேவா! வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" என்று ஆக்ரயித்தாள். இது கண்டு பொறுத எம்பெருமான் தானைக்கு வந்து உதவினாற்போலே விரைந்து வந்து முகங்காட்ட, ஊடலாலே தான் சிற்றில் இழைத்துக்கொண்டிருந்ததையும், அவன் பலாத்காரமாக இவளைப்பற்றி மெய்ப்பிணக்கிட்டதையும் (அணைத்ததையும்) பேசினாள் இரண்டாம் திருமொழியான நாமமாயிரத்தில். இப்பதிகத்தில் ஏற்பட்ட ஸம்ஸ்லேஷம் தொடர்ந்து நடந்தால், ஆனந்த மிகுதியினாலே அழிவை (உயிர் தரியாமையை) விளைத்துவிடும் என்று பயந்த உறவினர்கள் கண்ணனையும், ஆய்ச்சியரையும் பிரித்து நிலவறைகளிலே அடைக்க, அப்பிரிவாற்றுமையினாலே இவர்களுக்கு ப்ராணஹாநி உண்டாகும் நிலை ஏற்பட, அதுகண்ட உறவினர்கள் பெண்கள் நல்ல கணவனைப் பெறுவதற்குச் செய்யும் பனி நீராடுதல் என்னும் நோன்பைச் செய்வதற்காக இவர்களை வெளியில்விட, இவர்களும் கண்ணனைக் கூடியும் பிரிந்தும் படுகிற வருத்தங்களைத் தவிர்ப்பதற்காக அவன் அறியாதபடி ஒரு பொய்கைக்குச் சென்று ஆடைகளைக் களைந்து கரையில் வைத்துவிட்டு விரஹதாபம் ஆறும்படி பொய்கையிலே குளித்திருந்ததையும், அவனும் இவர்கள் அறியாதபடி அங்கு வந்து இவர்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு கரையில் இருந்த குருந்தில் ஏறி வீற்றிருந்ததையும், இவர்களும் குளித்துக் கரையேறிப்பார்த்தவுடன் ஆடையாபரணங்களைக் காணாமல், இவனை மரத்தின் மேலே கண்டு, இவனை இரப்பார், ஏத்துவார், வாழ்த்துவார், சிறுவாராய்ப் பலவிதமாகக் கெஞ்சிகேட்க, அவனும் ஆடையாபரணங்களைக் கொடுத்து ஸம்ஸ்லேஷித்ததையும் பேசினாள் மூன்றாம் திருமொழியான கோழியழைப்பதில். ஸம்

ஸ்லேஷமெல்லாம் விஸ்லேஷத்திலேயே முடியுமாகையாலே, இந்தக் கூடலும் பிரிவிலே முடிய, "'மறுபடியும் ஒருகால் இவனைக் கூடவல்லோமோ?'' என்று கூடல் இழைத்ததைப் பேசினாள் நாலாம் திருமொழியான தெள்ளியாரில். அசேதனமான கூடல் மறுமொழி கூறுமையாலே சேதனமான குயிலைப்பார்த்து எம்பெருமான் வரும்படிக் கூவப் பிரார்த்திக்கிறாள் ஐந்தாம் திருமொழியான மன்னுபெரும்புகழில்.

குயில் கூவியும் அவன் வாராமையாலே மிகவும் வருத்தமுற்ற இவளை உயிர்தரிக்கச் செய்வதற்காக, இவள் விரும்பியிருந்த படிகளில் ஒன்றும் குறையாதபடி பாணிக்ரஹணம் ஈருகக் கனவிலே அவன் இவளை அனுபவிக்கச்செய்ய, அவ்வநுபவத்தைத் தோழிக்குச் சொல்லி தரித்திருந்தபடியைச் சொல்லுகிறாள் ஆரும் திருமொழியான வாரணமாயிரத்தில். கனாக்கண்டவுடன் அவனோடு ஏற்பட்ட ஸம்ஸ்லேஷம் நீடிக்கப்பெறுமையாலே, அவனோடு எப்போதும் சேர்ந்திருக்கும் ஸ்ரீபாஞ்சஜன்யத்தை பகவதநுபவம் இருக்கும்படியைப் பலவாறு கேட்கிறாள் ஏழாம் திருமொழியான ''கருப்பூரம் நாறுமோ''வில். அவன் வருவதாகச் சொல்லிப்போன மழைகாலத்தில் அவன் வாராமையாலே, மேகங்களைத் திருவேங்கடமுடையானுக்குத் தூதாக விட்டமையைப் பேசினாள் எட்டாம் திருமொழியான விண்ணீலமேலாப்பில். மேகங்களும் தூது செல்லாமல் நின்ற விடத்திலே நின்று மழை பொழிய, அதனாலே மழைகாலத்தில் உண்டாகும் இந்திரகோபங்கள், முல்லைகள், காயா முதலிய மலர்கள், களங்கனி முதலான கனிகள், வண்டினங்கள், பூஞ்சுனைகள் முதலானவை உண்டாகி எம்பெருமானுடைய திருமேனியையும் அவயவங்களையும் நினைவுபடுத்தித் தன்னை நலிவதைப் பேசினாள் ஒன்பதாம் திருமொழியான ''சிந்துரச் செம்பொடி''யில். இப்படி இவற்றாலே நலிவு பெற்று ''நமக்கு உயிர்தரிக்க வழி உண்டோ?'' என்று ஆராய்ந்து, ''மற்றவையெல்லாம் தப்பினாலும் பெரியாழ்வாரோடு நமக்குண்டான உறவு தப்பாது. அவன் ஸ்வாதந்த்ரியத்தையும் மாற்றி, நம்மை அவன் திருவடிகளில் சேர்த்தேவிடும்'' என்று உறுதி பூண்டமையைப் பேசினாள் பத்தாம் திருமொழியான ''கார்க்கோட''லில். இப்படி உறுதியோடு இருந்த பின்பும், தனக்கு முகங்கொடுக்கக் காணுமையாலே இவள் மிகவும் நோவுபட்டுகிடக்கிற நிலையைக் கண்டு தாய்மார் தோழிமார் முதலான பெண்பிள்ளைகள் இவளைக் காணவந்து திரண்டுகிடக்க ''அவன் நம்மை வைத்த பரிசைப் பார்த்தீர்களா'' என்று வெறுத்து வார்த்தை சொல்லி, பின்பு ''நம்மைப் போன்ற சில பெண்களுக்கு உதவியவன் பெரியாழ்வார் பெற்றெடுத்த நமக்கும் உதவாதொழியான்'' என்று ஒருபடி தரித்தமையைப் பேசினாள் பதினேராம் திருமொழியான ''நாமுகக்குப் தம் கை''யில். இப்படி உறுதிபூண்டிருந்தும் முகம் காட்டாமையாலே, நடக்கவும் இயலாத நிலையை அடைந்து அருகில் இருப்பாரைப்பார்த்து, ''அவன் இருக்கும் தேசத்திலே என்னைக்கொண்டுபோய்ச் சேருங்கள்'' என்கிறாள் பனிரண்

டாம் திருமொழியான ''மற்றிருத்தீர்க''ளில். இவள் நிலையை அநுஸந்தித்து வருந்தியிருக்கையாலே, அருகில் இருந்தவர்களும் இவளைக் கொண்டுபோய் அவன் ஸம்பந்தமுள்ள மதுரைமுதலான தேசத்தில் சேர்க்கமுடியாமையாலே ''அவனோடு தொடர்புள்ள ஏதாவதொன்றைக் கொண்டுவந்து என்னைத் தொடச்செய்து உயிர்தரிக்கச் செய்யுங்கள்'' என்று அவர்களைப் பிரார்த்தித்ததைப் பேசினாள் பதின்மூன்றும் திருமொழியான ''கண்ணனென்னும் கருந்தெய்வ''த்தில். இவளுக்குப் பரமபக்தி பர்யந்தம் விளையச்செய்வதற்காக, இவ்வளவிலும் அவன் காலதாமதம் செய்ய, அதனால் ஆற்றுமை கரைபுரண்டு, பெருவிடில் முடியும் நிலை ஏற்பட்டவளவிலே அவன் வந்து முகங்காட்டி இவளை விஷயீகரிக்க, அப்போது பிறந்த விடாயும் அதற்கு அநுகுணமாகப் பெற்ற பேறும். ஒருவரிடத்தில் வைத்துப் பேசவொண்ணாதபடி அள்விறந்திருக்கையாலே, ''கண்டீரே'' என்று கேட்கிறவர்கள் பாசுரத்தால் தனக்குப் பிறந்த விடாயையும், 'கண்டோம்'' என்று பதில் சொல்லுகிறவர்கள் பாசுரத்தால் தான் பெற்ற பேற்றையும் அந்யாபதேசத்தாலே சொல்லித் திருமொழியை நிறைவு படுத்துகிறாள் பதினாலாம் திருமொழியான 'பட்டிமேய்ந்'தில்.

இப்படி பகவதநுபவம் செய்துகொண்டு ஆண்டாள் வாழ்ந்து வருகையில், இவளுக்கு விவாஹத்துக்கேற்ற பருவம் வந்ததைக்கண்டு, பெரியாழ்வார் இவளுக்கேற்ற கணவனைக் காணப்பெருமல் கவலைப்பட்டு, இவளை யழைத்து ''நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்?'' என்று கேட்க, ஆண்டாள் ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று சொல்ல, பட்டர்பிரான் ''அப்படியானால் என்ன செய்வது?'' என்று கேட்க, கோதையும் ''பெருமானையே மணம்புரிய விரும்புகிறேன்'' என்று உரைத்தனள். ஆழ்வாரும் ''நூற்றெட்டுத்திருப்பதி எம்பெருமான்களில் யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்?'' என்று கேட்க, ஆண்டாளும் ''அவரவர்களுடைய குணங்களையும், பெருமைகளையும் சொல்லியருளவேணும்'' என்று பிரார்த்திக்க, ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவம் தொடக்கமாகப் பாண்டியநாட்டில் எம்பெருமான்கள் பெருமைகளையும், மலைநாட்டுத் திருப்பதி எம்பெருமான்களின் மேன்மைகளையும், வடவேங்கடம் தொடக்கமாகத் திருப்பிரிதி ஈறுக வடநாட்டுத் திருப்பதி எம்பெருமான்களின் வைபவங்களையும், தொண்டைநாட்டில் எம்பெருமான்களின் பெருமைகளையும், நடுநாட்டில் எம்பெருமான்களின் ஏற்றங்களையும், அழகியமணவாளன் முதலான சோழநாட்டில் எம்பெருமான்களின் சீர்மைகளையும் அருளிச்செய்ய, ஆண்டாளும் அதுகேட்டு ஆனந்தக்கண்ணீர் துளிக்க மயிர்க்கூச்செறியும் மேனியுடையளாய், அரங்கத்தின்னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளைக்கேட்டுப் பெருங்காதல்கொண்டு மோஹித்து, ''வந்தாலே திருவரங்கன் வாராலே என்றென்றே வளையும் சோரும்'' என்கிறபடியே மனமுருகி, மலர்க்கண்கள் பனிப்ப, அழகிய மணவாளனையே காமுற்று, பெருட்டெருத்த கண்ணீலங்கள் செய்யக் கனக்கண்டு, அணியரங்கத்தம்மானுக்கே அற்றுத் தீர்ந்த காதலையுடையவளானாள்.

பெரியாழ்வாரும் ''கோதைக்குத் தக்க மணாளன் கோயிற்பிள்ளையான நம்பெருமாளே'' என்று அறுதியிட்டு, ''இது எப்படி நடக்கும்'' என்று கவலைப்

பட்டுக்கொண்டு கண்வளர்ந்தருள, திருவரங்கச் செல்வனும் ஆழ்வார் கனவிலே எழுந்தருளி, "உம்முடைய பெண்ணை கோதையைக் கூட்டிக்கொண்டு நம் கோயிலுக்கு வாரீர். அவளுக்குத் தகுதியாக நாமே அவளைக் கைப்பிடிக்கிறோம்" என்று அருளிச்செய்ய, ஆழ்வாரும் உகந்து கவலையற்றிருந்தார். நம்பெருமாளால் நியமிக்கப்பெற்ற திருவரங்கத்துக் கைங்கர்யபரர்கள் அவருடைய குடை சாமரம் திருவாலவட்டம் முதலான எல்லாப் பரிச்சதங்களோடும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று, நம்பெருமாள் நியமனத்தை விண்ணப்பம் செய்ய, ஆழ்வாரும் மிக உகந்து ஆச்சர்யப்பட்டு வடபெருகோயிலுடையானுடைய அநுமதி கொண்டு மணிகளிழைத்த மூடு பல்லக்கிலே ஆண்டாளை எழுந்தருள்வித்துக் கொண்டு, வாத்யகோஷங்களுடன், தொண்டர்குழாம் புடைசூழ, "ஆண்டாள் வந்தாள், சூடிக்கொடுத்தாள் வந்தாள். சுரும்பார்குழற்கோதை வந்தாள். திருப்பாவை பாடிய செல்வி வந்தாள். தென்னரங்கம் தொழும் தேசுடையாள் வந்தாள்" என்று பலசின்னங்கள் பணிமாற வந்து, அழகியமணவாளனுடைய பெரியதிருமண்டபத்தே சென்று மூடுபல்லக்கை மூடியிருந்த தட்டுப்பாயை அகற்ற, சூடிக்கொடுத்த நாச்சியாரும் அனைவரும் காணும்படி—உதறி உடுத்த பட்டுச்சேலையும், சுற்றிய செங்கழுநீர்மாலையும், திருநெற்றியிலே கஸ்தூரி திருநாமமும், காதளவும் ஓடிக் கயல்போல் மிளிரும் கடைக்கண் விழியும் கொடியேரிடையுமாய், சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்ப, அன்னமென்னடையும் கொண்டு அழகிய மணவாளன் திருமுன்பேசென்று உள்ளே புகுந்து, கண்களாரக்கண்டு, கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் பேறுபெற்று, நாகத்தணையை மிதித்தேறி, தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கரைச் சேர்ந்து, எப்போதும் திருவரங்கன் திருவடி வருடலாம்படி மறைந்தருள, இதைக்கண்ட ஆழ்வாரும் அவர் சிஷ்யராகிய வல்லபதேவர் முதலானோரும் ஆச்சர்யப்பட, திருவரங்கச் செல்வனார் ஆழ்வாருக்கு அருளப்பாடிட்டருளி, "திருப்பாற்கடலரசனைப்போலேயும், ஜனகசக்ரவர்த்தியைப்போலேயும் நீரும் நமக்கு மாமனாராகிவிட்டீர்" என்று மிகவும் உகந்தருளி, அவருக்குத் தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டத்துடன் ஸ்ரீசடகோபனும் பிரஸாதித்து "வில்லிபுத்தூருறைவானுக்கே கைங்கர்யம் செய்துகொண்டு வாழ்ந்து வருவீர்" என்று திருவாய் மலர்ந்து விடைகொடுத்தருளினார். பெரியாழ்வாரும்,

"ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன் செங்கண் மால்தான் கொண்டுபோனான்!"

என்று தாம் பாடியது உண்மையானதை நினைத்து ஆச்சர்யப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குச்சென்று முன்போலவே செண்பகம் மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி முதலிய பல மலர்களுடன், ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக்கொண்டு, எண்பத்தைந்து வருடங்கள் வாழ்ந்திருந்து, கடைசியில் திருமாலிருஞ்சோலைமலை சென்று, அழகருக்குச் சிலகாலம் கைங்கர்யம் செய்து வாழ்ந்திருந்து, பேரின்பப்பெருவீடு அடைந்தார்.

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்யமநோநந்தநஹேதவே ।
நந்தநந்தநஸுந்தர்யை கோதாயை நித்யமங்களம் ॥

[விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாருடைய திருவுள்ளமுகக்கக் காரணமாகவும், (அவ்விஷ்ணுசித்தரோடுள்ள உறவாகிய) பெருஞ்செல்வத்தை உடையவளும், நந்தகுமாரனுக்குப் பொருந்திய அழகுடையவளுமான கோதைக்கு என்றும் மங்களமாகுக.]

ஆண்டாள் வைபவம் நிறைவுற்றது. ஆண்டாள் திருவடிகளே ஶரணம்.

திருப்பாவை "மூவாயிரப்படி" உரையை அருளிய

பெரியவாச்சான்பிள்ளை வைபவம்

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா॥

[எவருடைய கடாக்ஷத்திற்கு இலக்கானவர்களுக்கு ஸ்ரீதரன் எப்போதும் கிடைத்தற் கெளியவனே, அத்தகையவராய், யாமுநாசார்யரின் பிள்ளையாய், ஸ்ரீமத்க்ருஷ்ணர் என்னும் பெயரையுடையவரான பெரியவாச்சான்பிள்ளைக்கு வணக்கம்.]

நம்பிள்ளைக்கு "ராமஸ்ய தக்ஷிணே பாஹு:" என்று பெருமாளுக்கு இளையபெருமாள்டோலே வலதுகையாயிருந்து, அவருடைய நியமனம் பெற்று அவருடைய உபந்யாஸ வர்ஷங்களையெல்லாம் வ்யாக்யானங்களாக ஏடுபடுத்தி யருளிய 'ஸ்ரீக்ருஷ்ணர்' என்னும் திருநாமமுடைய பெரியவாச்சான்பிள்ளை (கி. பி 1167) ஸர்வஜித் வருஷத்திலே ஆவணி மாதம் க்ருஷ்ணாஷ்டமீ ரோஹிணியிலே சோழநாட்டில் (தஞ்சை ஜில்லாவில்) உள்ள திருவெள்ளியங்குடிக்கு அருகிலுள்ள சங்கநல்லூரில் பூர்வஸிகை ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்தமரான யாமுநாசார்யருக்கும் நாச்சியாரம்மனுக்கும் திருக்குமாரராய், கண்ணனுடைய அம்ஸமாய் அவதரித்தருளினர். இவருடைய ப்ரபாவத்தைப் பற்றி "பெரிய வாச்சான்பிள்ளை ப்ரபாவ ப்ரகாஸிகை" என்ற பெரிய நூலொன்று ஸௌதர்ஸன ஸ்தாபகரான எந்தையாரால் நாற்பது வருடங்களுக்கு முன் ஸௌதர்ஸனத்தில் தொடங்கப்பெற்று, பதினாறு பக்கங்களுடன் நின்றுவிட்டது. அதிலிருந்து ஒரு பகுதியை அடுத்தபடியாகக் கீழே அளிக்கிறோம்.

பெரியபெருமாள் ப்ரபாவத்தைப் பேசி முடித்தாலும் முடிக்கலாம்; பெரிய வாச்சான்பிள்ளை ப்ரபாவத்தைப் பேசி முடியாதென்பர் பெரியோர். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச்செய்த ஆசாரியர்களுள் இவர்க்கு ஒப்பானவர்கள் முன் அவதரித்ததுமில்லை, இனி அவதரிக்கப் போவதுமில்லை என்று அறுதியிட்டுச் சொல்லலாம். இவருக்கு மேற்பட்டவர் 'ந பூதோ ந பவிஷ்யதி' [முன் இருந்தது மில்லை; இனி உண்டாகப்போவதுமில்லை.] என்பது சொல்லாமலே விளங்கும். இவர் பல நற்குணங்களுக்கு அவதாரஸ்தலமென்றும், சிஷ்ய லக்ஷணத்திற்கும் ஆசார்யலக்ஷணத்திற்கும் ஸீமாபூமி (எல்லைநிலம்) என்றும் புகழ்பெற்று விளங்கினர். இருள்தருமாஞாலம் எனப்பட்ட இந்த பூமி இவர் அவதரித்தபின், அருள்பெற்ற அவனியாகியது. "குணைர் தாஸ்யமுபாகத:" என்கிறபடியே இவருடைய குணங்களுக்கு ஆட்படாதவர் அக்காலத்திலுமில்லை, இக்காலத்திலுமில்லை, எக்காலத்திலுமில்லை என்று சபதமிட்டுச் சொல்லலாம். அவருக்குப் பரமகாருணிகர், அபாரகருணாம்ருதஸாகரர் என்று எல்லாரும் ஒருமிடறாகச் சிறப்புப்பெயர் சூட்டினர்கள். ஸத்வகுணமே உருவெடுத்துவந்தவர் இம்மஹான். இவருடைய

விரிவான கிரந்தங்களுள் ஓரிடத்திலும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளைத் தவறென்று தூஷிப்பது கிடையாது. தப்முடன் ஸமகாலத்தில் எழுந்தருளியிருந்தவர்களையும், அவர்களுடைய கிரந்தங்களையும் தூஷிக்கும் வழக்கமும் இவரிடமில்லை.

"ஆழ்வார்கள் எல்லோரையும் போலல்லர் பெரியாழ்வார்" என்ருர் பிள்ளை லோகாசார்யர். 'ஆசாரியர்கள் எல்லாரையும் போலல்லர் பெரியவாச்சான்பிள்ளை' என்பர் பெரியோர். ரஹஸ்யங்களுக்குச் சேமவைப்பாயிருந்தார் திருக்கோட்டியூர் நம்பிகள். திருவாய்மொழியின் பொருளை விவரித்துச் சொல்ல அதிகாரியாயிருந்தார் திருமாலையாண்டான். ஸ்ரீராமாயணார்த்தத்திற்குப் பெரியதிருமலைநம்பிகளிடம் போய் ஒரு வருஷம் காலக்ஷேபம் செய்யவேண்டியிருந்தது. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு இன்றியமையாத இம்மூன்றின் மறைபொருள்களையும் தம் நெஞ்சிலே தேக்கிவைத்திருந்து, பல்லாயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு உபதேசமும் செய்துவந்ததோடன்றியில், பின்னுளான ஸ்ரீவைஷ்ணவர்களும் உய்யும்படி அருளிச்செயல்கள், ஸ்ரீராமாயணஸ்லோகங்கள், ரஹஸ்யங்கள், ஸ்தோத்திரங்கள், கத்யங்கள் முதலியனவகளுக்குத் தேனிலுமினிய வியாக்கியானங்களை இயற்றிப் பேதை பாமரரும் உணரும்படி செய்த ஆசாரியர் வேறு எவரிருக்கிறார்? அருளிச் செயல்களுக்கு வியாக்கியானம் செய்து, அவற்றை அருளிச்செயலாக்கின பெருமை வேறு எந்த ஆசாரியர்க்குண்டு? 'இவருடைய வியாக்கியான ரஸங்களை அனுபவிப் பவர்கள், 'இச்சுவை தவிர அச்சுவை பெறினும் வேண்டேன்' என்று ஆநந்த நிர்ப்பரராயிருப்பர்கள்.

நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கும் வியாக்கியானம் செய்தவர் இவரொருவரே. நம் தர்சனத்திற்கு அடிப்படையான ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களின் ஆழ்பொருள்களை அறிவதற்கு இவர் அருளிச்செய்த அமுதினுமினிய வியாக்கியானங்களையொழிய வேறு கதியில்லை என்பதை மத்யஸ்தர்களான மதாந்தரஸ்தர்களும் உணர்த்தியுள்ளார்கள். ஆழ்வாராசார்யர்கள் வைபவ நூலில் "விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலே இருக்குமவர்களுக்குத் திருப்பல்லாண்டு முதலிய திவ்யப்ரபந்தமொழிய வேறு கதியில்லை. பூர்வாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையாலே வந்த திவ்யப்ரபந்த தாத்பர்யங்களை அறிகைக்குப் பெரிய வாச்சான்பிள்ளை செய்தருளின வியாக்கியானங்களையொழிய வேறு கதியில்லை. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாரும் பெரியவாச்சான்பிள்ளை ஸம்பந்தம் பெற்று, அவருக்கு சிஷ்யகோடிகளாயிருப்பார்கள்" என்று சொல்லப்பட்டது. இவருடைய திவ்யப்ரபந்த வியாக்கியானங்களைக் காலக்ஷேபம் செய்யாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அப்படியிருந்தார்களாகில்,

"நிந்த்யதஸ் ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே"

[அவன் உலகில் நிந்திக்கப்பட்டவனுகவே வாழ்கிருன். அவனுடைய மனமும் அவனை நிந்திக்கும்.] என்ற கணக்கிலேயாவர்கள்.

இவருக்கு அபயப்ரதராஜர் என்னும் சிறப்புப்பெயர் இவருடைய வியாக்கியானங்களைச் செவிசாற்றின ஸ்ரீரங்கநாதனால் அளிக்கப்பட்டது. ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் அதற்கு இவர் அருளிய வியாக்கியானங்களையும் கேட்பதற்காகவே இன்றும் திருமொழித் திருநாளாகிய அத்யயநோத்ஸவம் நடக்கிறது. ஸ்ரீராமாயண விஷயார்த்தங்களைத் தனிச்லோக வ்யாக்யானமாகவும், ராமசரமச்லோக வ்யாக்யானமான அபயப்ரதான ஸாரமாகவும், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் பல ச்லோகங்களையெடுத்து விவரணம் செய்வதன்மூலமும் வெளியிட்டு, ஸ்ரீராமாயணப்பெருக்கர் என்று பிரஸித்திபெற்றார். அவற்றை லேவித்த மதாந்தரஸ்தர்களும், இவர் வால்மீகி ஹ்ருதயத்தினுள்ளிருக்கும் அந்த ராத்மாவோ, அல்லது வால்மீகியின் அபராவதாரம்தானே என்று ஆச்சரியப்பட்டார்கள்.

மற்றுமுள்ள ஆசாரியர்கள் ஸம்ஸ்க்ருதத்திலோ, ஸம்ஸ்க்ருத வாக்யங்கள் நிறைந்த கடுந்தமிழ் நடையிலோ கிரந்தங்களும் வியாக்கியானங்களும் எழுதியிருக்கிறார்கள். வியாக்கியானங்களில்லாமல் அவற்றின் அர்த்தங்களை அறிவதுஅரிது. இம்மஹாசார்யர் வேதபாஷாவிற்பன்னராயிருந்தபோதிலும் பேதை பாமரர்களும் அருமறைப் பொருளை அறிந்துய்யவேணும் என்கிற தொங்கும் பரிவாலே வடமொழியில் க்ரந்தங்களியற்றுவதில்லை என்கிற விரதம் பூண்டு, முத்தும் மணியும் போன்ற வடமொழி தென்மொழிச் சொற்கள் கலந்த மணி ப்ரவாள நடையில் எளிய தெள்ளிய நடையில் நெஞ்சையுருக்கும் வாக்யரத்னங்கள் பொதிந்த வியாக்கியானரத்நமாலைகளை அருள்மாரியாகப் பொழிந்திருக்கிறார். மற்றுமுள்ள ஆசாரியர்களில் பலரும் பத்தெட்டு கிரந்தங்களுக்குமேல் அருளிச் செய்ததில்லை. நூற்றுக்கணக்கான கிரந்தங்களை இவர் அருளிச் செய்ததாக ப்ரஸித்தியிருக்கிறது. இவைகளில் அநேகம் நம் அஜாக்ரதையினால் மறைந்தன. இப்போதும் நம் பாக்கியத்தால் அறுபது கிரந்தங்களுக்குமேலிருக்கின்றன. அவை முழுவதையும் காலக்ஷேபம் செய்து அறிந்து ஆநந்திப்பதற்கு ஒரு புருஷாயுஸ்ஸும் போராது.

பெரியபெருமாள், பெரியாழ்வார், பெரியவாச்சான்பிள்ளை, பெரியஜீயர் என்று சொல்லப்பட்ட நால்வரும் அவரவர் பெருமையால் 'பெரிய' என்கிற பட்டம் அடைந்து புகழப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பல பெருமைகளையுடைய இம் மஹாசார்யரின் மஹிமையையுணர்ந்த முன்னோர்கள்,

"வ்யாஸோ வால்மீகிர்மா வா கருடः க்ருஷ்ண ஏவ வா ।
புருஹூதிரிதி விதர்க்யாய ஸ்ரீக்ருஷ்ணயாஸ்து மங்களம் ॥"

[இவர் வ்யாஸரோ? வால்மீகியோ? கருடனோ? க்ருஷ்ணன் தானேயோ?' என்று ஞானிகளால் எண்ணப்படுகிற ஸ்ரீக்ருஷ்ணஸன்னிதிக்கு மங்களமுண்டாகக் கடவது.] என்று மொழிந்திருக்கிறார்கள். வடமொழி வேதங்களைப் பிரித்தெடுத்துச்

சிக்கறுத்து, ஸூத்ரங்களாலே அவற்றின் பொருளை விவரித்த க்ருஷ்ணத்வைபாயனரே தமிழ்வேதப்பொருளை விவரிக்க ஸ்ரீகிருஷ்ணஸூரியாய் அவதரித்தாரோ? அல்லது ஆதிகாவ்யமாகவும் வேதோபப்ரும்ஹணமாகவும் விளங்கும் ஸ்ரீராமாயணத்தைப் பாடின வால்மீகியே தம்முடைய ஹ்ருதயத்திலிருந்த அர்த்தங்களை வெளிப்படுத்த அபூர்வப்ரதிராஜராக அவதரித்தாரோ, அல்லது வேதஸ்வரூபவிஹங்கராஜரான பெரிய திருவடியே மறைப்பொருளை மாண்புறச்செய்யப் பெரியவாச்சான் பிள்ளையாக அவதரித்தாரோ, அல்லது பூர்ணவதாரமான ஸ்ரீக்ருஷ்ணபக்ஷவானே உபனிஷத்துக்களாகிற க்ஷீராப்திமையைக் கடைந்து கீதாம்ருதத்தைக் கொடுத்துதவினதுபோல், சரமஸ்லோகார்த்தவ்யாக்யானம் செய்து ப்ரபத்தியின் பெருமையைப்பேசியும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களாகிற அமுதக்கடலைக் கடைந்து, தமிழ்வேத பாஷ்யங்களாகிற ஆராவமுதத்தைஅவனிக்களித்தும் புகர்பெறுகைக்காகத் தன் ஜந்மதினமாகிய ஸ்ரீஜயந்தியிலே 'க்ருஷ்ணன்' என்னும் திருநாமத்துடனேயே திருவவதரித்தானே என்று புத்திமான்கள் எண்ணியெண்ணி அவருக்கு மங்களாசாஸனம் செய்வர்கள்.

[இதுவரை ப்ரபலப்ரகாஸிகா ஸ்ரீஸூக்திகள்]

அவதாரரஹஸ்யம்

பெரியதிருமொழியிலே—

"மெய்ம்மை சொல்லில் வெண்சங்கமொன்றேந்திய
கண்ண! நின்தனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள்தானே" [பெரிய-திரு 7-10-10]

என்று திருமங்கையாழ்வார் திருக்கண்ணமங்கைக் கண்ணன் தம் திருமொழியின் அர்த்தங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுவதை அவன் திருமுகக் குறிப்பிலிருந்து கண்டு, "நீ என்னிடமிருந்து கவியின் பொருளைக் கற்றுக் கொள்ளலாம்" என்று நியமித்தார். அதைக்கேட்ட பரமரஸிகனை கண்ணனும் "அவஸ்யம் உம்மிடமிருந்து கவிப்பொருள்களைக் கற்கிறேன். ஆனால் இப்போது அர்ச்சாவதாரமாகையாலே அது கூடாது. பின்னொருஸமயத்திலே நீர் உமது அவதார திருநக்ஷத்ரமான கார்த்திகையில் கார்த்திகை நாளிலே உமது திருநாமமான 'திருக்கலிகன்றிதாஸர்' என்ற திருநாமத்துடன் இந்தச்சோழ நாட்டிலேயே அவதரிக்கப்போகிறீர். அப்போது நான் இச்சோழநாட்டிலேயே எனது அவதார நக்ஷத்ரமான ஆவணியில் ரோஹிணியிலே (கண்ணன்) க்ருஷ்ணன் என்னும் பெயருடன் அவதரித்து உம்மை ஆசார்யனைக்கொண்டு ஆழ்வார்கள் அனைவருடையவும், ஆண்டாளுடையவும் அருளிச் செயல்களின் பொருள்களையும், மற்றுமுள்ள ரஹஸ்யார்த்தங்களையும், ஸ்ரீராமாயணார்த்தங்களையும் உம்மிடம் இருந்தே கற்றறிந்து உலகுய்ய வெளிப்படுத்துவேன்" என்று அருளிச்செய்தான். அதன்படியே கலிகன்றியாகிய திருமங்கையாழ்வார் திருக்கலிகன்றிதாஸ

ராகிற நம்பிள்ளையாகவும், கண்ணன் ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வரான (க்ருஷ்ண ஸ்ரீ எனும்) பெரியவாச்சான்பிள்ளையாகவும் அவதரித்தனர் என்று பெரியோர் பணிப்பர். இது நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளைகளின் அவதார ரஹஸ்யம். மஹாபாரதத்தைச் செய்த வேதவ்யாஸர் அக்காரணத்தையிட்டே அவரது தகப்பனாரான பராசர மஹரிஷியால் நாராயணனுடைய அம்சாவதாரமாக அறுதியிடப்பட்டதுபோலே, அந்த மஹாபாரதத்தைக் காட்டிலும் சொற்பொருள் பெருமைகள் மிக்க நாலாயிர வ்யாக்யானங்களையும், ஸ்ரீராமாயண தனிஸ்லோகத்தையும், ரஹஸ்ய வ்யாக்யானங்களையும், ஸ்தோத்ரக்ரந்த வ்யாக்யானங்களையும் அருளிய பெரியவாச்சான்பிள்ளையை நாம் எம்பெருமானின் அவதாரமாக அறுதியிடத்தட்டில்லை.

சங்கநல்லூரில் இவரைப்பற்றின சரித்திரம் அதிகமாக வழங்கவில்லை. குடும்பத்தோடு திருமலையாத்ரை எழுந்தருளினரென்றும், அங்கு திருமலை ஸ்ரீநிவாஸனிடம் திருவேங்கடமுடையான் விக்ரஹமொன்றைப் பெற்றருளென்றும், அவ்விக்ரஹத்தைச் சங்கநல்லூரில் ப்ரதிஷ்டை செய்தாரென்றும் அவ்வூரில் வரலாறு வழங்குகிறது. பெருமாளைக் கைப்பிடித்தபின்பு மிதிலைக்குச் சென்றறியாத ஸீதாப்பிராட்டியைப்போலே—தம்முடைய தாய் தந்தையர்களுக்குச் சரம கைங்கர்யம் செய்துவிட்டுத் திருவரங்கத்துக்கு வந்து நம்பிள்ளைதிருவடிகளை ஆஸ்ரயித்த பின்பு "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" [நான் திருவ 63] என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்த ரீதியிலே, நம்பிள்ளை திருவடிகளிலே ஸகலார்த்தங்களையும் கேட்பதிலும், அவருடைய நியமனம்பெற்று அவைகளை வ்யாக்யானங்களாக வடித்தெழுதுவதிலும், அவர் பரமபதித்தபின்பு வடக்குத்திருவீதிப்பிள்ளை முதலான ஸப்ரஹ்மசாரிகளையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் தர்சனம் நிர்வஹிப்பதிலுமே இவருடைய காலமெல்லாம் கழிந்துவந்தபடியால், இவர் சங்கநல்லூருக்குத் திரும்பினதே இல்லை என்று கொள்ளலாம்.

ஸ்ரீரங்கத்தில் இவர் வாழ்ந்தகாலம் முன்னும் பின்னும் காணமுடியாத நல்லடிக் காலமாயிருந்தது. எம்பெருமானார் காலத்திலும், பட்டருடைய காலத்திலும் அரசர்களின் உபத்ரவம் நேர்ந்ததென்று அறிகிறோம். பிள்ளை லோகாசார்யர், வேதாந்ததேசிகர் முதலானார் வாழ்ந்த பிற்காலத்திலும் துருஷ்கர்களால் பேராபத்துக்கள் விளைந்தன என்று அறிகிறோம். இத்தகைய இடையூறுகளில்லாமல் பெரிய கி(ரு)தயுகம் பற்றிப் பேரின்பவெள்ளம் பெருகியதாலேயே இந்த மஹாசார்யரால் சொற்பொருள் பெருமைகள் மிக்க ஏராளமான க்ரந்தங்கள் அருளிச்செய்யப்பட்டன என்று விளங்குகிறது. இவருக்கு ஔரஸபுத்ரரில்லை. மருமகனராய் (ஸஹோதரிபிள்ளையாய்) தத்த புத்ரரான நாயனாராச்சான்பிள்ளை இவரிடமிருந்து ஸகலார்த்தங்களையும் க்ரஹித்தருளினர். இவர் தவிர, பன்னீராயிரட்டியுரையருளிய வாதிகேஸரி அழகிய

மணவாளச் சீயரும், அஹோபிலமடத் ஸ்தாபகரான ஆதிவண்சடகோப ஜீயருக்குப் பரமாசார்யரான ஸ்ரீரங்காசார்யரும், பரகாலநல்லான் ரஹஸ்யம், மைவண்ண நறுங்குஞ்சிக்குப் பெரிய வ்யாக்யானம், ஆசார்யஹ்ருதயத்துக்கு முந்துறமுன்னம் வ்யாக்யானம் ஆகியவையருளிய பரகாலதாஸர் முதலானரும் இவருடைய சிஷ்யர்களாயிருந்தவர்கள் என்பது பெரிய திருமுடியடைவு முதலான க்ரந்தங்களிலிருந்து விளங்குகிறது. வடக்குத்திருவீதிப்பிள்ளையும் நம்பிள்ளை காலத்துக்குப் பிறகு பெரியவாச்சான் பிள்ளையிடம் சில அர்த்த விசேஷங்கள் கேட்டதாக "ஆசார்ய ஸம்மதி" என்னும் தம்ரஹஸ்யத்தில் அருளியிருப்பதாக பகவத்விஷய தனியன் வ்யாக்யானத்தில் காட்டப்பட்டுள்ளது. பின்பழகிய பெருமாள் ஜீயரும் நம்பிள்ளை காலத்துக்குப்பின் இவரை ஆஸ்ரயித்திருந்ததாகப் பெரிய திருமுடியடைவு கூறுகிறது. இதனால் நம்பிள்ளை காலத்துக்குப்பின்பு ஸ்ரீரங்கத்தில் தர்சனம் நிர்வஹித்து வந்தவர் இம்மஹாசார்யரே என விளங்கும்.

வாதிகேஸரி ஜீயர் இவரால் உய்வுபெற்றதைப்பற்றிப் பின்வரும் செய்தியொன்று வழங்குகிறது. பூர்வாஸ்ரமத்தில் அவர் பெரியவாச்சான் பிள்ளைக்குத் திருமடைப்பள்ளி கைங்கர்யம் செய்துவந்தார். நிரக்ஷரகுக்ஷியாகவும் இருந்து வந்தார். அப்பொழுது பெரியவாச்சான்பிள்ளையை ஸேவிக்கவந்திருந்த சில பண்டிதர்கள் அவர் திருமாளிகையில் ஒருபுறத்தில் இருந்துகொண்டு க்ரந்தத்தை ஆராய்ந்துகொண்டிருந்தனர். இவர் 'அது என்ன ஸ்ரீகோசம்?' என்று அவர்களைக் கேட்டார். நிரக்ஷரகுக்ஷியான இவர் க்ரந்தத்தின் பெயரைச் சொன்னலும் புரிந்துகொள்ள முடியாத உலக்கைக்கொழுந்து போன்ற அறிவுடையவர் என்று சுட்டிக்காட்டிப் பரிஹஸிப்பதற்காக "முஸலகிஸலயம்" (உலக்கைக் கொழுந்து) என்று பதில் கூறினர்கள் அவர்கள். யதாஸ்ருதக்ராஹியான இவர் உண்மையில் அப்பெயரையுடைய க்ரந்தத்தையே அவர்கள் பரிஸீலிக்கிறார்கள் என்று எண்ணி, பெரியவாச்சான்பிள்ளையிடம் "அந்த வித்வான்கள் அடியேன் கேட்டதற்கு முஸலகிஸலய க்ரந்தத்தைப் பரிஸீலித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னர்கள், அதுயார் அருளிச்செய்தது?" என்று கேட்டார். பெரியவாச்சான்பிள்ளையும் உண்மையை உணர்ந்து "அப்படியொரு க்ரந்தமில்லை; உன்புத்தி, உலக்கைக்கொழுந்து போன்றுள்ளது என்று பரிஹஸித்திருக்கிறார்கள்" என்று வருத்தத்துடன் சொன்னர். இதைக்கேட்ட அழகியமணவாளர், பெரியவாச்சான்பிள்ளை திருவடியைப்பிடித்துக்கொண்டு 'அடியேனை எப்படியாவது வித்வானாக ஆக்கிவிடவேணும்' என்று பிரார்த்தித்தார். அபயப்ரதராஜரும் அவரை யெழுப்பி அன்போடு அணைத்துக்கொண்டு அபயப்ரதானம் செய்து, அன்று முதல் அக்ஷராப்யாஸம் தொடக்கமாகப் பல கலைகளிலும் பாடம் சொல்லி, தென்மொழி வடமொழி இலக்கண இலக்கியங்களையும், உபயவேதாந்தங்களையும், ஸகல ஸாஸ்த்ரங்களையும் கரைகண்டவராக ஆக்கினர். அதன் பிறகு "முஸலகிஸலயம்" என்றொரு க்ரந்தம் செய்து பரிஹஸித்த வித்வான்கள் நாணும்படி அவர்களிடமே காட்டினர் வரதராஜர் என்று பூர்வாஸ்ர

மத்தில் பெயர் பெற்றிருந்த அவர் என்பது அந்த வ்ருத்தாந்தம். வாதிகேஸரி ஜீயர் அருளிய ''தத்வ நிரூபணம்'' என்னும் க்ரந்தத்தின் தொடக்கத்தில்,

அபயப்ரதநாமாநம் அஸ்மத்குருமஹம் பஜே।
யத்கடாக்ஷாதயம் ஜந்துः அபுநர்ஜந்மதாம் கத: ॥

[ஒன்றுமறியாத விலங்குபோல் இருந்த அடியேன், எவருடைய கடாக்ஷத்தால் பிறவாமை பெற்றேனே, அத்தகைய பெருமைபெற்ற அபயப்ரதர் என்னும் திருநாமமுடைய நம் ஆசார்யரை அடியேன் வணங்குகிறேன்] என்று இவர் அருளிய ஸ்லோகம் இச்செய்தியை உணர்த்துவதாயுள்ளது.

கடலிலும் பெரிதான பெரிவாச்சான்பிள்ளையின் பெருமையில் ஒரு திவலையே இங்கு அனுபவிக்கப்பட்டது. வ்யாக்யான சக்ரவர்த்தியான இவருடைய க்ரந்தங்களிலுள்ள ஒவ்வொரு வாக்யமும் இவர் ஸகலஶாஸ்த்ரங்களையும் கரைகண்டவர் என்பதையும், ஆழ்வார்களாலே மயர்வறமதிநலமருளப் பெற்றவர் என்பதையும், பரமரஸிகர் என்பதையும், பரமகாருணிகரென்பதையும் பறைசாற்றுகின்றது.

இவர் தொண்ணூற்றைந்து திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்ததாகப் பெரியதிருமுடியடைவில் உள்ளதாகையால், இவரது தீர்த்தம் துந்துபி வருஷம் (கி. பி. 1262) எனக்கொள்ளலாம்.

நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்(கு)
எஞ்சாமை யாவைக்குமில்லையே—தம்சிரால்
வையகுரு வின்தம்பி மன்னுமண வாளமுனி
செய்யுமவை தாமும் சில. [உபதேசரத்தினமாலை 47]

பெரியவாச் சான்பிள்ளை பின்புள்ள வைக்கும்
தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய
அருளிச் செயற்பொருளை யாரியர்கட் கிப்போது
அருளிச் செயலாய்த் தறிந்து. [உபதேசரத்தினமாலை 46]

என்று மாமுனிகள் அருளிச்செய்தபடியே பெரியவாச்சான்பிள்ளையின் பேரருளாலேயே பின்புள்ளாரனைவரும் அருளிச்செயற் பொருளையறிந்து ஆசார்யபதம் நிர்வஹிக்கிறார்கள்.

பெரியவாச்சான்பிள்ளை வைபவம் முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை வாழித்திருநாமம்

தண்(ன்)மை சிங்கம் ரோகிணிநாள் தழைக்க வந்தோன் வாழியே*
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே*
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே*
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே*
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே*
மறை நாலின் பொருள்தன்னைப் பகுத்துரைத்தான்வாழியே*
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே*
அபயப்ரதராசர் தாள் அனவரதம் வாழியே.

திருப்பாவை "ஆருயிரப்படி" உரையை அருளிய

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வைபவம்

த்₃ராவிட₃ாம்நாயஹ்ருத₃யம் கு₃ருபர்வக்ரமாக₃தம் |
ரம்யஜாமாத்ருதே₃வேந த₃ர்ஶிதம் க்ருஷ்ண ஸ்ரெயஸா ||

[ஆசார்ய பரம்பராப்ராப்தமான திராவிடவேதஹ்ருதயம் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் குமாரரான அழகியமணவாளப்பெருமாள் நாயனரால் (ஆசார்யஹ்ருத₃யநூலில்) கூட்டப்பட்டது.]

ஆசார்யாக்₃ரேஸரரான பிள்ளையுலகாசிரியர் ஸ்ரீரங்க₄த்தில் க்ரோத₄ன-வரு (கி. பி. 1205) ஐப்பசித் திருவோணத்தில் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்குக் குமாரராய் அவதரித்த₂ராகப் பெரியதிருமுடியடைவில் உள்ளது. கி.பி. 1311ல் நிகழ்ந்த துருஷ்கர் படையெடுப்பின்போது இவர் பரமபதி₃த்ததால் இவர் 106 வருஷங்கள் வாழ்ந்திருக்கவேண்டும். பதின்மூன்றும் நூற்றாண்டின் பெரும்பகுதியில் வாழ்ந்திருந்த பெரியவர் இவர். துருஷ்ககலாபத்தின்போது நம்பெருமாள் விக்ரஹத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்று இடையில் ஜ்யோதிஷ்குடியென்னுமிடத்தில் ஜ்யேஷ்ட₂ மா₃ஸ₂த்₃வாத₃ஶியில் பரமபதி₃த்தார். அப்போது ஸ்ரீரங்க₄த்திலிருந்து ஸ்ருதப்ரகாஶிகையை ஆஶ்ரயித்துக் கொண்டு போன ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகர்க்கு சுமார் 42 திருநக்ஷத்திரமாகிறது. இப்பிள்ளையுலகாசிரியர்க்குத் திருத்தம்பியார் அழகியமணவாளப் பெருமாள் நாயனர்.

அவதார வைபவம்

கார்த்திகையில் கார்த்திகைநாள் காசினியில் வந்துதித்த கலிகன்றியாம் திருமங்கைமன்னனே "கண்ண நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" [பெரிய திருமொழி 7-10-10] என்ற தம் திருவாக்கின்படி, ஸ்ரீஜயந்தியிலேயே அவதரித்த கண்ணனும் பெரியவாச்சான்பிள்ளைக்குக் கவியின் பொருளைக் கற்பிக்கக் கார்த்திகையில் கார்த்திகை நாளிலேயே கலிகன்றியென்னும் திருநாமத்துடன் அவதரித்த பெருமையையுடைய லோகாசார்யரான நம்பின்ளை ஒருநாள் நித்யப்படி காலக்ஷேபம் நிறைவடைந்தவுடன் நடுப்பகலில் ஏகாந்தமாய் எழுந்தருளியிருக்க, அவரது சிஷ்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருத்தாயாரான அம்மி என்பவள், "உம்முடைய சீடனான என் பிள்ளைக்கு ஓர் கல்யாணம் செய்வித்தீரே! அவன் பத்தினியோடு வாழமறுக்கிறான்; வம்ஶத்திற்குப் பிள்ளையில்லாமற் போய்விடும் போல் இருக்கிறதே!" என்று

பெருவருத்தத்துடன் விண்ணப்பிக்க, அவளைத்தேற்றி அவளுடைய மணட்டுப் பெண்ணை அழைத்துவரச்சொல்லி, திருவயிற்றைத் தம் திருக்கையாலே ஸ்பர்சித்து 'நம்மைப்போல் இருக்கும் ஒரு பிள்ளையைப் பெறக்கடவாய்' என்று அநுக்ரஹித்து, வடக்குத் திருவீதிப்பிள்ளையை அழைத்து, ''உம்முடைய விஹிதவிஷய வைராக்ர்யத்தை உணர்ந்தோம்; ஆயினும், லோகமர்யாதைக்கு நாம் சொன்னதற்காக இன்றிராக் கூடியிரும்'' என்று நியமிக்க, அப்படியே கூடியிருந்தவளவில் உண்டான சந்தோஷம் பன்னிரண்டாம் மாதத்தில் பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் ஐப்பசித் திருவோணத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தது. ''லோகாசார்யர் பிள்ளை'' என்று நம்பிள்ளையுடைய திருநாமத்தையே சாத்தி, திருத்தமப்பனாரான வடக்குத் திருவீதிப்பிள்ளையால் ஸகலார்த்தங்களையும் அளித்து வளர்க்கப்பட்ட அவரே பிள்ளையுலகாசிரியர். இவர் திருத்தாயார் திருநாமம் ஸ்ரீரங்கநாச்சியார். இவர் கச்சிநகர் எழுந்தருளும் பேரருளாளனும் வரதனின் அம் ஸாவதாரமே என்பதை மாமுனிகள் தாமே ஓர் ஐதிஹ்யத்தின் மூலம் ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாந ப்ரவேசத்தில் (நமது பதிப்பு பக்கம் 33-36) நிலை நாட்டியருளினர்.

பிள்ளைலோகாசார்யருடைய அப்ரதிமபூர்த்திக்கு நம்பெருமாளே ஸேவிப்பதற்காகக் குழந்தையைப் பல்லக்கில் எழுந்தருளுவித்து, நம்பிள்ளை முதலான பெரியவர்களனைவரும் கோயிலுக்குச் சென்று மங்களாசாஸனம் செய்ய, பெருமாளும் நம்பிள்ளையை அர்ச்சகமுகமாக, ''உம்மைப்போல் ஒருபிள்ளையை அருளினீரே; இனிநம்மைப்போல் ஒரு பிள்ளையை அருளும்'' என்று நியமிக்க, நம்பிள்ளையும் அதை அங்கீகரிக்க அவ்வநுக்ரஹத்தாலே பிள்ளையுலகாசிரியர்க்குத் திருத்தம்பியார் அவதரித்தருளினார். அழகியமணவாளனின் பிள்ளை என்பது தோற்ற அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்று அவருக்குத் திருநாமம் சாத்தி, ராமலக்ஷ்மணர்களைப்போலும், பலராம க்ருஷ்ணர்களைப்போலும் அவர்களை வளர்த்து வந்தனர்.இது இவர்களின் அவதாரப்பெருமை.

நிஷ்டாவைபவம்

திருத்தகப்பனாரைப்போலே பரமவிரக்தரான இப்பிள்ளைகளிருவரும், வைராக்யபங்கம் ஏற்படலாகாது என்னும் திருவுள்ளத்தாலே நைஷ்டிகப்ரஹ்ம சாரிகளாகவே இறுதிவரையில் வாழ்ந்து வந்தனர். இப்பெருமையாலேயே, குருஹஸ்தர்களாயிருந்த மற்ற ஆசார்யர்கள் ப்ரபந்நனுக்கு விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம் (சிறப்பு) என்று சொல்லத் துணியாதபோது, பிள்ளை யுலகாசிரியர் ஸ்ரீவசநபூஷணத்திலே இவ்வரும் பொருளை ஸூத்ரமிட்டருளினர்.

பிள்ளைலோகாசார்யரின் திருத்தம்பியாரான நாயனாரின் திருநக்ஷத்ரம் தை கழி அவிட்டம். பஞ்சஸம்ஸ்காரங்களும் நித்யாநுஸந்தானமும் ஸாதித்

தருளினவர் திருத்தகப்பனாரான வடக்குத்திருவீதிப்பிள்ளை. ஸ்ரீபாஷ்யாதீக்ரந்தங்களும், ஸ்ருதப்ரகாசிகையும், ரஹஸ்யங்களும், ரஹஸ்யவ்யாக்யானங்களுமாகிய ஸகலார்த்தங்களையும் ஸாதித்தருளின ஆசார்யர் நம்பிள்ளை திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களும், அவற்றின் வ்யாக்யானங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் திருத்தமையனாரான பிள்ளைலோகாசார்யர். இவர் திருத்தாயார் ஸ்ரீரங்கநாச்சியார். இவர்செய்தருளின தலைசிறந்த க்ரந்தம் ஆசார்யஹ்ருதயம். ஸ்ரீவசனபூஷணத்தைப் பற்றிச் சிலர் ஆக்ஷேபிக்க, அதில் அருளப்பட்ட அர்த்தங்களை நிலைநிறுத்துவதற்காகவே அழகியமணவாளன் திருமுன்பே, அவர் திருத்தம்பியாரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாராலே ஆசார்யஹ்ருதயம் என்னும் அத்புதக்ரந்தம் அருளிச்செய்யப்பெற்று, நம்பெருமாளின் அங்கீகாரத்தையும் அநுக்ரஹத்தையும் இந்த திவ்யக்ரந்தம் அடைந்தது. திருப்பாவை ஆறாயிரப்படி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலான சில திவ்யப்ரபந்தங்களுக்கு வ்யாக்யானங்கள், அருளிச்செயல் ரஹஸ்யம் ஆகியவை இவரது மற்ற க்ரந்தங்கள். "தஞ்சீராரால் வையகுருவின் தம்பி செய்யுமவைதாமும் சில" [உபதேச 47] என்று இவர் சில திவ்யப்ரபந்தங்களுக்கு விரிவாக வ்யாக்யானம் செய்தருளியதை மாமுனிகள் எடுத்துக்காட்டினர். பிள்ளைலோகாசார்யருக்கு இரண்டு அல்லது மூன்று வருஷங்களே இளையவரான இவர் சுமார் நூறுவருடங்கள் வாழ்ந்து, பிள்ளைலோகாசார்யருக்கு முன்னதாகவே ஸ்ரீரங்கத்தில் பரமபதித்தருளினர். பிள்ளைலோகாசார்யர் பரமபாகவதரான இவரது விஸ்லேஷத்தாலே மிகவும் வருந்தியவராய், இவர் திருமுடியைத் தம் மடியிலே வைத்துக்கொண்டு "மாமுடும்பை மன்னு மணவாளவண்ணலொடு சேமமுட்ன் வைகுந்தம் சென்றக்கால்—மாமென்று தொட்டுரைத்த சொல்லும் துயந்தன்னினுழ்பொருளும் எட்டெழுத்து மிங்குரைப்பாரார்?" என்று பலவாறு புலம்பித் திருமுத்துதிர்த்து (கண்ணீர் பெருக்கி), முதலிகள் தேற்றத்தேறி நின்று, நாயனாருக்குச் சரம கைங்கர்யம் செய்து திருவத்யயனமும் நடத்தியருளினர்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வாழித்திருநாமம்

மன்னியசீர் மதிளரங்கம் மகிழவந்தோன் வாழியே*
மார்கழியில் அவிட்டத்தில் வந்த வள்ளல் வாழியே*
மின்னுபுகழ் ஆர்யமனம் மொழிந்தருள்வோன் வாழியே*
மேன்மைமிகு திருப்பாவை விரித்துரைத்தான் வாழியே*
தென்னுரையில் உலகாரியன் திருவடியோன் வாழியே*
ஸ்ரீக்ருஷ்ணபாதகுரு செல்வமைந்தன் வாழியே*
அன்னபுகழ் முடும்பை நம்பிக் கன்புடையோன் வாழியே*
அழகியமணவாளன்தன் அடியிணைகள் வாழியே.

[ஆர்யமனம்—ஆசார்யஹ்ருதயம்]

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வைபவம் முற்றிற்று.

திருப்பாவை "முப்பத்து மூவர்" "நாலாயிரப்படி" உரைகள் அருளிய
"திருநாராயணபுரத்து ஆய்" (என்னும்)
ஜநந்யாசார்யர் வைபவம்

ஆசார்யஹ்ருத³யஸ்யார்த்தா³: ஸகலா யேந த³ர்ஶிதா:।
ஶ்ரீஸாநுதா³ஸமமலம் தே³வராஜம் தமாஶ்ரயே॥

[ஆசார்ய ஹ்ருத³யத்தின் அர்த்த³ங்கள் அனைத்தையும் அருளிச்செய்தவராய், ஸ்ரீஸாநுதா³ஸர், தே³வராஜர் என்னும் திருநாமங்களை உடையவரான திருநாராயணபுரத்தாயை ஆஶ்ரயிக்கிறேன்.]

ஸ்ரீயாத³வாத்³ரி, திருநாராயணபுரம், அஷ்டோத்தரஶத ஸ்தா²னஸாரம், த³க்ஷிண பா³த³ரிகாஶ்ரமம், வைகுண்டா²வர்த்த²நக்ஷேத்ரம், இந்தி³ராக்ஷேத்ரம், ஸம்யமி ஸார்வபௌ²ம விஜயஸ்தா²னம் என்னும் பல பல திருநாமங்களால் விளங்குகிற (மேலக்கோட்டை) தி³வ்யக்ஷேத்ரத்தில், ஸேனைமுதலியார் அவதரித்த ஓங்கு துலாப் பூராட நன்னாளில் உதித்து, எம்பெருமானார் தம் திருக்கைகளாலே திருவாராத⁴னம் ஸமர்ப்பித்த திருநாராயணப் பெருமாளுக்கும், ராமப்ரியனும், யதிராஜ ஸம்பத்குமாரனுமான செல்வப்பிள்ளைக்கும் யஶோத³ரா தே³வியைப் போலப் பாலமுதும், ஸ்ரீமாலாகாரர், ஸ்ரீவிஷ்ணுசித்தர், ஆண்டாள் முதலானவர்களைப்போலப் புஷ்பமும் ஸமர்ப்பித்துக்கொண்டு புஷ்ப க்ஷீர கைங்கர்ய நிரதராய், நம் த³ர்ஶனத்தை நிர்வஹித்துக்கொண்டு ஸத்ஸம்ப்ரதா³ய ப்ரவர்த்தகராய் விளங்கினவராய், "திருநாராயணபுரத்தாய்" "திருத்தாழ்வரைதாஸர்" (ஸ்ரீஸாநுதா³ஸர்), "ஜநந்யாசார்யர்" "மாத்ருகு³ரு" "ஆயி" "தே³வராஜர்" என்று ப்ரஸித்³தி⁴ பெற்றவரே இம்மஹாசார்யர்.

எம்பெருமானார் திருவவதரித்த வம்ஶம்—ஹாரீத வம்ஶம். "ஆஸுரிப் பெருமாள்" "ஆஸுரிதே³வர்" என்று ப்ரஸித்³தா⁴ரான ஆஸுரி புண்ட³ரீகாக்ஷர் இந்த ஹாரீத வம்ஶத்தில் அவதரித்து, எம்பெருமானரை அடிபணிந்து போந்த மஹாநுபா⁴வர். இவர் 74 ஸிம்ஹாஸநாதி⁴பதிகளில் ஒருவர். "குடீங்க்ருத்வா தஸ்மிந் யது³கி³ரிதடே நித்யவஸதி:" என்று எம்பெருமானர் பரமபத³த்துக்கெழுந்தருளுவதற்கு முன்பு நியமித்த ஆறு உபதே³ஶங்களில் நான்காவதான ஸ்ரீயாத³வகி³ரியில் நித்யவாஸத்தை ஆத³ரித்து இந்த ஆஸுரிப்பெருமாள் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளி எம்பெருமானர் திருவுள்ளத்துக்குகப்பாக அங்கே நிலையாகநின்று பெருமாளுக்கு மங்க³ளாஶாஸநபரராய், த³ர்ஶந நிர்வாஹகராய் எழுந்தருளியிருந்தார். இவர் வம்ஶத்தில் அவதரித்தவர் ஜநந்யாசார்யர். இவர் திருத்தகப்பனார் திருநாமம் லக்ஷ்மணாசார்யர். இவர் திருக்குமாரர் கேசவாசார்யர். இந்த ஆயி ஸ்வாமி ஸர்வஸங்க³ பரித்யாக³ம் பண்ணி உத்துங்க³மான ஸந்யாஸாஶ்ரமத்தையும் ஸ்வீகரித்தார்.

நம்பிள்ளையின் சிஷ்யர்களில் ஒருவராய், அவரிடமிருந்து திருவாய்மொழி மீட்டைப் பெற்றவர் ஈயுண்ணிமாதவர். இவருடைய சிஷ்யர் பரம்பரையிலேயே ஈடு ஓராண் வழியாய் உபதேசிக்கப்பெற்று வந்தது. இவருடைய குமாரர் (சிஷ்யர்) ஈயுண்ணி பத்மநாபர். இவருடைய சிஷ்யர் நாலூர்ப்பிள்ளையென்னும் ஸோமநாதர்கோலேஶர். இவருடைய குமாரர் (சிஷ்யர்) தேவராஜர் என்னும் நாலூராச்சான்பிள்ளை. இவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர் திருநாராயணபுரத்தாய் என்னும் ஜநந்யாசார்யர்.

தேவராஜர்க்கு "ஆய்" என்று திருநாமம் வந்த வகையாவது:— இவர் தினந்தோறும் பரிவுடன் செல்வப்பிள்ளைக்கு ரஸவிஶேஷம் குறையாமல் ஸுகோஷ்ணமாயும், ஏலாலவங்கநாகரங்குமபரிமளயுக்தமாயும் பாலமுது காய்ச்சி அமுது செய்யப்பண்ணிவந்தார். ஒருநாள் பாலமுது கொண்டுவரச் சிறிது தாழ்க்கவே, செல்வப்பிள்ளை அதுபொறுமல் 'நம் ஆய் (தாய்) எங்கே? இன்னம் காணோமே?' என்று அர்ச்சகமுகேந வினவினபடியாலே இவருக்கு 'ஆய்' என்றும், 'ஜநந்யாசார்யர்' என்றும் திருநாமமுண்டாயிற்று என்பர்.

பகவத்பாகவதர்களுக்குத் தாய்போலே பரிவுகாட்டி வந்தமையாலே 'ஆய்' என்றும், 'ஜநநீ' என்றும் சிறப்புப்பெயர் பெற்றவர் என்றும் கொள்ளலாம். தேவராஜர் என்பது இவருடைய இயற்பெயர். திருநாராயணபுரத்தில் அவதரித்தவராகையாலே 'திருநாராயணபுரத்து ஆய்' என்று அழைக்கப்படுவர். இவர் அருளிய ஶ்ரீவசந பூஷண வ்யாக்யானமும், இவர் அருளிய திருப்பாவை வ்யாக்யானங்களான ஈராயிரப்படியும் நாலாயிரப்படியும் இப்போது உள்ளன. திருமாலைக்கும் ஆசார்யஹ்ருதயத்திற்கும் இவர் வ்யாக்யானமிட்டருளியுள்ளதாகப் பெரியதிருமுடியடைவு கூறும். அவை இப்போது கிடைப்பதில்லை. X

ஆயி சிஷ்யர் நல்லப்பநாயன்—என்பவரை, பிள்ளைலோகம் ஜீயர் "சச்சம் பிரதாயம்" [உபதேச. 58] என்கிறபாட்டு வ்யாக்யாநத்தில் கூறியிருக்கிறார். 'ஆயி' பெருமை கூறும் பின்வரும் பாடலையும் எடுத்துள்ளார்.

மாறில் முடும்பை உலகாரியன் வசனக்கலனும்
மாறன் கருத்தின் மணவாளன் வார்த்தையும் வல்லிருளைச்
சிறுப்படி திருத்தாழ்வாரை தாதன் தெரிந்தெனக்குத்
தேறும்படி யுரைத்தான் திருத்தாள்களென் சென்னியதே.

[வசனக்கலன்—வசநபூஷணம். மாறன் கருத்தின் மணவாளன் வார்த்தை — ஆசார்யஹ்ருதயம்] என்று பிள்ளைலோகம் ஜீயர் எடுத்துள்ள பாடல் இவரை ஆசார்யஹ்ருதயஶ்ரீவசநபூஷண ப்ரவசனத்தில் ஈடுபட்டவராகக் காட்டுகிறது.

மாமுனிகளுக்கும் இவருக்குமுள்ள ஸம்பந்தம் யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:—

(மாமுனிகள்) ஆசார்யஹ்ருதயத்திற்குப் பொருள் அருளிச்செய்யும்போது ''ஜ்ஞானசதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்தஷஷ்டிகளுக்குதயம்'' என்கிற வாக்யத்திற்கு அர்த்தம் ஸ்வரஸமாக ஆகாமையாலே, இதற்கு அர்த்தமருளிச் செய்வாரார்? என்று விசாரமுண்டாய், திருநாராயணபுரத்தாயி பக்கலிலே இவ் வர்த்தம் கேட்கவேணும் என்னும் பேராசையோடே ஆழ்வாருக்கு விண்ணப்பஞ் செய்து அவரநுமதிகொண்டு திருநாராயணபுரத்துக்குப் போவோமென்று புறப்பட்டெழுந்தருளாநிற்க, ஆயியும் ஜீயருடைய ப்ரபாவங்கேட்டு இவரை ஸேவிப்பதாகத் திருநகரிக்கு ஆஸந்நமாக மார்க்கமத்யே வந்து ஸங்கதராக அவரைக்கண்டு, ''எண்ணின பலம் எதிரிலே வரப்பெறுவதே!'' என்று பெரிய ப்ரீதியோடே தீர்க்கப்ரணமம் பண்ணிநிற்க, ஆயியும் தாளுந் தடக்கையுங் கூப்பி ஸேவிக்க, இருவரும் அந்யோந்யம் வந்தநபரராய் குஶலப்ரஶ்நம் பண்ணி நிற்க, இதைக்கண்டு ஜீயர் ஶ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் ''பெரிய நம்பியும் எம்பெருமானரும் எதிர்ப்பட்டாப்போலாயிற்று'' என்று மிகவும் உகந்தருளினர்கள். அநந்தரம் குன்றமாடத்திருக்குருகூரேற எழுந்தருளி, ஆயி பக்கலிலே ''ஆசார்யஹ்ருதயஸ்யார்த்தஸ் ஸகலா யேந தர்ஶிதா:। ஶ்ரீஸாநுதாஸமமலம் தேஶிகராஜம் தமாஶ்ரயே ॥'' என்று அந்த உபகாரஸ்ம்ருதிக்கு அவர் விஷயமாக ஒரு தனியனருளிச்செய்தருள; ஆயி தமக்கு அதில் அந்வயமற்றபடி தோற்ற

பூதூரில் வந்துதித்த புண்ணியனே? பூங்கமழும்
தாதாரு மகிழ்மார்பன் றனிவனே?—தூதூர
வந்த நெடுமாலோ? மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்?

என்று அருளிச்செய்து, ஜீயரை அவதாரவிஶேஷமென்று ஆதரித்துக்கொண்டு ஆழ்வாரையும் அநுதினம் ஸேவித்துக்கொண்டு ஆங்கே சிலகாலமெழுந்தருளியிருக்க;

அதுவே ஹேதுவாக 'ஆயி திருநாட்டுக்கெழுந்தருளினர்' என்று திருநாராயணபுரத்திலுள்ள அஸ்மதாசார்யர்கள் திருமாளிகையிலுள்ள ஸர்வஸ்வத்தையும் செல்லப்பிள்ளை அங்கீகரித்தருளும்படி ஶ்ரீபண்டாரத்தில் சேர்க்க, அக்காலத்திலே ஆயியும் மீண்டு திருநாராயணபுரத்துக்கெழுந்தருளி இச்செய்தியைக் கேட்டு ஹ்ருஷ்டராய், ''யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்'' [எவனுக்கு நான் அருள்புரிய விரும்புகிறேனோ, அவனுடைய செல்வத்தை எடுத்துக்கொள்கிறேன்.] என்னும் திருமுகப்படியே ப்ரத்யக்ஷமாகச் செல்வப்

பிள்ளை இத்தைக் கைக்கொண்டருளியபின்பு நாம் இனி இரக்கத்துக்கு விஷய மென்கிறது கிப்புநர்ந்யாயஸித்₃த₄மிறே. "யஸ்யைதே தஸ்ய தத்₃த₄நம்" [மனைவி, புத்ரன், அடிமை ஆகியவர்களுடைய செல்வம் அவர்களுடைய யஜமானனுக்கே உரியது] அன்றே?' என்று ஈடுபட்டு ஆநந்த₃ாஶ்ருக்கள் பனிப்ப எழுந்தருளி, ஆசார்யக்ருபாலப்₃த₄ரான ஞானப்பிராஞ்ருவரையுமே அர்த்தி₂த்துப்பெற்று மற்றவைகளையெல்லாம் அங்குத்தைக்கு ஸமர்ப்பித்து, யாத₃வகி₃ரி நிலயனுக்கு மால்ய ஸமர்ப்பணைகநிஷ்ட₂ராய், அங்கே ப்ரீதராயெழுந்தருளியிருந்தார்.

மாதவத்தோர் வாழ்த்தும் முடும்பை மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோ ரானபெற்றூர் — நிதற்ற
ஆசா ரியவிதயம் பெற்றூர்நம் மாயியிவர்
தேசாரத் தாள்கள்நெஞ்சே! காண்.

என்று ஆசார்யஹ்ருத₃ய ஸம்ப்ரத₃ாயத்தைத் தாம் (மாமுனிகள்) அனுஸந்தி₄த்தருள அப்படியே முதலிகளும்

மாதவத்தோன் மாறன் மனங்கூறும் மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோ ரானபெற்றூர்—நீதியினால்
ஆங்கவர்தாள் சேரப் பெற்றூர் ஆய்மணவாளன்
பூங்கமலத் தாள்கள் நெஞ்சே போற்று.

என்று அநுஸந்தி₄த்தார்கள்.

பூர்வாஷாட₄ாவதீர்ணாய துலாயாம் யது₃பூ₃த₄ரே ।
ஶ்ரீஸாநுதா₃ஸகு₃ரவே தே₄வராஜாய மங்க₃ளம் ॥

[திருநாராயணபுரத்தில் ஐப்பசிப் பூராடத்தில் அவதரித்தவராய், திருத்தாழ்வரை தா₃ஸர் எனப்படும் தே₄வராஜருக்கு மங்களம்.]

ஜநந்யாசார்யர் வைப₄வம் முற்றிற்று.

ஆய் என்கிற ஜநந்யாசார்யர் வாழித்திருநாமம்

ஒங்கு துலா பூராடத் துதித்த செல்வன் வாழியே*
ஒண்மதியோன் எதிராசன் ஒண்சரணோன் வாழியே
பாங்குடனே ஞானப்பிரான் பணியுமவன் வாழியே*
பஞ்சமத்தின் பொருள் தன்னைப் பரிந்துரைத்தோன் வாழியே
தேங்குபுகழ் தேவராசர் திருவருளோன் வாழியே*
தென்மறையின் மனப்பொருளைத் தெளிவித்தான் வாழியே
தாங்கு திருக்கை திரிதண்டம் தரித்த வள்ளல் வாழியே*
திருத்தாழ்வரை தாதர் திருவடிகள் வாழியே.

[பஞ்சமம் - பஞ்சமோபாயமான ஆசார்யாபி₄மானம்; தேவராசர் - நாலூராச்சான் பிள்ளை]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விஷயஸூசிகை

I முற்சேர்க்கைகள் (புரோபந்நங்கள்)

எண்.	விஷயம்	பக்கம்
1	பதிப்பாசிரியரின் முன்னுரை	1-2
2	ஆண்டாள் வைபவம்	3-9
3	பெரியவாச்சான்பிள்ளை வைபவம்	10-16
4	அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வைபவம்	17-19
5	ஜனன்யாசார்யர் (திருநாராயணபுரத்து ஆய்) வைபவம்	20-23
6	விஷயஸூசிகை	24-28

II வ்யாக்யானங்கள்

1	திருப்பாவை தனியன் வ்யாக்யானம்	1-8
2	மூவாயிரப்படி (ஆருயிரப்படி) அவதாரிகை	9-16
3	ஈராயிரப்படி அவதாரிகை	17-19
4	நாலாயிரப்படி அவதாரிகை	20-22
5	மார்கழித்திங்கள் (1) மூவாயிரப்படி	23-38
6	,, ஆருயிரப்படி	39-46
7	,, ஈராயிரப்படி	47-49
8	,, நாலாயிரப்படி	49-53
9	,, தொட்டாசாரியர் ஸ்வாபதேஸ வ்யாக்யானம்	54-56
10	வையத்து வாழ்வீர்காள் (2) மூவாயிரப்படி	56-68
11	ஆருயிரப்படி	69-74
12	ஈராயிரப்படி	74-76
13	நாலாயிரப்படி	76-79
14	ஸ்வாபதேச வ்யாக்யானம்	79-80
15	ஓங்கி உலகளந்த (3) மூவாயிரப்படி	81-89
16	,, ஆருயிரப்படி	90-94
17	,, ஈராயிரப்படி	94-95
18	,, நாலாயிரப்படி	95-98
19	,, ஸ்வாபதேச வ்யாக்யானம்	99
20	ஆழிமழைக்கண்ணா (4) மூவாயிரப்படி	100-107
21	,, ஆருயிரப்படி	107-112
22	,, ஈராயிரப்படி	112-113
23	,, நாலாயிரப்படி	113-116
24	,, ஸ்வாபதேசவ்யாக்யானம்	116-117
25	மாயனை மன்னு (5) மூவாயிரப்படி	117-124
26	,, ஆருயிரப்படி	125-129

27	மாயனைமன்னு	ஈராயிரப்படி	130-131
28	,,	நாலாயிரப்படி	131-134
29	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	134-135
30	புள்ளும் சிலம்பினகாண் (6)	மூவாயிரப்படி	135-143
31	,,	ஆருயிரப்படி	144-147
32	,,	ஈராயிரப்படி	147-149
33	,,	நாலாயிரப்படி	149-153
34	,,	ஸ்வாபதேஶவ்யாச்யாநம்	153-154
35	கீசு கீசென்று (7)	மூவாயிரப்படி	155-159
36	,,	ஆருயிரப்படி	160-162
37	,,	ஈராயிரப்படி	162-163
38	,,	நாலாயிரப்படி	164-167
39	,,	ஸ்வாபதேஶவ்யாக்யாநம்	167-168
40	கீழ்வானம் வெள்ளென்று (8)	மூவாயிரப்படி	168-173
41	,,	ஆருயிரப்படி	174-176
42	,,	ஈராயிரப்படி	177-178
43	,,	நாலாயிரப்படி	178-180
44	,,	ஸ்வாபதேஶவ்யாக்யாநம்	180-181
45	தூமணி மாடத்து(9)	மூவாயிரப்படி	181-185
46	,,	ஆருயிரப்படி	185-188
47	,,	ஈராயிரப்படி	188-189
48	,,	நாலாயிரப்படி	190-192
49	,,	ஸ்வாபதேஶவ்யாக்யாநம்	192-193
50	நோற்றுச்சுவர்க்கம் (10)	மூவாயிரப்படி	194-199
51	,,	ஆருயிரப்படி	200-203
52	,,	ஈராயிரப்படி	204-205
53	,,	நாலாயிரப்படி	205-207
54	,,	ஸ்வாபதேஶவ்யாக்யாநம்	208
55	கற்றுக்கறவை (11)	மூவாயிரப்படி	209-213
56	,,	ஆருயிரப்படி	213-216
57	,,	ஈராயிரப்படி	217-218
58	,,	நாலாயிரப்படி	219-221
59	,,	ஸ்வாபதேஶவ்யாக்யாநம்	221
60	கனைத்திளங்கற்றெருமை (12)	மூவாயிரப்படி	222-225

61	கனத்திளங்கற்றெருமை ஆருயிரப்படி	227-230
62	,, ஈராயிரப்படி	230-231
63	,, நாலாயிரப்படி	232-234
64	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	234-235
65	புள்ளின்வாய் கீண்டானை (13) மூவாயிரப்படி	236-240
66	,, ஆருயிரப்படி	241-243
67	,, ஈராயிரப்படி	244-245
68	,, நாலாயிரப்படி	245-247
69	,, ஸ்வாபதேஸவ்யாக்யாநம்	247-248
70	உங்கள் புழைக்கடை(14) மூவாயிரப்படி	249-252
71	,, ஆருயிரப்படி	252-255
72	,, ஈராயிரப்படி	255-256
73	,, நாலாயிரப்படி	257-258
74	,, ஸ்வாபதேஸவ்யாக்யாநம்	258-259
75	எல்லே இளங்கிளியே (15) மூவாயிரப்படி	259-264
76	,, ஆருயிரப்படி	265-269
77	,, ஈராயிரப்படி	269-270
78	,, நாலாயிரப்படி	271-273
79	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	273-274
80	நாயகனாய் நின்ற (16) மூவாயிரப்படி	274-280
81	,, ஆருயிரப்படி	281-288
82	,, ஈராயிரப்படி	289-290
83	,, நாலாயிரப்படி	291-294
84	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	295
85	அம்பரமே தண்ணீரே (17) மூவாயிரப்படி	296-300
86	,, ஆருயிரப்படி	301-306
87	,, ஈராயிரப்படி	306-307
88	,, நாலாயிரப்படி	307-308
89	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	309
90	உந்து மதகளிற்றன் (18) மூவாயிரப்படி	310-316
91	,, ஆருயிரப்படி	317-324
92	,, ஈராயிரப்படி	324-326
93	,, நாலாயிரப்படி	326-329
94	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	329-330
95	குத்து விளக்கெரிய (19) மூவாயிரப்படி	330-336
96	,, ஆருயிரப்படி	337-344

97	குத்துவிளக்கெரிய	ஈராயிரப்படி	344-345
98	,,	நாலாயிரப்படி	345-348
99	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	348-349
100	முப்பத்து மூவர் (20)	மூவாயிரப்படி	349-353
101	,,	ஆருயிரப்படி	354-359
102	,,	ஈராயிரப்படி	360.
103	,,	நாலாயிரப்படி	361-362
104	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	362-363
105	ஏற்றகலங்கள் (21)	மூவாயிரப்படி	363-368
106	,,	ஆருயிரப்படி	369-374
107	,,	ஈராயிரப்படி	374-375
108	,,	நாலாயிரப்படி	375-376
109	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	377.
110	அங்கண் மா ஞாலத்து (22)	மூவாயிரப்படி	378-382
111	,,	ஆருயிரப்படி	383-387
112	,,	ஈராயிரப்படி	388.
113	,,	நாலாயிரப்படி	389-390
114	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	390-391
115	மாரி மலை முழைஞ்சில் (23)	மூவாயிரப்படி	391-397
116	,,	ஆருயிரப்படி	398-403
117	,,	ஈராயிரப்படி	404-405
118	,,	நாலாயிரப்படி	405-407
119	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	407-408
120	அன்றிவ்வுலகம் (24)	மூவாயிரப்படி	408-414
121	,,	ஆருயிரப்படி	415-422
122	,,	ஈராயிரப்படி	422-423
123	,,	நாலாயிரப்படி	423-425
124	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	425-426
125	ஒருத்தி மகனாய் (25)	மூவாயிரப்படி	427-432
126	,,	ஆருயிரப்படி	432-438
127	,,	ஈராயிரப்படி	438-439
128	,,	நாலாயிரப்படி	439-442
129	,,	ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்	442.
130	மாலே மணி வண்ணா (26)	மூவாயிரப்படி	443-449
131	,,	ஆருயிரப்படி	449-454

132	மாலே மணி வண்ணு ஈராயிரப்படி	454-455
133	,, நாலாயிரப்படி	456-458
134	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	458-459
135	கூடாரை வெல்லும் (27) மூவாயிரப்படி	460-464
136	,, ஆருயிரப்படி	464-471
137	,, ஈராயிரப்படி	472-473
138	,, நாலாயிரப்படி	473-475
139	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	475-476
140	கறவைகள் பின் சென்று (28)மூவாயிரப்படி	477-484
141	,, ஆருயிரப்படி	485-500
142	,, ஈராயிரப்படி	501-502
143	,, நாலாயிரப்படி	502-504
144	,, ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	504-505
145	சிற்றம் சிறுகாலே (29) மூவாயிரப்படி	505-510
146	,, ஆருயிரப்படி	511-523
147	,, ஈராயிரப்படி	524-525
148	,, நாலாயிரப்படி	525-528
149	,, ஸ்வாபதேஸ வ்யாக்யானம்	528-529
150	வங்கக்கடல் கடைந்த (30) மூவாயிரப்படி	529-534
151	,, ஆருயிரப்படி	534-543
152	,, ஈராயிரப்படி	543-544
153	,, நாலாயிரப்படி	544-546
154	திருப்பாவை நாலாயிரப்படி ஸ்வாபதேஸம்	546-548
155	வங்கக்கடல் கடைந்த (30) ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்	549.
156	வ்ாணமாமலை ஜீயர் திருப்பாவை ஸ்வாபதேஸம்	550-573

III பிற்சேர்க்கைகள் (அனுபந்தங்கள்)

1	திருப்பாவை வ்யாக்யாந ப்ரமாணத்திரட்டு	574-694
2	ஐதிஹ்ய நிர்வாஹங்கள்	695-710
3	தமிழ் அருஞ்சொல் அகராதி	711-725
4	பெயர் அகராதி	725-726
5	பாடபேதங்கள்	727-736
6	பிழைதிருத்தம்	737-739
7	ஆகரம் அல்லது முழுவடிவம் தெரியாத ப்ரமாணங்கள்	740-742
8	ப்ரமாணகரபரிஸிஷ்டம்	743-744

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொதுத் தனியன்கள.

அழகிய மணவாளன் அருளிச்செய்தது.

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம-
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே।
அஸ்மத்குரோர் பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

ஆளவந்தார் அருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

பராசரபட்டர் அருளிச்செய்தது.

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந்।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஆண்டாள் திருவடிகளே சரணம்

திருப்பாவையின் தனியன்களுக்குப்

பிள்ளைலோகஞ்சீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்.

1. அவதாரிகை—(நீளாதுங்கேத்யாதி) பரதத்வத்தில் மற்றைப் பிராட்டிமார்க்குப் பெரியபிராட்டியார் முன்னிலையாக வேண்டினாற்போலே, க்ருஷ்ணாவதாரத்தில் பெரியபிராட்டியார்க்கும் ஆண்டாளுக்குமகப்பட நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக வேணும். அங்குத்தை ஐஸ்வர்யத்துக்குப் பிராட்டி ஸத்ருசையானாற்போலே, இங்குத்தைக்கு இவனுடைய எல்லாப் படிகளுக்கும் குலஶீலாதிகளால் ஸத்ருஶையாயிருக்குமவள். இந்த ஶ்லோகம், பட்டர் தென்னாட்டிலே எழுந்தருளியிருக்க, பெருமாளைப் பிரிந்த வ்யஸநத்தாலே திருவுள்ளம் கலங்கியிருக்கிற தஶையிலே திருவுள்ளம் ப்ரஸந்நமாகைக்காக, நஞ்சீயர் "ஆண்டாளை ஒரு ஶ்லோகமும் ஆழ்வார்களை ஒரு ஶ்லோகமும் அருளிச்செய்யலாகாதோ?" என்ன, அதிப்ரீதராய்த் திருப்பாவைக்கு வாக்யார்த்தமாக அருளிச்செய்து ஆண்டாளை ஶரணம் புகுகிற ஶ்லோகம். 'சேதநரடைய நஞ்சுண்டாரைப்போலே அநாதிமாயையாலே மயங்கிக்கிடந்து உறங்க, இப்படியிருக்கிற ஸம்ஸாரத்துக்குள்ளே, திருவாய்ப்பாடிப் பெண்பிள்ளைகள் பரஸ்பரம் உணருவாரும் உணர்த்துவாருமாய்ப் பரமபதத்தில் யாத்ரைபோலே செல்லாநிற்பதே!' என்று ஆண்டாள்தானும் அநுகாரத்தாலே இவர்களை உணர்த்தினவோபாதி அலன் தன்னையும் உணர்த்தினள்.

பராசரபட்டர் அருளிச்செய்த தனியன்

நீளாதுங்கஸ்தநகிரிதட ஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்ர்யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தமத்யாபயந்தீ |
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: ||

நீளாதுங்கஸ்தநகிரிதட ஸுப்தம்—நப்பின்னைப் பிராட்டியின் உயர்ந்த திருமுலைத் தடங்களாகிற மலைச்சாரலில் திருக்கண்வளர்ந்தருளுமவனும், ஸ்வ உச்சிஷ்டாயாம்—தன்னுல் சூடிக் களையப்பட்ட, ஸ்ரஜி — மாலையிலே, நிகளிதம் க்ருஷ்ணம் — விலங்கிடப்பட்டவனுமான கண்ணபிரானை, உத்போத்ய—திருப்பள்ளியுணர்த்தி, ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தம் — பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலே தேறின [வேதாந்தஸித்தமான], ஸ்வம்—தன்னுடையதான, பாரார்த்ர்யம் — பாரதந்த்ரியத்தை, அத்யாபயந்தீ — அறிவியாநின்ற வளாய், பலாத்க்ருத்ய—வலியச்சென்று, யா கோதா—யாவளொரு ஆண்டாள், புங்க்தே-(அக்கண்ணபிரானை) அநுபவிக்கிறளோ, தஸ்யை—அப்படிப்பட்டபெருமையையுடையவளான ஆண்டாளின் பொருட்டு, பூயோ பூய ஏவ—காலதத்துவமுள்ள வரையிலும், இதம் இதம் நம:—இந்த இந்த நமஸ்காரமானது, அஸ்து—ஆயிடுக.

வ்யாக்₂யாநம் — (நீளா) அவன் A 'நந்தகோபன் தனின்னுயிர்ச்சிறுவனே யசோதைக்கடுத்த பேரின்பக்குலவிளங்களிறே" என்றும், B "நந்தகோபன்குமரன் ஏராரந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம்" என்றும் இருவருக்கும் மகனுக அவதரித்தாற்போலே, இவளும் யசோதைப் பிராட்டி ஸஹோத₃ரரான ஸ்ரீ கும்ப₄ர் குமாரத்தியாக அவதரித்தபடி:

1. "ஸ்யாலோSத₂ நந்த₃கோ₃பஸ்ய மிதி₂லேஷு ந₃வாம் பதி: |
ப்ரஸ்ருத்₃த₄ கோ₃த்₄நோ த₃க்ஷ: கும்ப₄கோ நாம நாமத: ||
த₃ாதா துலு₃க்₃த₄ஸ்ய ஸர்வேஷாம் தக்ரஸ்ய ச க்₄ருதஸ்ய ச |
ஜநஸ்ய ப்ரியவாக் நித்யம் யஸோத₃ாயா ஜந₄ந்யஜ: ||
த₄ர்மத₃ா தஸ்ய பா₄ர்யாஸீத் த₄ர்மதை₃வதநாமத: |
ஸாSஸுதாபத்யயுக₃ளம் ஸோப₄நம் கோ₃பபூ₄ஷணம் ||
தயோஸ்' தத்ர புமாந் ஜஜ்ஞே ஸ்ரீத₃ாமா நாம விஶ்ருத: |
ஸர்வைஶ்வர்யஸீத் கு₃ணை: யுக்தஸ் ஸர்வப்ராணிமநோரம: ||
நவநாமா ச கந்யா ஸா ரூபௌத₃ார்யகு₃ணந்விதா ||".

2. "நீளா குலேந ஸத்₃ருஶீ" ஆகையாலே C "நந்நகோபாலன் மருமகனே நப்பின்னாய்" என்றதும். அவன் D ஆயர்கொழுந்து; இவள் E குலவாயர் கொழுந்து, 3 "துல்ய ஶீல வயோ வ்ருத்தாம் " F "தோளி சேர்பின்னை," G "ஆயனுகியாயர் மங்கை வேயதோள் விரும்பினாய்". மற்றைப் பிராட்டிமாரில் ஆபி₄ஜாத்யத்தாலும், உகக்கைப்பாடியாகையாலும் உள்ள வாசி. H 'கோவலர் பட்டங்கவித்தது' இவளுக்கேயாகையாலே; I "சூட்டு நன்மாலைகள்-ஓர் மாயையினுலீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்து இமிலேற்று வன்கூன் கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தங் கொம்பினுக்கே" என்னக்கடவதிறே.

(துங்க₃ஸ்தநகி₃ரி தடஸ்₂தமுத்₃பே₃தா₃த்₄ய க்ருஷ்ணம்) நப்பின்னைப் பிராட்டியுடைய ஓங்கிப் பணைத்திருந்துள்ள திருமுலைத்தடங்களாகிற மலைத்தாழ்வரையிலே நஞ்சுண்டாரைப் போலே மயங்கிக்கிடந்துறங்குகிற க்ருஷ்ணனுகிற ஸ்வாமித்தை உணர்த்தினுள்; J "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா" என்றும், B "யசோதை யிளஞ்சிங்கம்" என்றும் சொல்லக்கடவதிறே. இங்ஙனாகு ஸ்வாமியான பெருமாள், பிராட்டியைப்பிரிந்து மால்யவானுகிற மலையிலே K மன்னிக்கிடந்து உறங்கப்பெருமல் 4. 'அநித்₃ர'ராயிருந்தார்; இங்கு அங்ஙனன்றிக்கே J பிரிவாற்றகில்லாமையை அறிந்து தானே மேல்விழுந்து அநுப₄வித்தபடி. ப₃ஹு குடும்பி₃யாயிருப்பார் சிலர் ஒரு மலையடியைப்பற்றி ஜீவிக்குமாபோலே ஸர்வலோககுடும்பி₃யான ஸர்வேஶ்வரன் இவள் முலையடியைப்பற்றிக் கிடக்கிறான். 'துங்க₃ம்' என்கையாலே அளவிறந்த போ₄க்₃யதாதிஶயும் சொல்லுகிறது. 'தடஸ்₂தம்' என்கையாலே அவயவைகதே₃ஶத்திலே மக்₃நனானபடி; L "மலராள் தனத்துள்ளான்" என்னுமாபோலே "ஸ்தநகி₃ரி தடஸ்₂தம்" என்கையாலே அவயவாந்தரத்திற் செல்லாதே 5. அஸ்தமிதாந்யபா₄வமாயிருந்தபடி; இத்தால், எம்பெருமானுடைய போ₄க்த்ருத்வம் சொல்லுகிறது.

A-திருவாய் 8-1-3, B-திருப்பாவை-1, C-திருப்பாவை 18, D-திருவாய்1-7-2, E-திருவாய் 5-6-11, F.திருவாய் 4-2-5, G-திருச்சந்த 41, H-பெரியாழ் திரு 3-8-7, I-திருவிருத்தம் 21, J-திருப்பாவை 19, K-திருப்பாவை 23, L-மூன்-திரு 3,

(நீளா துங்கஸ்தநகிரிதடஸுப்தம்) A "நிறைவினுல் குறைவில்லா நெடும்பணைத் தோள் மடப்பின்னை, பொறையினுல் முகிலகணவான் பொருவிடையேழடர்த்துகந்த" என்னக்கடவதிறே; ப்ராப்திக்கு உகப்பானும் அவனேயிறே. 'உத்துபோத்ய' என்று உணர்த்த வேண்டும்படி போகபரவஸனனன். இப்படி அந்யபரனனவன்தான் ஆரென்னில்: — நிரதிசயஸுகரூபனன க்ருஷ்ணனென்கிருள் — (க்ருஷ்ணம்) என்று. 1. "க்ருஷிர் பூவாசகஸ்சப்தோ ணஸ்ச நிர்வ்ருதி வாசகஸ்" என்னக்கடவதிறே. 2. "ரஸோ வை ஸ:" 3. "ஆநந்தோ ப்ரஹ்ம" 4. "ஆநந்தமயாதி" B "நந்தகோபன் மகன் கண்ணன்" 5. "பரமாநந்தம்" என்னும்படியிறே இருப்பது. (ஸ்தநகிரிதடஸுப்தம் க்ருஷ்ணம்) என்கையாலே-பொற்குப்பியின் நுனியிலே கருமாணிக்கத்தை அழுத்திவைத்தாற்போலவும், விகஸோந்முகமான பத்மகோஸத்திலே ஷட்பதம் படிந்தாற்போலவும் இருக்கை. 6. "மஞ்ஜுள ஸுப்த பக்ஷிஸங்கா" C. "போதில் பொறிவண்டு கண்படுப்ப" D "தெய்வவண்டு" என்றும் 7 "ஸுரங்கராஜ பக்ஷிஸங்கா:" என்றும் சொல்லக்கடவதிறே. E "மலராள் தனத்துள்ளான்" என்று ஸ்ரீஸ்தநத்திலும் F "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னுமிவையே முகியாவடிவமைந்த-அன்னநடைய அணங்கு" என்கிற பூஸ்தநத்திலும் மக்நனுய் G நிலையாக நின்றுற்போலே நீளாஸ்தநத்திலும் ஸுப்தனனபடி. H "வடமாமலை யுச்சியை" I "மாலிருஞ்சோலை யென்னும் மலையையுடைய மலையை" என்னக்கடவதிறே. "உத்துபோத்ய" என்கையாலே J "துயிலெழப்பாடி" K "உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்" L "செற்றார்க்கு வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய்," என்று எழுப்பும்படி சொல்லுகிறது. இத்தலையிலே இவர்களுணர்த்த உணர்வானுகில் ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமன்றே என்னில்—நெருப்புப்பட்டு வேவாநின்றுல் ப்ரணயிநிகள் என்னுங்காட்டில் உறங்கப்போமோ? இவர்களுடைய ஆர்த்தநாதமும் அக்நி ஜ்வாலை கதுவினுற்போலே கதுவ, தாய்வேறு கன்றுவேருய்த் துடித்துக்கொண்டு எழுந்திருந்தார்கள்.

இப்படி உணர்த்தினவதுக்கு ப்ரயோஜனம் சொல்லுகிறது மேல்—(பாரார்த்யம் ஸ்வம் ஸ்ருதிஸத ஸிரஸ்ஸித்தம்) தன்னுடையதாயிருந்துள்ள உபநிஷத் குஹ்யமான பாரதந்த்ரியக்திலே. 8 "மந்த்ரப்ரஹ்மணி மத்யமேந நம்ஸா யுன்ஸ்ஸ ஸ்வருபம்" என்கிறபடியே ஆத்மாவுக்கு நிலைநின்றதாய் ஸ்வம்மாயிறே பாரதந்த்ரியத்தானிருப்பது. 9 "யஸ்யாஸ்மி" 10 "பரவாநஸ்மி" M "தனக்கேயாக" N "உனக்கேநாமாட் செய்வோம்" என்னக்கடவதிறே. ஸ்வத்வமுண்டானுல் ஸ்வாமித்வம் தன்னிட்டேயாகவேணுமிறே. 11 ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறது (ஸ்ருதி ஸதஸிரஸ்ஸித்தம்) என்று. மஹாநிதி பர்வதகுஹரங்களிலே ஸஞ்சிதமாய்க் கிடக்குமாபோலே, உபநிஷத்துக்களிலே ஸுரக்ஷிதமாயிருக்கிறபடி (ஸ்ருதிஸதஸிரஸ்ஸித்தம்) என்கையாலே—இதுதான் ஒரோ ப்ரதேஸங்களில்நின்றிக்கே எங்குமுண்டாயிருக்கை. 12 "ஸர்வே வேதா:" 13 "வேதைஸ்ச ஸர்வை:" என்னும்படி எங்குமுண்டாயிருக்கை. லோகமெச்சொன்ன இடமெங்கும் லோகோத்தரமுண்டாயிறேயிருப்பது. இந்த லோகோத்தரபூதமாகிற பரிமாற்றம் பரமபதத்தில் பரிமாறக்கடவதாயிருக்கும். இப்படி பரமபதத்தில் பரிமாறக்கடவதான பாரதந்த்ரியத்தை, அதுக்கு எதிர்த்தட்டான ஸ்வாதந்த்ரியமே பரிமாறும் வழிபறிக்குந் தேஸத்திலே இம்மஹாநிதியை வெளியிடுகிறுள். (அத்யாபயந்தீ) 14 'பதிம் விஸ்வஸ்ய'

A-திருவாய் 4-8-4, B-பெரியாழ் திரு 3-8-8, C-திருப்பாவை 3 D-திருவாய் 9-9-4 E-மூன்-திருவ 3 F-பெரியதிருமடல் 6, 7, G-பெரியதிரு 6-9-8, H-பெரிய திரு 7-10-3, I-பெரியாழ்திரு 4-3-11, J-திருப்பாவை 16, K திருப்பாவை 17, L-திருப்பாவை 20, M-திருவாய் 2-9-4, N-திருப்பாவை 29.

1. 'யஸ்யாஸ்மி' என்று ஒதிக்கிடக்கிற ஸோஷஸோஷிபூர்வம் அநுஷ்டிஒப் பாரில்லாமையாலே, இவர்களைப்போலே அவனும் மறந்து கைவிட்டிருக்க, A "பொற்றுமரையடியே போற்றும் பொருள்கேளாய்" என்று அவனை மறித்துவைத்து A "உன்தன்னோடுற்றேமேயாவோ மூனக்கே நாமாட்செய்வோம்" என்று ஒதுவித்தாள். 2. "யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" B "எயிற்றிடை மண்கொண்ட எந்தை இராப்பகலோதுவித்து" என்கிற நிலை குலைத்தது, பரதந்த்ரைகளாயிருக்கிற இவர்கள் நியமிக்கப்பெறுவார்களோ? என்னில்— ஸ்வதந்த்ரோபாதி ஆற்றுமையுடையாரும் நியமிக்கப்பெறுவார்கள். ஆர்த்தர்பாடும் ஸ்வாதந்த்ரியமேறிப் பாய்வது: 'நான் என்னது' என்று அகிஞ்சனொழியவும் சொல்லுவார் பாடேயும் ஸ்வாதந்த்ரியமேறிப் பாய்வது. தம் திருவுள்ளத்தை நியமிக்குங்காட்டில் ஸ்வாதந்த்ரியமாகமாட்டாதிறே. பண்டும் இப்படி நியமித்தாருண்டு. 3. "ஸ்த்ரீபாலாத்3ருதா3ஸ்தாஶ்ருதம் மே தர்மஜ்ஞ வக்தும் தவ கஸ்ஸமர்த்த3:| விராட்ய பு3த்3த்4யா து ஸஹாநுஜ்ஞயத்ரோபதே தத்குரு மாசிரேண ||" என்றுள். அப்படியே இவளும் நியமித்து C "சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே" என்கிறாள்.

இப்படி ஸர்வஜ்ஞனுக்குங்கூட அத்4யயநம் பண்ணுவிக்கிறவளுடைய வைலக்ஷண்யஞ் சொல்லுகிறது மேல்; (ஸ்வோச்சி2ஷ்டேத்யாதி3) தான் சாத்திக் கழித்த மாலையாகிற விலங்காலே இவளைப் பேராதபடி விலங்கிட்டு யாவளொருத்தி அவனை பா3லாத்காரித்து பு4ஜித்தாள்; (கோ3பீநாம் தஸ்யை நம இதி3மித்தம் பூ4ய ஏவாஸ்து பூ4ய:) இப்படி வேண்டற்பாட்டையுடையளாய், எம்பெருமானுக்கு D "மார்வத்து மாலே" என்கிறபடியே: நிரதிஶயபோ4க்3யையாயிருக்கையாலே "கோதை" என்னுந் திருநாமத்தையுடைய ஆண்டாள் திருவடிகளிலே காலதத்வமுள்ளதனையும் அடிமை (அடிமை அடிமை) என்கிறார்.

ஸ்வோச்சி2ஷ்டமாலை-சூடிக்களைந்தது; E "தொடுத்த துழாய் மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்" 4. "த்வயோபபு4க்த ஸ்ரக்3கந்த4—உச்சி2ஷ்டபு4க்ஷிணோ தா3ஸா:" என்னுமது ப்ரணயித்வத்தாலே மாருடிக் கிடக்கிறது. இப்படி ஈஶ்வரன் யதே2ஷ்டவிநியோகா3ர்ஹனும்படி தன்னை ஒக்கிலைக்கையாலே, அவனுடைய 'ஆஶ்ரிதபாரதந்த்ர்யம் தோற்றுகிறது, F பார்வண்ணமட்மங்கை பத்தரிறே; G "அரங்கர்மெல்லி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவ"ளிறே; D வாசஞ்செய் பூங்குழலிலே வாஸிதமாக்கிக் கொடுத்தபடி. (ஸ்ரஜி நிகு3ளிதம்) மாலை மாலையாலே விலங்கிட்டாள். கால்விலங்காகிலிறே கழற்றுவது: H 'தந்தை காலில்விலங்கற" I "தந்தை தனிகழல" என்னக்கடவதிறே. எல்லாரையும் கர்மாநுகு3ணமாகக் கட்டுமவன் காமநி கழித்த கண்ணியாலே கட்டுண்டான். J கண்ணியார் "குறுங்கயிற்றுற் கட்டுண்டபடியாய்த்து. K "மல்லிகைமாமாலை கொண்டங்கார்த்ததும்" L "மன்னிலங்குபாரதத்தை மாளவூர்ந்த வரையுருவின் மாகளிற்றைப் பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக் கொண்டு" அநுபூ4வித்தாள். M தறியார்ந்த கருங்களிறிறே. ஸ்வேச்சா2விஹாரம் பண்ணித்திரிகிற க்ருஷ்ண மஹாமதங்க3ஜத்தைத் தன்னுடைய குசகுட்3மளமாகிற ஆளாநத்தோடே அணைத்து அநுப4வித்தாள்.

(ய: பா3லாத்க்ருத்ய பு4ங்க்தே) யாவளொருத்தி பா3லாத்காரித்து பு4ஜித்தாளென்கையாலே, அதுவும் அவனுகப்புக்கு உறுப்பாயிருக்கும்; 5. "அஹமந்நமந்நமத3ந்தமத்3மி"

A-திருப்பாவை 29, B-பெரியாழ் 5-2-3. C-திருப்பாவை 28. D-திருவாய் 10-10-2. E-திருப்பல்லாண்டு 9. F-திருநெடு 18, G-இராமாநுச 16. H-பெரியதிரு 8-5-1, I-பெரியதிரு 11-5-2. J-பெரியதிரு 11-5-5, K-பெரியாழ் 3-10-2, L-திருநெடு 28. M-பெரியதிரு 2-10-6.

அல்லாதபோது அவனுக்கு அனுபவம் குலையும். (கோதா) என்று கோதையென்றபடி. A "குழற்கோதை" என்றிறே; கோதை-மாலை; மாலைபோலே பேராக்ஷையையாயிருக்கை; ஸ்ரீமாலாகாரர் மகளாகையாலே மாலை என்னலாம்படியாஞ்; மாலையான தான் தலையான மாலையை வழங்கினாள்; திருமாலை வழங்கினளிறே. 1 "ரங்கீ நேத்ரஸ்ரேணி தாடீ ததநு ஸ்ரோத ஸ்வயம் ஸுந்தரோ பத்ம தத்ஸம்பகதாமபி: குசதடே மக்நோZஞ்ஜநாத் ரீஸ்வர:| பேராகாபாடவலஜ்ஜயா வடமஹாதாமா பணீந்த்ரேSபதத்ரம்யேஸ்தவ விஸ்- மிதேந மநஸா கோதே பரம் திஷ்ட்டதி ॥" என்றிறே ஆண்டாள் விறுடைமையிருப்பது.

(அத்யாபயந்தீ) என்கையாலே- B பாமாலை பாடிக்கொடுத்தபடி சொல்லிற்று. (ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே) என்கையாலே பூமாலை சூடிக்கொடுத்தபடி சொல்லுகிறது. எல்லாப்படியாலும் இவளுக்கு எம்பெருமானே வஸீகரித்து ஆத்மாக்கனே ரக்ஷிப்பிக்கவல்ல புருஷகாரத்வமும், இருவருமான சேர்த்தியாலே ப்ராப்யத்வமும் சொல்லுகிறது. ஆகையாலிறே. எம்பெருமானுர் C நாறுநறும் பொழிலில் இவள் ப்ரார்த்திதத்தபடி நடத்தியும், திருப்பாண்வையை நாடோறும் நடத்தியும். அத்தாலே D சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமானுசனுதும்; அவளுக்கும் E ஆழ்வார் திருமகளானதுக்கு மேலே ராமாநுசன் அண்ணராக அபிமாநித்த ஏற்றமும் உண்டிறே.

இப்படி எல்லாவற்றாலும் நிரவதிக வைபவத்தையுடைய அந்த ஆண்டாள் பொருட்டு அடிமையாய் அற்றுத்தீர்ந்து ஒரொன்றுகளிலே தம்மை எழுதிக்கொடுத்து ஆழங்காற்படு கிறார். (பூர்ய ஏவாஸ்து பூர்யः) அவன்தான் F "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்குமுன் தன்னோடுற் றேமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்" என்றதை, பதத்ரய விஷயத்திலே தாம் ப்ரார்த் திக்கிறார். 2 "நாராயணாய நம இதி ப்ரணம்யோத்தாயோத்தாய புநः புநः ப்ரணம்ய" என்றிறே எம்பெருமானுர் பரிமாற்றமிருப்பது. இதுதான் 3 "அத்ர பரத்ரசாபி நித்யம்" என்னக் கடவதிறே. அங்கும் 4 "பூமிநீளா நாயக" என்றும், 5 "உபாப்யாம் பூமிநீளாப் யாம் லேஷித: பரமேஷ்வர:" என்றும் சொல்லுக்கிறே. இத்தால் திருப்பாவையின் அர்த்தத்தை அநுஸந்தித்து ஆநந்தமடைந்தாலே அத்தாலே தாம் ஆண்டாளை ஶரணம் புக்கபடியை அனைவரும் அநுஸந்திக்கும்படி அருளிச்செய்தாராயிற்று.

2. அவதாரிகை—(அன்னவயல் புதுவை) இதில், ஆயிஜாத்யத்தையுடையளாய், பெரியபெருமாளுக்கு வாசிகாயிகரும் நாராயணனுக்கு "கோதை" என்று திருநாமமான சூடிக்கொடுத்தாளைச் சொல் என்கிறது. "சொல்" என்கிறது—நெஞ்சையாதல், நெஞ்சுபோல் வாரையாதல்.

உய்யக்கொண்டார் அருளிச்செய்த தனியன்கள்.

1. அன்ன வயற்புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

அன்னம் வயல்-ஹம்ஸங்கள் (உலாவுகின்ற)வயல்களையுடைய, புதுவை—ஸ்ரீவில்லி புத் தூரில் (திருவவதரித்த), ஆண்டாள்—ஆண்டாள் என்னும் திருநாமத்தை உடையவளும், பன்னு—ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட, திருப்பாவை பல் பதியம்—திருப்பாவை என்னும் பல பாட்டுக்களை, இன் இசையால் பாடி—இனிய இசையுடன்பாடி (அவற்றை), அரங் கற்கு—ஸ்ரீரங்கநாதனுக்கு, நற்பாமாலை—விலக்ஷணமான பாமாலையாக, கொடுத்தாள்—ஸமர்ப்பித்தவளும், பூ மாலை—செண்பகம் முதலிய பூக்களினுலான மாலையை, சூடி—(தான் முதலில்) சூடி, கொடுத்தாளை—(பிறகு ஸ்ரீரங்கநாதனுக்கு) ஸமர்ப்பித்தவளுமான கோதையை, சொல்லு—அநுஸந்திப்பாயாக.

A--நாச் திரு 9-10, B-திருப்பாவைத் தனியன், C-நாச் திரு9-6. D-இராமாநுச 16
E-உபதேச 22, F-திருப்பாவை 29,

வ்யா:— (அன்னவயல் புதுவை) A. மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லி புத்தூரிறே; B. அன்னநடைத் திங்கள்முகவல்லியான ஆண்டாள் போலேயிறே அவை யிருப்பது; அன்னங்கள் ஸஞ்சரிக்கும் வயலையுடைய புதுவை, C. "புரவிமுகஞ்செய்து செந் நெலோங்கி விளைகழனிப்புதுவை...பட்டர்பிரான்," D. "தண்புதுவைப் பட்டன்" என்றிறே திருத்தமப்பனுர்க்கு நிருபகம்; இவளுக்கும் அப்படியேயாயிருக்கை, (புதுவையாண்டாள்) ஸ்ரீ பூமி நீளைகளுடைய ப்ராதாந்யமாயிறே திருவெள்ளறை ஸ்ரீவில்லிபுத்தூர் திருநறையூ ரென்கிற தரிஸ்தாநமிருப்பது. ஸ்ரீபூமிப்பிராட்டியாரான ஆண்டாள், 1. ஸஹ்யா தாஸீ பக்தைகளாய் Eபோடி Fவருடி G"உனக்கே நாமாட்செய்வோம்" என்று அடிமைசெய்ய Hஆழ் வார் திருமகளாராய் வந்து அவதரித்தபடி, ஆகிலும் அடியில் திருநாமமே ஆண்டா ளென்று அநுவர்த்திக்கிறது, (ஆண்டாளரங்கற்குப்பன்னு திருப்பாவைப் பல்பதியம் இன் னிசையால் பாடிக் கொடுத்தாள்) இவள் க்ருஷ்ணனையன்றே திருப்பாவை பாடிற்று; பெரியபெருமாளுக்குப் பாடிக்கொடுக்கையாவது- I "அண்ணாந்திருக்கவே ஆங்கவனைக் கைப் பிடித்த பெண்ணுளன் பேணுமூர் பேருமரங்கம்" என்றும்; J " செம்மையுடைய திருவரங் கர் தாம்பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை" என்றும், K பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்-மாசுடம்பில் நீர் வாரா மானமில்லாப்பன்றியாந் தேசுடையு தேவர் திருவரங்கர்" என்றும். L "நிலமகள் கேள்வன்" என்றும் பூமிப்பிராட்டியான இவள் ஆதரித்துப் போரு கிற ஸ்ரீவராஹநாயனுர்படியும், அநுகாரத்தாலே ஆதரித்துப்போருகிற கோபாலர்படியும் தர்ம்மைக்யத்தாலும் ஆஸ்ரித வ்யாமோஹ குணத்தாலும் பெரியபெருமாளிடத்திலே காண லாயிருக்கும். இனித்தான் M பள்ளிகொள்ளுமிடத்தே N துயிலெழப்பாடித் திருப்பள்ளியுணர்த் துவதும் இங்கேயுண்டிறே; வடபெருங்கோயிலுடையானை க்ருஷ்ணனுக அநுகரித்தாற் போலே, O கோவலனுய் வெண்ணெயுண்ட வாயோடே கண்வளர்ந்தருளுகிறதாக அநுஸந் திக்கலாமிறே. M "பள்ளிகொள்ளுமிடத்தடி கோட்டிட" என்று ப்ரார்த்தித்தபடியே P பண வாளரவணைப் பற்பலகாலமும் பள்ளிகொள் மணவாளரோடு மணம்புணர்ந்து கூடினுளிறே. ஆகையாலே பாடின விஷயமும் அவரேயிறே. விஜ்ஞாபித்துப் Q பாட்டினுல் கண்டுவாழும் பாணர்பாட்டுக் கேட்குமிடமாகையாலும், இவள் அவர்மகளாகையாலும் பாடவல்ல நாச்சியா ராய் அவ்விஷயத்தையே பாடினுளாய்த்து, (அரங்கற்குப் பன்னு திருப்பாவைப் பல் பதி யம்) அர்த்தத்தின் சீர்மையாலே எல்லாராலும் ஆராய்ந்து அநுஸந்திப்பதான திருப் பாவை யென்னுதல்; ஆராய்ந்து அருளிச்செய்த திருப்பாவை யென்னுதல், நிருபித்தால், பல் பதியம்—பல பத்யமென்றபடி. R சங்கத்தமிழ் மாலை முப்பதுந் தப்பாமலிறே அருளிச்செய் தது; அதுதான் இன்னிசையாலேயாய்த்துப் பாடிக் கொடுத்தது. 2. " ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம்" S "செவிக்கினிய செஞ்சொல்" என்னுமாபோலே, (நற்பாமாலை) விலக்ஷண மாய், சந்தோருபமாயிருப்பதான மாலையைப் பாடிக்கொடுத்தாள், அதாவது T "சூட்டி னேன் சொல்மாலை" என்னும்படி ஸ்ரஸாதரிக்கும்படி பண்ணுகை, பூமாலை சூடிக்கொடுக்கை யாவது U செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சியாலும் இடையிட்டுத் V தொடுத்த துழாய் மாலையை; (சூடிக்கொடுத்தாள்) தன் W வாசஞ்செய் பூங்குழலிலே வாஸிதமாக்கிச் சூடிக்கொடுத்தாளாய்த்து. ஆகையால் திருப்பாவையநுஸந்தாநத்துக்கு முன்னே (சூடிக் கொடுத்தாளைச் சொல்லு) என்று-அவளை அநுஸந்திக்கச் சொல்லுகிறது. இத்தால், அவள் திவ்யப்ரபந்தத்திலும் அவள் திருநாமமே ப்ரதமம் அநுஸந்தேயமென்றதாய்த்து.

A-நாச்-திரு 5-5, B- C-பெரியாழ் 4-1-10, D-பெரியாழ் 3-8-10, E-திருப்பாவை 27, F-பெரு-திரு 1-1, G-திருப்பாவை 29, H-உப தேச 22, I-நாச்திரு 11-9, J-நாச்-திரு 11-10, K-நாச்-திரு 11-8, L-திருவாய் 7-2-9. M-நாச்-திரு 4-1, N-திருப்பாவை 16, O-அமலனதி 10, P-நாச்-திரு 10-6. Q-அமலனதி-தனியன், R-திருப்பாவை 30, S-திருவாய் 10-6-11, T-முதல் திருவ-1, U-பெரியாழ் 2-7-10, V-திருப்பல் 9, W-திருவாய் 10-10-2.

3. **அவதாரிகை** (சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே) இதில் சூடிக்கொடுத்தபடியையும் பாடிக்கொடுத்தபடியையும் சொல்லி ஸ்தோத்ரம் பண்ணி, திருவேங்கடமுடையானடியாகச் சொன்ன இதன் அர்த்தஙகளை நாம் அதிக்ரமியாதபடி அநுக்ரஹிக்கவேணுமென்று ஆண்டாளை அர்த்திக்கிறது. கீழ் "அரங்கற்கு" என்றது; இதில் "வேங்கடவற்கு" என்றது: கோயில் திருமலைகளிலேயாய்த்து, கோதை சூடிக்கொண்டிருப்பது.

2. சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வகையாய்—நாடி நீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

சூடிக்கொடுத்த—(பூமாலையைத் திருக்குழலிற்) சூடி, (அதனை எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்த, சுடர் கொடியே—ஒளிமயமான கொடிபோன்றவளே! தொல்பாவை—அநாதியான ஆசாரத்தினால் வித்தகமான நோன்பை, பாடி—(திருப்பாவை முகமாகக்) கூறி, அருளவல்ல—(அடியார் திறத்துக்) கருணை புரிய வல்லவளும், பல்வகையாய்—பல வகைகளைக் கையிலணித்துள்ளவளுமான கோதாய்! நீ—நீ. நாடி—(மன்யதனை) நாடி, என்னை வேங்கடவற்கு விதி என்ற இம்மாற்றம்—"காமதேவா! நீ என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க்கைப் படுத்த வேணும்" என்று காமனைக் குறித்துக் கூறியவற்றை, நாம் கடவாவண்ணம்—யாம் மீறுதொழியுமாறு, நல்கு—அருள்புரியவாக.

வ்யா:-(சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே) A குழற்கோதையாகையாலே அளகத்திலே வகையமாகச் சூடிக்கொடுத்தாளாய்த்து. (சுடர்க்கொடி) ரூப ஸம்ஸ்தானம் பொற்கொடியென்னலாம்படியிருக்கை. 1. "ஹேமலதாம்" 2. "மங்களதீப லேகாம்" (கொடி) அவனைக்கட்டலாங்கொடி.. B "பெண்ணைக்கையாப்புண்டு" என்னக்கடவதிறே; (சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே) நிருபகம். (தொல்பாவை பாடியருள வல்ல பல்வகையாய்) தொல்-பழையதான, பாவை-நோன்பை; பஞ்சலக்ஷங்குடியிற்பெண்களும் கூடி நோற்ற நோன்பை 3 "ஹேமந்தே ப்ரதமே மாஸி நந்தவ்ரஜகுமாரிகா;" என்று-எல்லாருங்கூடி க்ருஷ்ணனைப்பெறுகைக்கு மார்கழி நீராடி நோற்ற நோன்பை, பிற்பாடர்க்கும் அநுஸந்தேயமாம்படி ப்ரபந்தமாக, பாடியருளவல்ல-பாடி உபகரிக்க வல்லவனென்னுதல்; அன்றிக்கே, பழையதாய்ப் போருகிற திருப்பாவையென்கிற சந்தோரூபமான ப்ரபந்தத்தை என்னுதல். (பல்வகையாய்) C "பல்வகையாள்", என்னுமாபோலே, வகையோடு நிருபகமாயிருக்கை. (நாடி நீ வேங்கடவற்கு என்னை விதி என்ற) —நீ, D "திருவேங்கடத்தானை நான் சென்று நாடி" என்கிறபடியே அபிநிவேசத்தைப் பண்ணி; E "காமதேவா" என்று உன்னுடைய காமத்தியாலே F "வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" என்ற; (இம்மாற்றம்) இந்தச் சொல்லை யென்னுதல்; இந்த ப்ரகாரமென்னுதல்; பகவத் காமத்தாலே சொன்ன பாசுரத்தை யென்னுதல், அர்த்தத்தையென்னுதல். (நாம் கடவா வண்ணமே நல்கு) உனக்கு அடிமையாயிருக்கிற நாங்கள் அதிக்ரமியாத ப்ரகாரம் உபகரிக்கவேணும். நல்குதல்-கொடுத்தல்.

இத்தால்-ஆண்டாளுடைய பகவத்ப்ரேமம் உண்டாக வேணுமென்று அவனை வேண்டுகிறது.

பிள்ளைலோகஞ்சீயர் திருவடிகளே சரணம்.

A-நாச்-திரு 9-10, B-நாச்-திரு 11-7, C-பெரியாழ் 2-2-5, D-பெரிய-திரு 6-8-1, E-நாச்-திரு 1-2, F-நாச்-திரு 1-1.

ஶ்ரீ

பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

திருப்பாவை மூவாயிரப்படி

வ்யாக்₃யாநத்தின் அவதாரிகை.

a தே₂ஹாத்மாபி₄மாநிகளுக்கும் b ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷி களுக்கும் பர்வதபரமாணுவோட்டை வாசி போரும்; c ரிஷிகளுக்கும் ஆழ்வார் களுக்கும் அத்தனைவாசி போரும்; ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத் தனைவாசி போரும்; d பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனைவாசி போரும். e அவர்களில் இவளுக்கு வாசியென்? என்னில்: 1 'அநாதி, மாயயா ஸுப்த:' என்கிறபடியே ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி, எம் பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; f இவள் தானே சென்று எம்பெருமானையெழுப்பித் தன்குறையை அறிவித்தாள்; g ஆகையாலே,

---

பெரிய அரும்பத விளக்கம்

a.....l. பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவை என்கிற தி₃வ்யப்ர பந்த₄த்துக்கு வ்யாக்₂யானஞ் செய்தருளக் கோலி, வக்தருவைலக்ஷண்யத்தையும் ப்ரபந்த₄ வைலக்ஷண்யத்தையும் ப்ரதிபாத்₃யவைலக்ஷண்யத்தையும் அருளிச்செய்கிறார்-(தே₂ஹாத்மாபி₄ மாநிகளுக்கும் என்று தொடங்கி—அபேக்ஷிக்கிறது) என்னுமளவும்.

b (ஆத்மஸ்வரூபம் கைவந்து) என்றது, தே₂ஹாதிரிக்த-ஆத்ம ஸ்வரூபத்தை யோகூத் தாலே ஸாக்ஷாத்கரித்து என்றபடி. c (ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனைவாசி) என்றது, ரிஷிகள் ஸ்வயத்நபரராகையாலும், ஆழ்வார்கள் A மயர்வறமதிநலமருளப்பெற்று எம்பெருமானையே தஞ்சமென்றிருக்கையாலும் உண்டான வாசி என்றபடி. e, f, g 'ஆழ்வார் களனைவர்க்கும் ஆண்டாளுக்கும் ஜ்ஞாநாதி₃க்யம் துல்யமாயிருக்க வாசியெங்ஙனே' என்னும் ஸங்கையை அநுவதி₃த்துப் பரிஹரிக்கிறார் (அவர்களில்) இத்யாதி₃வாக்யத்ரயத்தாலே. ஆழ்வார்களெல்லாரையும்போலே முன்பில்லாத ஜ்ஞாநாதி₃க்யம் எம்பெருமான் கடாக்ஷத் தாலே வந்ததன்றிக்கே, நித்யஸூரிகளைப்போலே ஸஹஜஜ்ஞாந ஜ்ஞாநாதி₃க்யத்தாலே அவனை எழுப்புகையாலே ஏற்றமுண்டு என்று கருத்து. அவனை யெழுப்புகையாவது- B நம் பின்னை கொங்கை மேல் வ்யாமோஹத்தாலே உறங்குமவனைத் தங்களிடத்திலும் அபி₄முக₂ ராகப் பண்ணிக்கொள்ளுகை.

சின்ன அரும்பத விளக்கம்

திருப்பாவையால் செய்தது - தத்காலத்தில் கோபிமார் நோன்பென்கிற வ்யாஜத்தாலே க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தைப் பண்ணின ப்ரகாரத்தை ஆண்டாள் அநுகரிக்கிறதாயிருக்கிறது. a.....l. ஆழ்வார்களிற் காட்டில் ஆண்டாளுக்குண்டான ப்ரமாத்₃ருவைப₂வத்தை அருளிச் செய்துகொண்டு இந்த ப்ரப₃ந்த₄த்துக்கு ஸ்வாபதே₂ஶம் அருளிச்செய்கிறார்-(தே₂ஹாத்மாபி₄ மாநிகளுக்கும்) என்று தொடங்கி (யாவதா₃த்மப₄வியாம்படி பண்ணியருளவேணுமென் றபேக்ஷிக்கிறது) என்னுமளவும். c (ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் பர்வத) இத்யாதே₃: ப்ரமாணம் 2. "ஸத்கர்மநிரதாஶ்சாந்யே₃ தே₃ஸ் ஸாங்க்₂யயோக₃விதி₃ஸ் ததா₂ ! நார்ஹந்தி ஷோட₃ஶீம் தஸ்ய கலாம் கோடிதமீமபி ॥" d (பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும்) என்றது மற்றையாழ்வார்களுக்கும் உபலக்ஷணம்; மேலே e (அவர்களிலிவளுக்கு) என்றிருக்கையாலே

A திருவாய் 1-1-1, B திருப்பாவை 19.

அவர்களிலும் இவள் விலக்ஷணை. h 1. "பூர்ணாத் ப்ரபுர் ருதி ஸுஸ்நிக்தः" என்கிறபோலே, தொடக்கமே பிடித்து பகவத்குணங்களிலே அவகாஹித்துப் போரும். புருஷன் புருஷனைக்கண்டு ஸ்நேஹிப்புதிலுங்காட்டில் ஸ்த்ரீ புருஷனைக்கண்டு ஸ்நேஹிக்கை பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற்காட்டிலும் எம்பெருமான்பக்கல் பரமபக்தியுடையளான ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவைக்குக் i கருத்து, j மார்கழி நீராட என்று ஒரு வ்யாஜத்தைக் கொண்டு, k நோன்பு என்று ஒரு வ்யாஜத்தாலே எம்பெருமான் பக்கலிலே சென்று, "உனக்கு ஸ்வாபாவிகமாயிருக்கிற இந்த ஆத்மாநுரூபமான கைங்கர்யங்களையுங் கொடுத்து, அதுதானும் யாவதாத்மபாவியாம்படி பண்ணியருளவேணும்" என்று l அபேக்ஷிக்கிறது.

இந்நோன்புக்கு m மூலம் என்னென்னில்:- n மீமாம்ஸையிலே (n, ஹோளாகாதிகரணந்யாயத்தாலே ஸிஷ்டாசாரஸித்தம். o A "மேலையார் செய்வனகள்" என்று ஆண்டாள் தானும் அருளிச்செய்தாள். p பொய்யே "நோற்கிறேம்" என்று சொல்லலாமோ? என்னில்: விவாஹங்களிலும் மரணப்பர்யந்தமான தஶைகளிலும் வந்தால் பொய் சொல்லலாம்.

பெ.அ-h...l இந்தப்ரபந்தத்துக்கு அடியான பக்திபரீவாஹமும் இவளுக்கு ஆழ்வார்களிற்காட்டில் அதிஶயித்திருக்குமென்று உபபாதியா நின்றுகொண்டு, ப்ரபந்த வைலக்ஷண்யங்காட்டுகிறார் (பாலயேத்யாதி) (i...l 'கருத்து' இதியாதியெல்லாம் ப்ரதிபாத்ய வைலக்ஷண்யம்; இவ்வைலக்ஷண்யமாவது—யாவதாத்மபாவியாய், அநர்த்தஸ்வபாவனாய், இதாபுருஷார்த்தத்தை வ்யாவர்த்தமாயிருக்கை. j (மார்கழி நீராட) என்று ஒரு வ்யாஜத்தைக்கொண்டு) என்றது கிருஷ்ணஸம்ஶ்லேஷமாகிற பலத்தை நெஞ்சிலே வைத்து k (நோன்பு) என்று ஒரு வ்யாஜத்தாலே) என்றது அந்த பலத்துக்கு அவனே உபாயமென்னும் அபேக்ஷையை நெஞ்சிலே வைத்து. j (மார்கழி நீராட) என்றது நோன்புக்கு அங்கமாதலாலே அதுக்குள்ளிக்கை. இத்தால் அங்காங்கிகளெல்லாம் வ்யாஜமென்று கருத்து.

m (மூலமென்னென்னில்) என்றது ப்ரமாணமென்னென்னில் என்றபடி. ஸோऽதர்மம் ஜுஞுஷமாணः ப்ரமாணம்" இத்யாதிகள் "ஸ்மிருதிஶீலே ச தத்விதாம்" இத்யாதிகள் என்கிறபடியே ஸிஷ்டர்கள் ஆசரித்ததெல்லாம் கர்த்தவ்யமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (மீமாம்ஸையிலே இத்யாதி). n (ஹோள) என்றது உத்ஸவத்தை. ஹோளாகமென்றும் சொல்லுவர். அதாவது பால்குநபௌர்ணமாஸ்யாதிதாப்ரதிபதிலே க்ரியமாணமாய், பரஸ்பர ஸஹிதாஜலஸேசந குங்குமாதி உத்ஸவமென்னை. o இந்நோன்பு ஸிஷ்டாசாரமென்கைக்கு ப்ரமாணங்காட்டுகிறார் (மேலையார் இத்யாதி). p நோன்பு என்று ஒரு வ்யாஜமாத்ரத்தாலே, கிருஷ்ணன் பக்கலிலே ஸம்ஶ்லேஷிக்கக் கோலி, அந்நோன்பு நோற்கச்சொன்ன கேஶவவிருத்தாந்தங்களோடே விஷயாந்தரங்களை ஸேர்த்திகேரு மென்று சொல்லுகை, தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன் அடுத்திருக்கும் இவர்களுக்குக் கூடுமோவென்னும் ஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (பொய்யே இத்யாதி). ஒருத்திக் கொருத்தி கிருஷ்ண ஸம்ஶ்லேஷார்த்திக்கு கஷ்டைகளாயிருக்கையாலே விவாஹம் பண்ணுவிக்குமவர்களாகையாலும், கிருஷ்ண ஸம்ஶ்லேஷத்தால் மரணதஶையை ப்ராப்தைகளாம்படியிருக்கையாலும் பொய் சொல்லலாமென்று கருத்து.

சி.அ-n ஹோளாதிகரணந்யாயமாவது:— ஹோள என்று உத்ஸவமாய், அந்த உத்ஸவம் ஶ்ருதிஸ்மிருதி விஹிதமன்றிக்கேயிருக்கச்செய்தேயும், ஸிஷ்டாசார ஸித்தமென்கிற நியாயம்.

A திருப்பாவை 26.

q ஆண்டாள் r இப்படி திருவவதரித்து வளர்ந்தருளுகிற காலத்திலே பெரியாழ்வார் வயிற்றிற் பிறக்கையாலும், s தானென தன்மையாலும் ஜ்ஞானபக்திகள் ஷணந்தோறும் இட்டுமாறினாற்போலே வடிவிலே காணலாம்படி பெருகிச்செல்லா நிற்க, t u. "பதிஸம்யோக ஸுலப ம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா சிந்தார்ணவக தஸ் பாரம் நாஸ்ஸாதயல்லோ யதா" என்கிறபடியே u ஒரு கொள்கொம்பிலே சேர்க்க வேண்டும் பருவமாய், A மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத u, தன்மையளுமாய், vB "கோல்தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மனம்" என்கிறப்படியே அபிநிவேசத்தைப் பண்ணிக்கொண்டு வடபெருங்கோயிலுடையானுடனே C தழுவி w முழுசிப் பரிமாறவேணும் என்று செல்ல; இவள் நினைத்தபடிகளுக்கு அவன் x முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நையாய், "இவனோடு கலந்து பரிமாறப்பெற்றருண்டோ? இல்லையோ?" என்று ஆராய்ந்து பார்த்து, "திருவாய்ப்பாடியிற் பெண்பிள்ளைகள் யதாமநோரதம் y இவனேடே அநுபவிக்கப்பெற்றார்கள்" என்று அநுஸந்தித்து, "அது காலாந்தரத்திலேயாகையாலே அதுக்கு உதவப்பெற்றிலோமே!" என்று இன்னதாய்; "இனி z அவன் உலாவிப்போன a அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திருந்த யமுனையும், அவனெடுத்த கோவர்த்தநமும் கிடந்ததாகில் b அவற்றைக்கண்டாகிலும் தரிப்போம்" என்று பார்க்க, அதுக்கு

பெ.அ-q...h இப்படி கோபிமாரைப்போலே நாய்ச்சியாரும் நோன்பு நோற்க அநுகரிக்கப்ரஸக்தி ஏதென்னும், ஜிஜ்ஞாஸுப்ரஶ்நத்துக்கு விஸ்தரேண உத்தரம் அருளிச்செய்கிறார் (ஆண்டாள் இத்யாதி—தரிக்கப்பார்க்கிறாள் என்னுமளவும்) (இப்படி)யென்றது — நோன்பு என்று ஒரு வ்யாஜத்தாலே எம்பெருமான் பக்கலிலே செல்லும்படியான ஜ்ஞானத்தை யுடையளாயிருக்கிறபடி. s (தானென தன்மையாலும்) என்றது ஸ்த்ரீ புருஷனைக்கண்டு மிகவும்ஸ்நேஹிக்கும்படியான ஸ்வபாவத்தாலுமென்றபடி. t, u I. "பதிஸம்யோகே ந ஸுதராம் லப்தும் யோக்யம் வயஸ்" என்று அர்த்தாந்தரமும் திருவுள்ளம்பற்றி த்ருஷ்டாந்தமுகேந தத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஒரு கொள்கொம்பிலே இத்யாதி) அந்யதா துஷ்லபமென்று கருத்து. பதன்மையஞ்மாய்—ஸ்வபாவத்தையுடையவளுமாய். v "கொழுந்து கோல்தேடியோடும், மால்தேடியோடும் மன்ம் அதே போன்றதே" என்று அந்வயம். wமுழுசி-மிகவும் அவகாஹித்து என்றபடி. x (முகங்காட்டாமையாலே) என்றது குளிர நோக்குதல், குலவப்ரஸங்கம் பண்ணுதல் செய்யாமையாலே என்றபடி. y (இவனேடே அநுபவிக்க) என்றது அர்ச்சாவதாரத்துக்கும் க்ருஷ்ணாவதாரத்துக்குமுள்ள தர்ம்யைக்யத்தைப் பற்ற. z (அடிச்சுவடு) என்றது – திருவடிகள் பட்ட அடையாளம் என்றபடி. a திருந்த—விளையாடின. b (அவற்றைக் கண்டாகிலும் தரிப்போம்) என்ற விடத்தில், க்ருஷ்ணனுக்கும்

சி.அ-q...m இனிமேல் ஆண்டாள் ப்ராப்தயௌவனையாகக் கொண்டு வடபெருங்கோயிலுடையானேடே யதாமநோரதம் அநுபவிக்கவேணும் என்று செல்ல, அங்கு அநுபவம் கிடையாமையாலே க்ருஷ்ணனேடே அநுபவிக்கலாம் என்று விசாரிக்க, அது காலாந்தரமாகையாலே அதுக்கு உதவப்பெற்றிலோமென்று மிகவும் தளர்ந்து, கோபிமார் திருக்குரவையிலே க்ருஷ்ணனைப் பிரிந்து அநுகரித்து தரித்தாப்போலே, இவளும், அந்த கோபிமார் நோன்பு நோற்ற ப்ரகாரத்தை அநுகரிக்கிறாளென்று அந்யாபதேஶமுகேந அருளிச்செய்கிறார் (ஆண்டாளிப்படி திருவவதரித்து வளர்ந்தருளுகிற காலத்திலே) என்று தொடங்கி (இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய் விட்டது) என்னுமளவும். x (முகம்காட்டாமை) என்

A நாச்-திரு 1-5. B இர-திருவ 27. C நாச்-திரு 13-5.

தனக்குப்போக பூலமில்லாமையாலே அவற்றை அனுஸந்தி்த்து மிகவும் அவ ஸந்நையாய், ஸ்ரீ ஜநகராஜன் திருமகளைப்போலே 'வில்' என்று ஒரு அவதி் பெறுதல், நப்பின்னைப் பிராட்டியைப்போலே 'ரிஷபங்கள்' என்று ஒரு அவதி் பெறுதல் செய்யப்பெறுமையாலே மிகவும் தளர்ந்து, 'நமக்கு தரிக்கைக்கு விரகு என்?' என்று ஆராய; சில c தார்மிகர், அவ்வளவிலே சொல்லுகிறார்கள்-- d 'திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனும் பெண்களுமாய்த் திருக்குரவைகோத்து அதிரஸம் செல்லாநிற்க, e ப்ரீதியாலே குமிழ்நீருண்டு, இனி f நற்கேடு கெட வொண்ணாது என்று இந்த ரஸம் மாறுகைக்காகப் பெண்களைப் பிரிந்து க்ருஷ்ணன் ஒளிக்க; பெண்பிள்ளைகள் தங்களாற்றுமையாலே 1. "துஷ்ட காளிய நிஷ்டாந்த்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா" என்கிறபடியே அவர்கள் அநுகரித்து g தரித்தார்கள்' என்றுகேட்டு, தானும் அவர்களைப்போலே அநுகரித்து h தரிக்கப்பார்க்கிறாள்.

i இவள்தான் ப்ராஹ்மணியாயிருந்துவைத்து அவர்களைப்போலே அநுகரிக்கும்படியெங்ஙனேயென்னில்:--யாகத்திலே தீக்ஷித்தவர்களுக்கு தேவதத்தாதி நாமங்களைத் தவிர்ந்து, யாகம் முடியுமளவும் "யஜமாநன்" என்றும் "அத்வர்யு" என்றும் "ஹோதா" என்றும் இத்யாதி j நாமங்களேயாகிறாப்போலே இவளும், ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் க்ருஷ்ணனாகவும் அநுஸந்தி்த்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே குடிபோய்,

---

பெ.அ. வடபெருங்கோயிலுடையானுக்கு மூண்டான தரிப்பைத்தவிர்த்தாலே அவனே இவனுயிருந்தானேயாகிலும், பெண்களோடு பரிமாறின திருமேனியழகாலே அதுவாகையாலே அத்தோடு ஸம்பந்தமுடையவைகள் தரிப்புக்குடலாமென்றும் கண்டுகொள்வது. c தார்மிகர்—பராசர பராஸர்யாதிகள். d அவர்கள் சொல்லுகிறபிரகாரம் ஏதென்னும் ஆகாங்ஷையிலே அருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலே இத்யாதி) g (தரித்தார்கள் என்று) என்ற அநந்தரம் அத்தை என்று ஸேஷம்.

i...ராஸக்ரீடையில் க்ருஷ்ணன் மறைந்தபோது கோபிமார்கள் 1. 'துஷ்ட காளிய' என்கிற ஒருத்தியை ஸம்போதி்த்து ஒருத்தி 1, "க்ருஷ்ணோஹம்" என்று சொல்லக்காண்கையாலே காளியனென்றே நினைவும் க்ருஷ்ணனென்றே நினைவும் தோன்றுகையால் அவர்களுக்கு அந்நினைவேயானாற்போலே, ப்ராஹ்மணி என்று தன்னை எண்ணிக்கொண்டிருக்கும் ஆண்டாளுக்கும் அந்த நினைவு உண்டாய் அநுகரிக்கிறாளோ? என்னும் ப்ரஸ்நத்தை அநுவதி்த்து நிருஷ்டாந்தமுகேந உத்தரம்அருளிச்செய்கிறார் (இவள்தான் இத்யாதி-முடைநாற்றமுமாய்விட்டது என்னுமளவும்) j (நாமங்களேயாகிறாப்போலே) என்றது நாமங்களே உண்டாய் அவற்றை அநுஸந்தி்க்கிறாப்போலே என்றபடி. k (அவைதானேயாய்) என்றது அவையேயாக

சி.அ. றது—குளிர நோக்குதல் குலப்ரஸ்நம் பண்ணுதல் செய்யாமை. z (அவனுலாவிப்போன அடிச்சுவடும்) என்றது—அவன் ஸஞ்சரித்த பூமியுமென்றபடி. a (திரௌத்து) விளையாடி. c (தார்மிகர்) வ்யாஸாதிகள், புராணங்களிலே சொன்னார்கள் என்றபடி. e (ப்ரீதியாலே குமிழ்நிருண்டு) உத்மஸ்தகமாக அநுபவித்து. f (நற்கேடு) என்றது—கேடான நலமாய், ஆஸ்ரயத்துக்கு ஹாநிவரும்படியான ஆநந்தமும்.

பாவநாப்ரகர்ஷத்தாலே அநுகாரம் முற்றி k அவைதானேயாய், இடைநடையும் இடைமுடியும் l இடைப்பேச்சும் m முடைநாற்றமுமாய்விட்டது.

n ஸ்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனுய், ஸ்ரீவைகுண்டநிகேதநனுயிருக்கிற ஸர்வேஸ்வரன், நஷ்டமாய்க்கிடக்கிற ஜகத்தை க்ருபையாலே ஸ்ருஷ்டித்தும் ஆத்மாக்களுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து, 1. "ஸாஸநாத் ஸாஸ்த்ரம்" என்று சொல்லுகிறபடியே, வேதஸாஸ்த்ரங்களைத் தன்னைப்பெறுகைக்கு உபாயமாகக் காட்டிக்கொடுக்க; அவற்றைக் காற்கடைக்கொண்டு விஷயாந்தரங்களிலே மண்டி அநர்த்தப்பட்டுப்போகிற தஸையிலே தான்வந்து பிறந்தருளி, தன்னுடைய ஸௌந்தர்யத்தாலும் ஸீலாதிகுணங்களாலும் இந்த ஜகத்துக்களை ஈடுபடுத்தி o வாரிப்பிடியாகப் பிடித்துக்கொண்டுபோவானொருவனுகையாலே, ததர்த்தமாகத் திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனுய்வந்து திருவவதாரம்பண்ணி, தன்னுடைய ஸௌந்தர்யத்தாலும் குணசேஷ்டிதங்களாலுமாக, பஞ்சலக்ஷங்குடியிலுள்ள பெண்களைத் தோற்பித்துக்கொண்டு, ஒத்தபருவத்திற்பெண்களுந்தானுமாய் வளர்ந்தருளுகிற காலத்திலே தானும் ப்ராப்தயௌவநனுய், அவர்களுக்கும் யௌவநம்வந்து தலைகாட்டினவாறே, கோபவ்ருத்தரெல்லாரும் கூடி, "க்ருஷ்ணன் தூர்த்தனுயிராநின்றான். இவன்முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது" என்று பார்த்து, இவர்களைக்கொண்டுபோய் நிலவறைகளிலேயடைக்க, பெண்களும் க்ருஷ்ணனும்பண்ணின பாக்யத்தாலே வர்ஷமின்றிக்கேயொழிய, பெண்கள் இருந்து மநோரதிக்கிறார்கள்; - "p கோதநராயிருக்கிற இடையர் வர்ஷார்த்தமாக நம்மை நோற்கச்சொல்லக்கடவர்கள். க்ருஷ்ணன் இதுக்குக் q கடைக்கூட்டனுகவுங்கடவன், நமக்கு ஒரு r துக்கமில்லை" s என்று

பெ.அ—அத்யவஸித்து என்றபடி. l இடைப்பேச்சு என்றது A"நெய்யுண்ணேம் பாலுண்ணேம்" என்ற ஜாதிப்பேச்சு என்றபடி. m B "ஆயர் சிறுமியரோம்" என்றத்தாலே முடைநாற்றம் அர்த்தஸித்தம்.

n...b கோபிமார் நோற்ற ப்ரகாரத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் (ஸ்ரிய:பதி இத்யாதி) o (வாரி) என்றது திரட்டி என்றபடி; (பிடியாக) என்றது ஒரு பிடியாக என்றபடி. இத்தால் 2."பூர்வம் ஸதூர்வமபூஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம்" என்கிறபடியே, சக்ரவர்த்திதிருமகனுய்க் கொண்டுபோந்தவனுகையாலே என்கை. p...r மநோரதிக்கும் ப்ரகாரத்தை அருளிச் செய்கிறார் (கோதநர் இத்யாதி—துக்கமில்லை இத்யந்தம்) q கடைக்கூட்டன்—நிர்வாஹகன். s (என்று) என்ற அநந்தரம், இப்படி என்று ஸேஷம்.

சி.அ-n...b அவர்களது கரித்தாப்போலே இவளுமநுகரித்தாள் என்றதே. அநுகார்யைகளான இடைப்பெண்கள் ஸ்வரூபமெப்படி? அவர்கள் நோன்பு நோற்றார்களோ, என்ன. அவர்கள் நோன்பு நோற்றுபலம்பெற்ற ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (ஸ்ரிய:பதியாயித்யாதி) o (வாரிப்பிடியாக) எல்லாரையும் கூட்டி என்றபடி. p...r பெண்கள் மநோரதத்தானேதென்ன அருளிச்செய்கிறார் (கோதநராயித்யாதி) q (கடைக்கூட்டு) ஸஹகாரி.

A திருப்பாவை-2, B திருப்பாவை-16

பெண்கள் ப்ரீதைகளாய் தரித்திருக்கிற தசையிலே; வர்ஷமின்றிக்கேயிருக்கிற படியைக் கண்டு, கோபவ்ருத்தரெல்லாரும் திரண்டு, ''பசுக்களும் மநுஷ்யரும் பிழைக்கும் விரகு ஏதோ?'' என்று பார்த்து, ''வர்ஷார்த்தமாக நோற்க வர்ஷ முண்டாம்'' என்று, ''இவ்வூரில் பெண்களடைய நோற்கக்கடவர்கள்; இந்நோன் புக்கு இங்குத்தைக்கு அதிபனை ஸ்ரீநந்தகோபர் மகன் க்ருஷ்ணன் கடகனு வான்'' என்று அத்யவஸித்து, பெண்பிள்ளைகளையடைய அழைத்து, க்ருஷ்ணனை யும் அழைத்து, பெண்களை நோற்கச்சொல்லி, ''இவர்கள் நோன்புக்கு நீ கடகனாக வேணும்'' என்று க்ருஷ்ணனை அபேக்ஷிக்க; அவன், ''எனக்கு க்ஷமமன்று'' என்ன, ''இத்தனையும் செய்யவேணும்'' என்று மறுக்கவொண்ணாதபடி நிர்ப்பந்திக்க அவனும் இசைந்தபின்பு, எல்லாரும் திரள இருந்து, ''பெண்கள் நோற்பார்; இதுக்கு வேண்டுவது க்ருஷ்ணன் ஸஹகரித்துக் கொடுப்பான்'' என்று t ஓமறைந்து ப க்ருஷ்ணன் கையிலே பெண்களைக் காட்டிக்கொடுத்து கோபவ்ருத்தரெல்லாரும் போனபின்பு, பெண்களும் க்ருஷ்ணனும் கூட v-இருந்து ''திருக்குரவைகோத்த ராத்ரிபோலே, பெண்காள்! இதுவும் நமக்கு ஒரு ராத்ரியே!'' என்று க்ருஷ்ணன் கொண்டாடி, ''இனி w அசிர்ப்புப் பிறக்க xவைகல் இருப்போமல்லோம்; இப்போது எல்லாரும் போய் அபரராத்ரியிலே வந்து எழுப்புங்கோள்; நோன்புக்குக் குளிக்க லாம்படி'' என்று அருளிச்செய்து, க்ருஷ்ணனும் பெண்களைப் பிரிந்துபோய் தரிக்க மாட்டாமே yநப்பின்னைப் பிராட்டி திருமாளிகையிலே புக்கான். பெண்களும் பரஸ்பர ஸம்ஸ்லேஷத்தாலே கால்நடை தந்துபோய்த் தந்தம் மாளிகையிலே புக்கு உறங்கப்புக்கவிடத்தில் கண்ணுறங்காமையாலே, முற்படவுணர்ந்தவர்கள், க்ருஷ்ண குணசேஷ்டிதங்களை நினைத்து எழுந்திருக்கமாட்டாதே கிடக்கிறவர்களை உணர்த்த,

---

ப (அம்மனைமீர்காள்) என்றது கோபவ்ருத்தரும் மற்றுமுண்டான கோபருங்கூட ஸம்மதித்து என்றபடி. ப (க்ருஷ்ணன் கையிலே பெண்களைக் காட்டிக்கொடுத்து) என்ற துக்கு கோத்தனும் அந்தனும் விழுக்கவேண்டி க்ருஷ்ணனுல்லவதித்த அபசாதத்தையும் பொறுக்கக்கடவோமல்லோம் நோன்புக்கு காட்டிக்கொடுத்தாரகளென்று கருத்து. v (இருந்து) என்ற அநந்தரம், பின் என்று அத்யாஹாரியம். w (அசிர்ப்பு) என்றது அதிங்கை என்றபடி. x (வைகல்) என்றது தெடும்போது என்றபடி. y A "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த" என்று க்ருஷ்ணனெழுப்பும்போது சொல்லுகையைப்பற்ற (நப்பின்னைப் பிராட்டி திருமாளிகையிலே) என்றது. நந்தகோபர் க்ருஹத்தில், நப்பின்னையுந் தானுமாகக் கண்வளர்ந்தருளுகிற க்ருஹத்தில் என்றபடி.

சி அ.—w (அசிர்ப்பு) ஸந்தேஹம்.

A திருப்பாவை 19.

தனித்தனியே சென்று எழுப்பி, எல்லாருங்கூடி, உத்₃தே₃ஶ்யமான ஸ்ரீநந்த₃கோ₄பர் திருமாளிகையிலேசென்றுக்ருஷ்ணனை எழுப்பித் z தங்கள் அபேக்ஷிதத்தையறிவித்து, a 1. "யாவதாவர்த்ததே சக்ரம்" என்று ஸ்ரீப₄ரதாழ்வான் பெருமாள் திருவடிகளிலே விழுந்து a₁வேண்டிக்கொண்டாற்போலேயும், b அர்ஜுநன் ஷட்கத்ரயத்திலுங்கூட b₁எடுப்பும் சாய்ப்புமாய்ச் சென்று சரமஶ்லோகம் b₂கேட்டு த₄ரித்தாற்போலேயும் b₃ அபேக்ஷிதம் பெற்று முடிக்கிறது.

c இவள்மடலூறாதே நோன்பிலே கைவைப்பானென்னென்னில் : d "ராஜ மஹிஷி உஞ்ச₂வ்ருத்திபண்ணி ஜீவித்தல் ராஜாவுக்கு அவத்₂யாவஹமாம்போலே மடலிலுங்காட்டில் இது அவத்₂யாவஹமாகையாலும், e சக்ரவர்த்தித்திருமகனைப் போலே e₁குணவ்யஸநியன்றியே தானும் ஒக்கமடலெடுப்பாரொரு e₂சுணைக்கேடன்

பெ. அ.-z (தங்களபேக்ஷிதத்தை அறிவிக்கை)யாவது A "இறைவா நீதாராய்" என்று தங்கள் புருஷார்த்த₂த்துக்கு நீயே உபாயமாகவேணுமென்று அறிவிக்கையும், B "உனக்கே நாமாட்செய்வோம்" என்று தங்கள் புருஷார்த்த₂ ஸ்வரூபத்தை அறிவிக்கையுமென்று கண்டு கொள்வது. z, b₄(தங்களபேக்ஷிதத்தை அறிவித்து அபேக்ஷிதம்பெற்று முடிக்கிறது) என்று அந்வயம். a, b அபேக்ஷிதம் பெற்று முடிக்கையிலே இரண்டு த₃ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் (யாவதி₃த்யாதி₃) a₂ (வேண்டிக்கொண்டாற்போலேயும்) என்றது 1. "ஸ்வாமித்வமநுவர்த்துய" என்று வேண்டிக்கொண்டு அபேக்ஷிதமான உபேயத்தைப் பெற்றுப் போலேயும் என்றபடி. b₂(எடுப்பும் சாய்ப்பும்) என்றது ஶோகாவிஷ்டனான அர்ஜுநனை க்ருஷ்ணன் எடுக்கவும் மீள அர்ஜுநன் ஶோகிக்கவும் என்றபடி. b₃(கேட்டு த₄ரித்தாற் போலேயும்) என்றது உபாயத்தைக் கேட்டு த₄ரித்தாற்போலேயும் என்றபடி. b₄(பெற்று முடிக்கிறார்) என்றது—பெற்ற வரைக்கிணங்கள் என்றபடி.

c, d, e ஆண்டாள், தம்பன்மாரைப்போலே எம்பெருமான் முகங்காட்டாவிடில் மடலூர இவண்ணுதோ? கோபிகர்துகூரத்தாலே நோன்பிலே கைவைப்பானென்? என்னும் ஶங்கையை அநுவதி₃த்து, அதுக்கு இரண்டுவிதமாகப் பரிஹரிக்கிறார் (இவள் மடலூராதே இத்யாதி₃) e₂ (குணவ்யஸநியன்றியே) என்றது குணத்துக்கு ஹாநி எங்கே வருகிறதே? என்னும் வ்யஸநமுடையனன்றிக்கே என்றபடி. e₃ சுணைக்கேடன்—லஜ்ஜாஹீநன்.

சி. அ—b₂ (எடுப்பும் சாய்ப்பும்) என்றது ஜ்ஞாநத்தினுடைய தலையெடுப்பும் சாய்ப்பும் என்றபடி. e₂(குணவ்யஸநியன்றியே) என்றது-குணஹாநியாகிறதென்கிற வ்யஸநமின்றியிலே என்றபடி.

A திருப்பாவை 28, B திருப்பாவை 29,

ஆகையாலும், மடல் இவ்விஷயத்தில் பலியாது என்று பார்த்து நோற்கிறார்கள். f உத்தேச்யம் வேறென்றுய் நோன்பு வ்யாஜமாத்ரமாகில் இவர்களுக்கு தேவதை வர்ஷிக்குமோ? என்னில்? g வ்ரதோபவாஸ கர்ஶிதமான வடிவைக் கண்டால் சேதநமன்றே, வர்ஷியாதோ! என்று பார்த்தார்கள்.

அவதாரிகை முற்றிற்று.

பெ.அ-f (உத்தேச்யம்) என்றது க்ருஷ்ணஸம்ஶ்லேஷம். g (வ்ரதோபவாஸ கர்ஶிதமான வடிவைக் கண்டால் சேதனமன்றே வர்ஷியாதோ) என்றது கோபவ்ருத்தர்தங்களுக்கு வர்ஷார்த்தமாக அநுமதிபண்ணி, பரதந்த்ரைகளாய் வ்ரதத்தை ஆசரிக்கும் பெண்களுக்கு அந்த பலம் அநுத்தேச்யமாகிலும் பண்ணிவைக்கும் கோபவ்ருத்தருக்கு உத்தேச்யமாகையாலே வர்ஷிக்கவேணுமென்று அறிந்து வர்ஷிக்கும் என்றபடி.

சி.அ. இப்ரபந்தத்தால் சொல்லியற்ற வேதார்த்தமாவது,— அவதார ஸ்தலமே ஸமாஶ்ரயணீய ஸ்தலம் என்றும், அவதீர்ணனானவனழகே ருசிஜநகம் என்றும், ருசியுடையார் ப்ராப்யத்வரையாலே அவனை மேல்விழுந்து அபேக்ஷிக்கை ப்ராப்தமென்றும், இவ்விஷயத்திலிழிவார்க்கு ருசியுடையாரடங்க உத்தேச்யர் என்றும், ப்ராப்யமாகிறது— அநுபலப்தஜநித ப்ரீதிகாரிதமாய் யாவதாத்மபாவியான கைங்கர்யம் என்றும், இதுக்கு ஸாதநம் அவன் திருவடிகள் என்றும் சொல்லிற்றாயிற்று.

திருப்பாவையில் முதற்பாட்டால்-நோன்புக்கடைத்த காலத்தைக் கொண்டாடி, இரண்டாம்பாட்டால்—இன்னதுசெய்வோம் இன்னது தவிர்வோம் என்றும், மூன்றும் பாட்டால்-நோன்புக்கு ஸஹகரிப்பார்க்கு பலிக்கும் பலமும், நாலாம்பாட்டால்—வர்ஷதேவதையை நியமித்து இன்னபடியும் இன்னபடியும் செய்யவேணுமென்றும், அஞ்சாம் பாட்டால்—நோன்பிலே இழியவே விரோதி பாபங்கள் நசிக்குமென்றும், மேல்பத்துப் பாட்டால்—பத்துப் பெண்களை எழுப்பி, பத்துப்பெண்களும் பஞ்சலக்ஷம் பெண்களுக்கும் உபலக்ஷணம், மேல் பதினஞ்சுபாட்டால் கோயில்காப்பானையும், திருவாசல் காப்பானையும், ஶ்ரீநந்தகோபரையும், யஶோதைப்பிராட்டியையும், நம்பி மூத்தபிரானையும், நப்பின்னைப் பிராட்டியையும், க்ருஷ்ணனையும் எழுப்பி மங்களாஶாஸநம் பண்ணி வேண்டுமவை ப்ரார்த்தித்துத் தலைக்கட்டுகிறது.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த

ஆறுயிரப்படி வ்யாக்யானம்

அவதாரிகை.

[பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த மூவாயிரப்படி வ்யாக்யானம் அவதாரிகையையே அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ஏற்றுக்கொண்டு அருளினார்.]

திருநாராயணபுரம் "ஆய்" ஜநந்யாசார்ய ஸ்வாமி
அருளிச்செய்த

ஈராயிரப்படி வ்யாக்யானம்

அவதாரிகை

எம்பெருமானுரை "ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச் செய்ய வேணும்" என்ன, "திருப்பல்லாண்டுக்கு ஆள்கிடைக்கிலும், திருப்பாவைக்கு ஆள்கிடையாது" என்று அருளிச்செய்தார். "மோவாயெழுந்தமுருட்டு கேட்கைக்கு அதிகாரிகளல்லர்; முலையெழுந்தார் கேட்க வேணும்; அவர்களிலும் எம்பெருமானைத் தாங்கள் அனுபவிக்கவேணுமென்றிருக்கும் பரிவுராணித்திகளான பிராட்டிமார்க்கும் கேட்க நிலமல்ல; பலசொல்லியென்? பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே சொல்லித் தானே கேட்குமித்தனை" என்று அருளிச்செய்தார்.

ஒரு பர்வதத்துக்கும் பரமாணுவுக்கும் உள்ள வாசிபோரும் ரிஷிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும். அத்தனைவாசிபோரும் ஆழ்வார்களுக்கும் ரிஷிகளுக்கும். அப்படியே பெரியாழ்வாருக்கும் ஆழ்வார்களுக்கும். அத்தனை வாசி போரும் பெரியாழ்வாருக்கும் திருமகளாருக்கும். பதின்மருடைய ஜ்ஞானமும் ஸ்தீதனமாக இவள்பக்கலிலேயிறே குடிகொண்டது. பத்துப்பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே.

ஆழ்வார்கள் எம்பெருமானுலே மயர்வற மதி நலமருளப் பெற்றனர். இவள் தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலமருளினாள்; இவள் அருளுகையாவது எம்பெருமானை எழுப்பித் தன்குறையை எம்பெருமானுக்கு விண்ணப்பம்செய்கை.

இனியபெருமாள்படி ஆழ்வார்கள்தம் ஸ்ரீபரதாழ்வான்படி பெரியாழ்வார்தம் ஸ்ரீராத்ருஞ்ஜயன்படி அவர் திருமகள்தம் ஆழ்வார்களும் இனியபெருமானும் பகவதநுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபரதாழ்வானும் பெரியாழ்வாரும் பகவத்ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள்; ஸ்ரீராத்ருஞ்ஜயனும் நாய்ச்சியாரும் ஸ்ரீமதுரகவிகளோடொப்பர்கள். நாய்ச்சியார் பெரியாழ்வாரையே உபாயமாக விச்வஸித்திருப்பர்.

இனியபெருமாள் 1. "பாலயாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த" ராகுப் போலே இவளும் தொடக்கமே பிடித்து ஸ்நேஹித்துப் போரும். இப்படி விலக்ஷணையான நாய்ச்சியார் அருளிச்செய்த ப்ரபந்தமிறே திருப்பாவை.

இப்ரபந்தத்துக்குக் கருத்து—மார்கழி நீராட என்கிறது. இத்தை ஒரு வ்யாஜமாகக் கொண்டு நோன்பு முன்னுக எம்பெருமானை, "உனக்கு ஸேஷமாயிருக்கிற இவ்வாத்மா அநர்த்தப்படாதபடி பண்ணி இதற்கு ஸ்வரூபானுகுணமான கைங்கர்யத்தையும் கொடுத்து அதுதான் யாவதாத்மபாவியாம்படி பண்ணியருளவேணும்" என்று அபேக்ஷிக்கிறாள்.

அர்ஜுனன் ஷட்கத்ரயத்தாலுங்கூட 2. "மாமேகம் ஸரணம் வ்ரஜ" என்று அவனைக்கொண்டு உபாயத்தை அறுதியிடுவித்தாப்போலே, இவளும் முதற்பாட்டில் A "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று உபாயத்தை அறுதியிட்டுச்

A திருப்பாவை 1.

A 'சிற்றஞ்சிறு காலே'யிலே உபேயத்தை அறுதியிட்டுக்கொண்டு நடுவே தேஹயாத்ரைக்கு உடலாக்கிவிடுகிறுள். B "அன்றென்கூவை பட்டினி நாள்" என்னுமவர் மகளிறே. C "ஒழிவில் காலமெல்லாம்" என்றுமுண்டிறே. மாலாகாரர் மகளிறே.

ஆழ்வார்களுக்கு அந்யாபதேஶம் ஆண்களாயிருக்கச் செய்தே பெண்களாகை. இவளுக்கு அந்யாபதேஶம் ப்ராஹ்மணியான இவள் இடைச்சியாகை. D "குலம்தரு"மிறே. E "பண்டைக்குலத்தைத் தவிர்ந்து" என்றுமுண்டிறே.

இவளுடைய ஜ்ஞானபக்திகள் க்ஷணந்தோறும் ப்ரகாஶத்விஷயத்திலே கைவளர, வடபெருங்கோயிலுடையான் முகங்கொடாதேயிருக்க, இவளும் "ஜ்ஞாபகர்யார்த்திகளுக்காக எல்லைநடந்து கொடுத்து இளைப்பாலே கிடக்கிறுன்" என்று புத்தி பண்ணித் தன் திருமுலைத்தடங்களையிட்டு நெருக்கினுள்; அத்தாலும் எழுந்திருந்து ப்ரதிவசனம் பண்ணக் கண்டிலள். காணுமையாலே வ்யஜ்ஞுதிகளாலே மீளவும் மிமிரோபசாரம் பண்ணினுள். அத்தாலும் எழுந்திருக்கக் காணுமையாலே "இது நோவல்ல; நம் பக்கல் ப்ரணயாபராத்தத்தாலே கிடக்கிறுன்" என்று நினைத்து மிகவும் தளர்ந்து, திருவாய்ப்பாடியில் பெண்பிள்ளைகளை அநுஸந்தித்துப் பார்த்தாள். அது காலாந்தரத்திலேயாகையாலே உதவுப்பெற்றிலோம் என்று தளர்ந்து மிகவும் அவஸந்நையாய், 'நமக்கு தரிக்கைக்கு விரகு என்?' என்று கூப்பிடச்செய்தே சில ஸாபராணிப்ரபுருதிகள் க்ருஷ்ணாவதாரத்திலே க்ருஷ்ணனேடே கலந்து பிரிந்த பெண்கள் தங்களாற்றுமையாலே 1. 'துஷ்ட காளிய திஷ்டாத்ர க்ருஷ்ணேஹமிதி சாப்ரா" என்று க்ருஷ்ணனை அனுகரித்து தரித்தாப்போலே இவளையும் அனுகரித்து தரிக்கச் சொல்ல, இவளும் க்ருஷ்ணனை அனுகரிப்பதிலும், க்ருஷ்ணனை அனுகரித்த பெண்களை அனுகரிக்கை நன்று' என்று பார்த்து அனுகரித்து தரிக்கிறுள். அவ்வனுகாரம் முற்றி இடைமுடியும், இடைநடையும், இடைப்பேச்சும், முடை நாற்றமுமாய் விட்டது. இப்படி தானிருந்த ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், வடபெருங்கோயில் ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், வடபெருங்கோயிலுடையானே க்ருஷ்ணனுகவும், தன்னைப் பிராட்டியாகவும் தோழிமாராகவும் அனுகரித்துக்கொண்டு நோற்கிறுள்.

நோன்புக்கடியென்னென்னில்? மீமாம்ஸையிலே ஹோளாகாதிகரணந்யாயத்தாலே மிஷ்டாச்சாரஸித்தம். F "மேலையார் செய்வனகள்" என்று, நோன்பு நோற்க அறுதியிட்ட வாயாலே எல்லை நிலத்திலே நிற்கிற நாய்ச்சியார்தாமே அருளிச்செய்தார். பொய்யே "நோற்கிறேனென்று சொல்லலாமோ? என்னில்; விவாஹ ஸமயத்திலும் ப்ராணந்திக ஸமயத்திலும் பொய் சொல்லலாமென்று ஶாஸ்த்ரமுண்டு. உண்டென்று சொல்ல வேணுமோ? அனுஷ்டானமேயன்றோ ப்ரதானம். இவ்விரண்டுக்கும் கைம்முதல் வேறே தேட வேணுமோ? இவர்களுடைய ஆற்றுமைதான் என் செய்யாது?

அழகிது, இதுதான் இங்கு விளைந்தபடியென்னென்னில்: ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனுய், புருஷோத்தமனுய், புண்டரீகாக்ஷனுய், ஸ்ரீவைகுண்ட நிகேதனனுய், ஸாத்விகைஸ்ஸேவ்யமானனுயிருக்கிற ஸர்வேஶ்வரன் தன் க்ருபையாலே நிர்ஹேதுகமாக வந்துபிறந்தருளி, தன்னுடைய லீலாதிகளாலே ஜனங்களை

A திருப்பாவை 29, B பெரியாழ்-திரு 5-1-6, C திருவாய் 3-3-1, D பெரிய-திரு 1-1-9, E நாச்சியார்-நப்பல்லாண்டு 5, F திருப்பாவை 26.

ஈடுபடுத்தி வாரிப்பிடித்துக்கொண்டு போவானொருவனுகையாலே தத்தர்த்தமாகத் திருவாய்ப்பாடியிலே வந்து திருவவதரித்துப் பெண்களும் தானுமாய் வளர்ந்தருளுகிற காலத்திலே க்ருஷ்ணனும் ப்ராப்தயௌவனனுய், பெண்களும் குமாரிகளாயிருக்கிற இருப்பைக் கண்டு "இவனிப்படி தூர்த்தனுயிரா நின்றான்; இவன் பாடு பெண்கள் சேர்த்துக்கட்வர்களன்று" என்று எல்லீருமாகத் திரண்டு இப் பெண்பிள்ளைகளை நிலவறைகளிலே அடைத்தார்கள். க்ருஷ்ணன் பிறந்த பின்பு வெண்ணெய்களெல்லாம் மறைய வைத்தார்கள். இப்படி வெண்ணெயும் பெண்களும் க்ருஷ்ணனும் பிரிந்த தர்மஹாநி கண்டாவது, இவர்கள் பண்ணின பாக்யமாவது நாடு வர்ஷமின்றிக்கே நோவுபட்டுப் பசுக்களுக்கு ஊணின்றிக்கே ப்ராணனின்றிக்கே ஸஸ்யவ்ருத்திகளுமில்லையாய்த்து. நாடுவர்ஷமின்றிக்கே இருக்கிறபடி கண்டு கோபவ்ருத்தர்களெல்லாரும் திரண்டு, "பசுக்களும் மனுஷ்யரும் பிழைக்கைக்கு விரகென்?" என்று விசாரிக்க, அசரீரிபோலே புருஷவாக்யம் "தேவதை திருப்பதுகை வர்ஷமுண்டு" என்று பிறக்க, இவர்களும் "வர்ஷார்த்தமாக இவ்வூரில் பெண்பிள்ளைகளையே நோற்கக் கடவர்கள்" என்றார்கள். இக்ரமம்—1. "அயி வ்ருஷா: பாம்லாநா" என்றது போய், 2. "அகில்பில்லோ வ்ருஷா:" என்று புண்யகாலம் வந்தாப்போலேயிருந்தது. அநந்தரம் வர்ஷார்த்தமாக நோற்கைக்காக நிலவறைகளிலே அடைத்த பெண்களைப் புறப்பட்விட்டு, நந்தகோபன் வ்ருத்தராகையாலே எல்லாவற்றுக்கும் கடவனுக க்ருஷ்ணனையும் ஸாந்த்வநாதனம் பண்ணிப் பெண்களையும் க்ருஷ்ணனையும் சேர்விட்டு ஸரணம் புக, க்ருஷ்ணனும் "கோபீபரிவ்ருதோ ராத்ரிம் ஸேவேத்ர மமகோரமம்" என்று சொல்லுகிறபடியே தண்டலிட்ட நிலவும், கவிள்ளவிட்ட நாண்மலர்ச் செறிவும், இருண்ட சோலையும், பளிங்குப்பாறையும், செங்குன்றுத்தாழ்வரையும், பரப்புமாறப்பூத்த காவியோடையும், நாயடியிட்டுப்புகுந்து தென்றலுமாயிருக்கிற யமுனை தீரத்திலே பஞ்சலக்ஷம் குடியில் பெண்களையுடையு மெய்க்காட்டிக் கொண்டு கழகமிருந்து, "இனி நாம் வைகலிருக்கில் மாதாபித்ருக்கள் அதிசங்கை பண்ணுவர்கள்; உத்தமகங்களிலே போய்ச் சேருங்கோள்" என்று தானும் தப்பினேன் பிராட்டி திருமாளிகை சேர, பெண்களும் தத்தாமகங்களிலேபோய்ப் படுக்கையிலே சேர, படுக்கை அடிகொதித்து A 'மென்மலர்ப் பள்ளி . வெம் பள்ளி'யாய் மத்யராத்ரியிலே எழுந்திருந்து சிலர் உறங்குகிற பெண்பிள்ளைகளை எழுப்புகிறார்கள்.

— "உறங்குகிறார் யார்? எழுப்புகிறார் யார்?" என்னில்: குணவித்தர் உறங்குகிறார்கள், கைங்கர்யபரர் எழுப்புகிறார்கள். ராமேசரம் ஒருபடிப்பட்டிராதிறே. 4. "சிங்கம் பிங்கம்" அப்படி க்ருஷ்ணகுணங்களும் நாநாவாயிறே இருப்பது. இரண்டு ப்ரகாரமும் பரமபதத்திலுமுண்டு. B அமரரும் முனிவருமிறே. முனிவரோடொப்பார் உறங்குகிறார்கள், அமரரோடொப்பார் எழுப்புகிறார்கள்.

ஆக, நோன்புக்குக் காலத்தைச் சொல்லி, இதுக்குச் செய்யக் கடவன சொல்லி, அனுமதி பண்ணினார்க்குண்டான நன்மை சொல்லி, வர்ஷிக்கும்படியை நியமித்து, "நாம் இதிலே அத்வேஷகல ப்ரதிபந்தகங்களும் போம்" என்று சொல்லி, மேல் பத்துப்பாட்டாலே ஒருவரையொருவர் எழுப்புகிறார்கள். மேல் விஸ்தரமாக விருக்கும்.

ஈராயிரப்படி அவதாரிகை முற்றிற்று.

A திருவாய் 9-9-4, B திருவாய் 10-9-9.

திருநாராயணபுரம் "ஆய்" ஜநத்யாசார்யஸ்வாமி

அருளிச் செய்த

நாலாயிரப்படி வ்யாக்யானம்

அவதாரிகை.

1. "அநாதி மாயயா ஸுப்த: யதா ஜீவ: ப்ரபுத்யதே" என்கிறபடியே அநாதிகாலம் ஒருபோகியாக உறங்கினவன் இனி அநந்தகாலம் ஒருபோகியாக உணர்ந்தேயிருக்கும்படி சொல்லுகிறது. உணர்ந்தது எம்பெருமானையாகையாலே உணர்த்திக்கு பாதகமில்லை. ப்ரக்ருதியைச் செறியச்செறிய இருள் மிகும்; எம்பெருமானைச் செறியச்செறிய உணர்த்தி மிகும். ஜ்ஞாநாநந்தமயமான ஆத்மஸ்வரூபத்துக்குத் திரோதாநம் பிறந்த வித்தனையிறே பண்டு செய்தது. ஸ்வரூபஸித்தியேயன்றே ப்ராப்யம். A "பகற் கண்டேன் நாரணனைக் கண்டேன்"—உறங்காத என்னையும் கண்டேன். அஸ்தமியாத ஆதித்யனையும் கண்டேன். 2. "பாஸ்கரேண ப்ரபாயதா". B "திருக் கண்டேன்' என்றபின்பு, B 'பெரும்மேனி கண்டேன்' என்றருளிறே. ப்ரபையை முந்துறக் கண்டிறே ஆதித்யனைக் காண்பது. 3. "ஸுப்ரபாதா ச மே நிசா" என்று அக்ரூரனுக்கும் கம்ஸனைக்கொன்றதாலே விடிவு காணவொண்ணாத ராத்ரியும் விடிந்து அஸ்தமியாத பகலாய்த்து கும்பகர்ணனுக்கு உறக்கம் தேட்டம். விபீஷணாழ்வானுக்கு உணர்த்தி தேட்டம், ராவணனுடைய உணர்த்தியில் கும்பகர்ணனுடைய உறக்கம் கன்றியிருந்தது; உணர்ந்தால் எம்பெருமான்பக்கலிலே செல்லுகைக்கு இருப்புமத்தனையிறே. 4. "ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராமஸ்ஸலக்ஷ்மண:" 5. "ஸுப்ரபாதாத்ய ரஜநீ மதுராவாரயோஷிதாம்" என்று அங்குள்ளார்க்கு நல்விடிவும் கம்சனுக்கு விடியாத ராத்ரியுமாய்த்து என்றருளினிறே. ஆதித்யனுண்டானாலும் கண்ணுள்ளார்க்கிறே விடிவுள்ளது.

ஆண்டாளுக்குப் பத்துத் தமப்பன்மாருக்கு உண்டான ஆற்றுமையும் ஸ்த்ரீத்வமாகப் பெற்று இவர்பக்கலிலே குடிகொண்டது. ஆழ்வார்களுக்கு தரிக்கைக்கும் ஒரு பொற்றையுண்டு, தாங்களான தன்மை அழிந்திருக்கச் செய்தே நாய்ச்சியார்தனையாக அந்யாபதேசத்தாலே பேசியனுபவித்தார்கள். இவள் C "பிறந்திட்டாள்" என்னுமாபோலே அந்யாபதேசத்தாலே அநுபவிக்கவேண்டாதே அவனைப் பருத்திபட்டபன்னிரண்டும் படுத்தவல்ல ஸ்த்ரீத்வத்தை உடையளாயிருக்கும்; அவர்களிற்காட்டில் ஆற்றுமை தன்னேற்றம், (எம்பெருமான் தன்னழகையும் குணங்களையும் இவளுக்குக் கொடுத்தான்,) பிராட்டிமாரும் தங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும் இவளுக்குக் கொடுத்தார்கள்; தமப்பன்மாரைப்போலே ஆக்கனை பெண்மையன்று இவளது.

A இர-திருவ 81, B முன்-திருவ 1, C திருவாய் 6-5-10.

இவளுக்கு ஓர் அந்யாபதேஶமுண்டு; அதாகிறது ப்ராஹ்மணி இடைச்சி யாகை. A "குலந்தரும்" என்று அவனுக்கு அண்ணிய குலமிறே குலமாவது.

1. "பதிஸம்யோகஸுலப்யம் வயோ த்ருஷ்ட்வா ச மே பிதா।
சிந்தார்ணவகத: பாரம் நாஸஸாதயிதாப்லவோ யதா॥"

என்கிறபடியே ஒரு கொள்கொம்பிலே சேர்க்கவேண்டும் பருவமாய், B "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்னும் தன்மையையுடையளாய், C "கோல் தேடியோடும் கொழுந்தே போன்றதே மால்தேடியோடும் மனம்" என்கிறபடியே அபிநிவேஶத்தைப் பண்ணிக்கொண்டு 'வடபெருங் கோயிலுடையானெங்கே D தழுவி முழுசிப் பரிமாற வேணும்' என்று இவள் செல்ல, இவள் நினைத்தபடிகளுக்கு அவன் முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நையாய், 'இவனெடு கலந்து பரிமாறப் பெற்றருண்டோ, இல்லையோ?' என்று ஆராய்ந்துபார்த்தவிடத்தில், 'திருவாய்ப் பாடியில் பெண்பிள்ளைகள் யதாமனோரதம் இவனெடு அநுபவிக்கப் பெற்றார்கள்' என்று கேட்டு 'அதுக்கு நாம் உதவப் பெற்றிலோம்' என்று இன்னுதாக;

2. "கோவர்தனோ கிரிவர:" அவன் பருப்பத பன்னிரண்டுங் காட்டின மலை கிடந்தது. 2. "யமுநா நதீ ஸா" அவனும் பெண்களும் புக்குக் கலக்கின நீர் இன்னமும் தெளிந்ததில்லை, மஞ்சளும் குங்குமாதிகளும் இப்போதும் காணலாம். அந்தாழ்வான் திருமுக்குளத்திலே புக்குத் தடவினார். 'இது வென்' என்ன, 'அப்பெண்பிள்ளைகள் குளித்ததொரு மஞ்சட் கொழுந்தாகிலும் கிடைக்குமாகக் கருதிக் காண்' என்றார். 2. "புருந்தாவநம் ச" அவனுலும் பெண்களாலும் பருத்தி பட்ட பன்னிரண்டும்பட்ட ஸ்ரீபுருந்தாவநத்தில் திருக்குரவைகோத்த அடிச்சுவடும் இன்னமும் அழிந்ததில்லை. 2. "மதுரா ச புரீ புராணீ" ஆஸ்ரிதர்க்கு வயிறெரித்தலான தேஶம். கொடுந்தேசமென்றுமாம். ஆன படும் ஆகரம்போலே ஸர்வேஶ்வரன் படும் ஆகரம். 2. "அத்யாபி ஹந்த ஸுலபா: க்ருதிநாம் ஜநாநாம்" கால்நடைதரும் பாக்ய வான்களுக்கு இப்போதும் காணலாம் கிடீர்.

(மதிநிறைந்த) மாஸம் நேர்பட்டாற்போலேயிருந்ததி பக்ஷமும் நேர்பட்டபடி! 2. ''ஆபூர்யமாணே பக்ஷே புண்யே நக்ஷத்ரே'' என்று மங்க₃ளகார்யம் செய்வார்க்கு விதி₄க்கிற விதி₄யும் இவர்களுக்குக் கோல்விழுக்காட்டிலே சேரவிழுந்தது. பக₄வத் ப்ரவணராயிருப்பாருடைய தே₃ஹயாத்ரையை, விதி₄தானே பின்செல்லக்கடவதா யிறேயிருப்பது. 3. ''த்வதீ₃யக₄ம்பீ₄ரமனோநுஸாரிண:'' என்னக்கடவதிறே. முன்பு இருள் தேட்டமானாற்போலே, இப்போது நிலாத் தேட்டமாகிறதாய்த்து. காமுகர்க்கும் சோரர்க்கும் இருள் தேட்டமாயிருக்குமிறே. B ''நள்ளிருட்கணென்னை உய்த்திடு மின்'' என்றிறே முன்பிருப்பது. ''தாய்க்கும் தகப்பனுக்கும் அஞ்சவேண்டா, இருளிலே புறப்பட்டு அணைக்கலாம்'' என்கிறாள். C ''இருளன்ன மாமேனி யெம்மிறை''; இருளோடே சேர்ந்திறே வடிவுதானிருப்பது. ''பி₄ஷக்குக்கள் வாசல் ஆர்த்தர் கட்டணமாய்க் கிடக்குமாபோலே, ஶ்ரீநந்த₃கோ₃பர் வாசல் க்ருஷ்ணனுலே புண்பட்ட பெண்கள் கட்டணமாய்க் கிடக்குமாய்க் கொள்ளீர்!'' என்று பட்டர். அப்படி நிலாவுக்கு இரும்க்க வேண்டாதே ஊரைசந்து மேலெழுதிதிட்ட நாளிறே. ஒருவரையொருவர் எழுப்புகைக்கும் க்ருஷ்ண முக₂ாவலோகநத்துக்கும் நிலாவுண்டாகப் பெற்றதென்கை. கூயாதி₃கள் போய்ப் பூர்ணனுகிறானிறே அவனும்; இவர்களும், 'நாமுமுளோமாய், பூர்ணைகளாக வாரிகோள்' என்கிறார்கள்.

(நன்னுள் ஆல்!) மாஸத்துக்கும் பக்ஷத்துக்கும் நாயகக் கல்போலேயிருப்ப தொரு நாள் நேர்பட்டபடியென்! (நன்னுளால்!) முன்பு கழிந்தவை தியநாள்போலே! (நன்னுளால்!) நம்மை க்ருஷ்ணனுடு கிட்டவொட்டாதவர்கள்தாங்களே, க்ருஷ்ணனுடே சேருகைக்கு ப்ரமாணம் பண்ணிக்கொடுத்த நாளாகப் பெற்றதே! பக₄வத்₄

A திருவாய் 3-3-1 B நாச் திரு 12-3 C பெரிய திருவ 26

விழுங்குகிறபோன இவனுக்கு பகவல்லாபமுண்டான நாளிறே - நன்னாளாகிறது. அவன் A எதிர் சூழல்புக்குத் திரிய, இவன் வைமுக்யம் பண்ணுகை தவிர்ந்து, அவன் க்ருஷி பலித்த நாளென்கை. 1. ''தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி'' என்று-'நானே இவற்றைக் குழியைக்கல்லி மணலிடுவேன்' என்ற ஸர்வேச்வரனே, 2. ''தத்தாமி புத்தியோகம் தம்'' என்னும் நாளிறே. 3. ''அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா சமே நிசா'' என்னுமாபோலே. 'கம்ஸன் சோறுண்டு வளர்ந்த எனக்கு விடியும் நாள் உண்டாவதே!' என்றநாளிறே. 4. ''ஸுப்ரபாதாத்ய ரஜநீ மதுராவாஸயோஷிதாம்'' என்று-ஸ்ரீமதுரையிலுள்ளார்க்கு வெளிச் செறித்தாப்போலேயும்; 4. ''ஸுப்ரபாதா''-திருவாய்ப்பாடியினின்றும் எழுந்தருளின போது அங்குள்ளார்க்கு அஸ்தமித்து, ஸ்ரீமதுரையிலுள்ளார்க்கு விடிந்ததிறே. 5. ''அஸூர்யமிவ ஸூர்யேண நிவாதமிவ வாயுநா''-அப்படைவீட்டில் கண்ணில்லாதார்க்குக் கண்ணுண்டானாற்போலேயும், ப்ராணனில்லாதார்க்கு ப்ராணனுண்டானாற் போலேயுமாய்த்து இவர்களுக்கும்.

(நன்னாள்) திருவயோத்யையிலுள்ளார், பெருமாளைப் பொன்முடிசூட்டியனுபவிக்கப் பார்த்துக்கொண்டிருக்க, வெறுந்தறையான நாள்போலன்றிக்கே, மீண்டுவந்து திருமுடி சூடியருளின நாள்போலே (நன்னாள்) B ''பகல்கண்டேன்''. உதிப்பது அஸ்தமிப்பதாகாநிற்கச் செய்தேயிறே B ''பகல்கண்டேன்'' என்றது. அதாகிறது — B ''நாரணனைக் கண்டேன்'' என்கை, — அஸ்தமியாத ஆதித்யனைக் கண்டேன். ப்ராதேசிகனல்லாத ஆதித்யனைக் கண்டேன். ப்ராப்தாப்ராப்தவிவேகம் பண்ணிஞல் ஓரிரவும் ஒரு பகலுமேயுள்ளது. பகவத்ப்ரத்யாஸத்திக்கு முன்பெல்லாம் பகல் விரவாத இரவாய், பின்பெல்லாம் இரவு விரவாத பகலாயாய்த்திருப்பது. C ''சென்றநாள் செல்லாத'' இத்யாதி. D கையார் சக்கரத்தின் முன்னுள்போலேயிறே கழிந்த நாள். மாஸத்தைக்கொண்டாடுவது, பக்ஷத்தைக்கொண்டாடுவது, நாளைக் கொண்டாடுவதாய், இதிலே இவர்களுக்குக் கிடக்கிற தீவரைவெள்ளமென்கான! இவர்கள் ப்ராப்யருசியிருந்தபடி.

(நீராட) தோழிமார் ஒருவர்க்கொருவர் பவ்யைகளாயிருந்தார்களேயாகிலும், பகவத்ஸம்பந்தத்தைப் பார்த்தவாறே கைரவ்யைகளாயிருப்பார்களிறே. வயிற்றிற் பிறந்தவர்களென்று பாராதே, E ''கஞ்சுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே'' என்றும், F ''பெருந்தவத்தளென்றல்லாற் பேசலாமே'' என்றும், G ''நேரிழை நடந்தாள்'' என்றும் சொல்லாநின்றார்களிறே; இப்படியாகையாலே ஸ்ரீவைஷ்ணவர்கள் ''நீராட'' என்கிறது. ஆசார்யர்கள் ''நம்பி'' என்கிறதும், ஸ்ரீமதுரகவிகள் ''நம்பி'' என்கையாலே. பட்டர்ஸ்ரீபாதத்தைக்கழுவித் தீர்த்தம் கொள்ளும் ஆண்டாள். எம்பெருமானாரும் ஸ்ரீவைஷ்ணவர்களும் எழுந்தருளா நிற்க, பெரியநம்பி தாம் தண்டனிட்டுக் கிடந்தார்; ''நம்மை இங்ஙனே செய்தரு

A திருவாய் 2-7-6, B இர-திருவ-81. C மூன்-திருவ-17. D திருவாய் 5-1. E பெரிய திரு 8-2-9. F திருநெடு 20. G திருவாய் 6-7-9.

வித்று என்?'' என்று கேட்க, ''நான் ஆளவந்தாரெழுந்தருளுகிறரென்றிருந்தேன்'' என்று அருளிச்செய்தார். இவையிறே பகவத்ஸம்பந்தத்தையிட்டு கௌரவிக்கும்படி. (நீராட) இவர்கள் தங்களுக்கு ''நீராட'' என்று நோயாசையிறே. மழைநாழலம் ஒருத்தியுடைய விரஹாக்நியாலே சுவறுமே! (நீராட) தமிழர் கலவியை, ''சுனையாடல்'' என்றுய்த்துச்சொல்லுவது. க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்தை யுண்டு இவர்கள் ''நீராட'' என்கிறது. 1. ''ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோ ऽஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்'' என்னுமாபோலே.

அல்பபலமான ஸ்வர்க்காநுபவத்துக்கு அதிகாரார்த்தமாகப் பண்ண வேண்டும் தேவைகளுக்கு ஒரெல்லையில்லை; இந்த நிரவதிகஸம்பத்தைப் பெறுகைக்கு எவ்வளவு யோக்யதை வேணும்? என்னில்; (போதுவீர் போதுமினே) நாலுநாள் ஊர்வஶீகடாக்ஷம்பெற்று ஸ்வர்க்காநுபவம்பண்ணி, பின்பு ''த்வம்ஸ'' என்று தள்ளுகிற இதுக்கு, கூஶ்மாண்டகணஹோமாதிகள் பண்ணவேண்டாநின்றது. 2. ''நச புநராவர்த்ததே'' என்று அபுநராவ்ருத்திலக்ஷணமோக்ஷத்துக்கு இச்சாமாத்ரமே அமைவானென்? என்னில்: பெறுகிற பேற்றுக்கு ஷத்ருஶாஸ்த்ரநமில்லாமையாலே இங்கு அபிமதஹித்திக்கு இச்சையே வேண்டுவதென்கை. இச்சை, ஸர்வோபாயஸாதாரணமாயிருக்குமே. ''அல்லோம்'' என்னுதாரெல்லாரும் அதிகாரிகள், இவ்விச்சை, ஸாதநத்தில் புகாது; சைதந்ய கார்யமத்தனை. A ''கூடும்மனமுடையீரிறே. (போதுவீர் போதுமினே) அது அப்ராப்தவிஷயமாகையாலே அதிகாரிஸம்பத்தி உண்டாக்கிக்கொண்டு இழியவேணும்; இது வகுத்ததாகையாலே இச்சைக்கு மேற்பட வேண்டுவதில்லை. நெடுங்காலம் இழந்ததும் இவன்பக்கல் இச்சை விலாமை. ஆகையாலே, இவனிச்சையே வேண்டுவது; ஶக்தியும் ப்ராப்தியும் அத்தலையிலே பூர்ணமாகையாலே. இனி இவன் சேதநனானவாசிக்கு இச்சையே மிறேவேண்டுவது, இது இல்லையாகில், இவனுக்கு இது புருஷார்த்தமாகமாட்டாதிறே, கஷ்டாவிஷயாநுபவத்துக்குத் தனி தேட்டமானாற்போலே, அப்ரிச்சிந்நமான விஷயத்துக்குத் துணை தேட்டமாகையாலே ஸஹகாரிகளைச் சேர்க்கிறார்கள். (போதுமினே) ப்ரதிகூலரையுமகப்பட, 3. ''தேந மைத்ரீ பவது'' என்று ஸஹகாரிகளாம்படி திருத்த நினைக்குமவர்கள், அபிமுகரைப் பெற்றால் விடுவர்களோ? (போதுமினே) B ''போவான்போகின்றார்'' என்று வழிப்போக்கேயிறே பேறும். (போதுமினே) இரைந்தவர்கள் காலில் விழுகிறார்கள். தங்கள் பேறுயிருந்தபடி. எங்களை வாழ்வித்துக்கொள் என்கிறார்கள். அவர்கள் முன்னேபோக, அந்த நடையழகு கண்டு தாங்கள் பின்னேபோகவிறே நினைக்கிறது.

(நேரிழையீர்) —இவர்கள் வடிவுதானே ருசிக்கு ப்ரகாஶகமாயிருக்கும்படி. 4. ''ஸௌம்யரூப:'' என்கிறபடியே. ''நீராடப்போதுவீர்'' என்ற ப்ரஸங்கத்தாலே ஒருபடி ஆப்ரணம் பூண்டாற்போலேயானபடி. C ''புனையிழை களைவும் ஆடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று'' என்னு

A திருப்பல் 4. B திருப்பாவை 8. C திருவாய் 8-9-5.

மாபோலே - ஆப₃ரணங்களை மாறுடிப் பூண்டிருந்தபடியாலும், பரியட்ட மாறுட்டத்தாலும், வடிவில் வேறுபாட்டாலும் இவள் ஸர்வேச்வரனுக்கு ப்ரஸாத₃பாத்ரமாஞ்ஞென்று தோற்றுநின்றதென்றுற்போலே, "க்ருஷ்ணன் எப்போது அணைக்கும்" என்று அறியாமையாலே ஒப்பித்தபடியேயிறேயிருப்பது. நேர்மையால் நினைக்கிறது - வைலக்ஷண்யத்தை; "இழை" என்று - ஆப₃ரணம்.

(சீர்மல்குமாய்ப்பாடி) பண்டே பாலாலும் வெண்ணெயாலும் ஸம்ருத்₃தி₄மாயிருக்கச்செய்தே, உப₃யவிபூ₄தியுக்தன் பிறந்த ஐச்வர்யமுமுண்டிறே. பஞ்சலக்ஷம் குடியையுடைத்தாய், அவர்களுக்கு த₃நமான புசு முதலான ஸம்பத்தாலே ஸம்ருத்₃த₄மாய், அதுதான் பிள்ளைகள் கால்நலத்தாலே ஒன்று இரட்டியாய், 1. "ப்ரீதிரோத₃மஸஹிஷ்ட ஸா புரீ" என்னும்படியிறே ஸம்பத்து மிகுந்திருக்கும்படி. (சீர்மல்குமாய்ப்பாடி) இங்குத்தை *ஐச்வர்யத்தினுடைய வாய்க்கால் காணும் நித்யவிபூ₄தியிலைச்வர்யம்; கு₃ணதி₃க்யத்தாலேயிறே வஸ்துவுக்கு ஏற்றம்; அது உள்ளது இங்கேயிறே. த₄ர்மி அதுவாகையாலே மேன்மையும் இங்கே உண்டு; நீர்மை தன்னேற்றமாம், அங்கு, தான் கும்பீடுகொண்டிருக்கும்; இங்கு, தான் கும்பிடுகிற இடமிறே. A "தொழுகையும் இவைகண்ட அசோதை" என்னக்கடவதிறே. இது கண்ணைக்காகவிறே வைதி₃க புத்ரர்கள் வ்யாஜத்தாலே நாய்ச்சிமார் அழைத்துக் கண்டது. இங்குத்தைக்கும் அடி அவ்விருப்பென்னுமிடம் ப்ரமாணம் சொல்லக் கேட்குமித்தனையிறே; இவ்விடத்திலைச்வர்யம் அதிலும் விஞ்சியிருக்குமென்னுமிடம்-கண்ணுலே காணலாகிறதிறே. மநுஷ்யத்வே, பரத்வமிறே இங்கு.

(ஆய்ப்பாடி) இடக்கையும் வலக்கையும் அறியாத ஊர், உக்த்யாப₃ாஸம் கொண்டு /பதகம் பேசுவாரில்லை, தம்பிதி₃ம்புக்குத் தமையன் பெருநிலைநிற்கும் ஊர். 2. "ந ராம: பரதா₃ராந் வை சக்ஷுர்ப்₄யாமபி பச்யதி" என்கிற கு₃ணம் கண்டு பின்தொடர்வாரன்றிக்கே, தி₃ம்புகண்டு மேல்விழுவாரிருக்கிற ஊர். "இந்த்₃ரனுக்கிடும் சோற்றை மலைக்கிடுங்கோள்" என்றுல் அதுக்கு இசையும் ஊரிறே, (ஆய்ப்பாடி) 3. "க்₄ருதவத்ய: க்ஷீரவத்ய: ப₃பூ₄வு: புத்ரஜந்மத:। யதா₄ ச க்ருஷ்ண உத்₃பூ₄தஸ்ததா₄ப்ரப்₄ருதி மே வ்ரஜே॥ யாவத்₃து₄க்₄த₃ம் ஸுதா₃பூ₄தம் தாவதே₃வ க்₄ருதம் ப₃வேத்॥". நாஸ்திகராயிருப்பார் அநுமாநத்தைக்கொண்டு ப்ரத்யக்ஷத்தை விதி₃க்கும்புக்கால் ஸம்ஶயம் வர்த்தியாதே; கண்டத்தை இல்லையாவதென்? என்று, கண்டதுக்கு மேற்பட அறியாமையாலே நாஸ்திகரில்லாத ஊர். க்ருஷ்ணன் தி₃ம்புசெய்து மூலையடியே நடக்கிலும் 'அதுவேயமையும்' என்றிருக்கும் ஊர்.

(செல்வச்சிறுமீர்காள்) ஆத்மாவுக்கு ஶ்ரீமத்தையாகிறது-ப₄க₃வத்ஸம்பர்கமிறே. 4. "அந்தரிக்ஷக₃தஶ்ஶ்ரீமாந்" என்னக்கடவதிறே. 4. [அந்தரிக்ஷக₃த: ஶ்ரீமாந்] ராவண ப₃வநத்திலின்றும் நாலடியிட்டவாறே ஶ்ரீவைஷ்ணவஶ்ரீ மாலையிட்டபடி. வலிபாதி வழக்குப்பாதி த₄ர்மம்பாதியாக, க்ருஷ்ணனுலே ஸ்பர்ஶிக்கப்பட்டிறே

A பெரு-திரு 7-8 *(பா) ஐச்வர்யத்தையுடையவர் கால் நலம் /(பா) பக்கம்.

பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாருமிருப்பது. (சிறுமீர்காள்) பருவம் கழுநதருததல, முர்ட்டாண்களாயிருத்தல் செய்யாதேயிருக்கை; அஹங்கார ஸ்பர்ஶமாதல், தே₃வதாந்தரஸ்பர்ஶமாதல் இன்றிக்கேயிருக்கை. இத்தால் சொல்லிற்றாய்த்து—அந்யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களின்றிக்கேயிருக்கை.

(கூர்வேல் கொடுந்தொழிலன்) நமக்கு அவனே நோக்கித் தருமவனைச் சொல்லுங்கோள் என்கிறார்கள்! சிறியாத்தானேப்போலே பசும்புல் சாவ மிதியாதவர், பிள்ளை பிறந்தவீடே வேலிப் புகரெழக் கடையவிட்டாராய்த்து. (கொடுந்தொழிலன்) தொட்டில் காற்கடையிலே எறும்பூரிலும் வேலைக்கொண்டு தொடராநிற்பராய்த்து. பெரியாழ்வார் பெண்பிள்ளையாகையாலே அங்குத்தைக்குக் காவலுண்டென்று தரிக்கிறாள். (நந்தகோபன் குமரன்) ஶ்ரீநந்த₃கோபர் ஸந்நிதி₄யில் A கோற்கீழ்க்கன்றாய் நிற்கும்படி, நாலிரண்டு மாஸம் காடுபாய்ந்து பெண்களோடு இட்டீடு கொண்டிறேதியிவது. B (ஆற்றிலிருந்து) பிள்ளாய்! சிலர் எங்கள்தென்று அபி₄மானித்திருக்கும் நிலத்திலேயிருந்தோமோ? ஸர்வஸாத₄ரண ஸ்த₂லங்காணும். B (விளையாடுவோங்களே) தன்னையொழிய நாங்கள் அந்யபரைகளன்றே; தன்னிடையாட்டம் பட்டோமோ? நாங்கள் முன் நீமைசெய்தோமாகிலுமாமிறே. தன்னைக்கடைக்கண்ணால் கணிசித்தோமோ? தன்னை இங்கு இட்டெண்ணினார் இல்லையிறே! B (சேற்றிலெரிந்து) பிறர் அறியாதபடி கைகளாலே ஸ்பர்ஶித்தாலாகாதோ? B(வாதுகில் கைக்கொண்டு) இடைப்பெண்களானபின்பாலே ஆபரணமும் பரியட்டமும் களைந்திட்டுவைத்திறே குளிப்பது; இவற்றைக் கைகூடிக்கொள்ளுமாய்த்து, B (கூற்றிற்கடியனையோடி) தொடர அகப்படாதே ஓடும்படி. தன் ஜீவனத்திலும் ஒன்றும் குறையாதே கொண்டான்; எங்கள் ஜீவனமும் என்னும் ஶேஷமாமே கொண்டான். B (அகம்பக்கு) வழிபறிப்பது. அஸாத₄ரண ஸ்த₂லத்திலேயிருப்பது. B (மாற்றமும் தாராலை இன்று முற்றும்) வார்த்தை ஏதேனும் வளையும் துகிலுமோ? 'வளையம் பரியட்டமும் தரப்பார்த்திலேன்' என்றல் ஆகாதோ? இப்படியிறே தம்பிலே கைவள்ளர்ங்கு கிரியும்படி. அவர்கள் வந்து முறைப்பட்டால் "இவனையோ இவர்கள் இப்படி சொல்லுவது?" என்னும்படி விநயம் பாவித்து நிற்கும்.

(ஏராந்தக்கண்ணி இதமாத₃) க்ருஷ்ணனுபவத்தாற் பிறந்த ஹர்ஷமடையக் கண்ணிலே காணலாயிருக்கை. நாட்டார்க்குப் புண்ய பாபங்கள் கலசியிருக்கையாலே ஒரு விரூபமுண்டிறே கண்ணிலே; இவளுக்கு ஸர்வேஶ்வரனைப் பிள்ளையாகப் பெற்ற பாக்₃யமடையக் கண்ணிலே தோற்றியிருக்கும். C "அம்பன்னகண்ணுளசோதை தன் சிங்கம்" என்னக்கடவதிறே. "பிள்ளைக்குத் தாய்வழியாகாதே *கண்" என்று பிள்ளையுறங்காவில்லிதா₃ஸர் வார்த்தை. ஒரு நாடாக 1. "ஸதா₃ பஶ்யந்தி" பண்ணி அநுப₄விக்கிற விஷயத்தை, தானே ஒரு மடைசெய்து அநுப₄விக்கிறவளுடைய கண்களிறே. (இளஞ்சிங்கம்) "சிங்கக்குருகு" என்று ஆழ்வான்வார்த்தை. "நந்தகோபன் குமரன்" என்று, தமப்பனுருக்கு பூவ்யனுயிருக்கும்படி சொல்லிற்று;

A நாச்-திரு 14-1. B பெரியாழ் திரு 2-10-1. C பெரிய் திரு 6-8-6 * (பா) கரண்!

"இளஞ்சிங்கம்" என்று தாயார்க்கு அடங்காதபடி சொல்லுகிறது. தன் களவுக்குப் பெருநிலை நின்றன்றி அவளுக்குப் பிழைக்கவொண்ணுதிருக்கை. A "அஞ்சவுரப்பா ளசோதை" இறே. கருத்தறிந்து தீம்பிலே கைவளரும்படி காணும் அவள் நியமிக்கும்படி. இவள் பார்வையறிந்து பரிமாறும் பூவஞ்ஞனிறே அவனும். இவளும், அவன் A ஆணுட்டங்கண்டு ஆநந்த, நிர்ப்பூரையாயிருக்குமாய்த்து; B "அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனுய்" என்று ஒளிக்கவேண்டுவார் புகுந்தால் ஏதேனுமொரு பதார்த்தத்தாலே மறைத்து வைக்கலாம்படியிருக்குமாய்த்து. இங்கு § ஆண்டான் "மந்த்ரலிங்கமும் தோற்றுமே சொல்லுகிறுள்காண்" என்னுமாம். நிலவறையிலே அடையுண்ட பெண்கள்பக்கலிலே புக்கு அவர்கள் புத்தியதிநமாகத் தன்னைச் சமைத்துவைக்குமாய்த்து. இவற்றையெல்லாம் முன்னிட்டு, "இளஞ்சிங்கம்" என்கிறார்கள். "சிறுமீர்காள்" என்றல், "இளஞ்சிங்கம்" என்னவேண்டாவோ? C "நந்தகோபாலா எழுந்திராய்" என்கைக்கும் C "அசோதாயறிவுருய்" என்கைக்கும் அடியிருக்கிறபடி.

(கார்மேனி) தாயும் தமப்பனும் ஒளித்துவைத்தாலும் விடவொண்ணுத வடிவழகு. இவர்கள் விடாய் திரும்படியான வடிவு. 1. "மேகஸ்யாமம் மஹாபாஹும்" என்கிறபடியே - வ்ரதகர்ஶிதைகளான பெண்கள் விடாய் தீர்க்கும் குளிர்ந்த வடிவழகிருக்கிறபடி. (செங்கண்) வாத்ஸல்யத்தைத் தெரிவிக்கிற கண்கள். ஒரு மேகத்திலே இரண்டு தாமரை பூத்தாப்போலேயிருக்கை. இராத்திருநாள் ஸேவித்தார் கண்போலேயிருக்கை. இவர்களிலும் இழவு தன்னதென்னுமிடம் கண்ணிலே தோற்றவிருக்கும். 2. "ஊர்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே" என்னில், இத்தலை 3. "ந ஜீவேயம் க்ஷணமபி" என்றிருக்குமவனிறே. (கதிர்மதியம்போல் முகத்தான்) 4. "தத்ர கோவிந்தமாஸீநம் ப்ரஸந்நாதித்யவர்ச்சஸம்"—சந்த்ரன் தண்ணளியிலே ஆதித்யன்புகரை ஊட்டினுற்போலேயிருக்கை. (முகத்தான்) என்று-உபமேயந்தன்னையே சொல்லுகிறார்கள். உபமேயத்தைக் காணுமளவுமிறே அது நிற்பது. ஆனாலும் அநுபவிப்பார்க்கு ஒரு துறையிட்டுக்கொண்டு இழிய வேணுமே.

(நாராயணனே) வடிவழகைக் கண்டு வேறொரு விஷயத்தைப் பற்றிற்றுக வேண்டாதே, ப்ராப்த விஷயமாயிருக்கை. உகந்த விஷயமே வகுத்த விஷயமாகை. அவனுலும் தன்னையநுபவிக்கத் "தாரேன்" என்னவொண்ணுதுகாணும்! இத்தலை வைமுக்யம் பண்ணினவன்றும் தான் ஆபிமுக்யம் பண்ணிப்போருமவன். நாராயணனுவாகஸ்ம்ருதிமாத்ரமான வஸ்து, இடைச்சிகளுக்குங்கூட ஸுலபமான்படி. இந்நோன்பிலே அதிகரிப்பார்க்கு மந்த்ரமிது என்கிறது. இவ்வளவேயுமன்று. தமப்பன்மார் சொல்லக்கேட்டிருப்பர்களே—D "நன்மை தீமைகளொன்றுமறியேன் நாரணுவென்னுமித்தனையல்லால்" என்று. 5. "நாராயணஸப்தமாத்ரம்" என்றும், 6. "நாராயண பரம்ப்ரஹ்ம" என்றும். (நமக்கே) அத்திருநாமத்திற் சொல்லுகிறபடியே ஸர்வ விஷயமாகவன்று; ஸம்பந்த ஜ்ஞாநமுடைய நமக்கே.

A நாச்-திரு 3-9. B பெரியாழ் திரு 3-2-5. C திருப்பாவை 17. D பெரியாழ் திரு 5-1-3. § (பா) "ஆண்டாள் மந்த்ரலிங்கமும் தோற்றுமே சொல்லுகிறுள்காண்" என்றபடி.

ஸ்வரக்ஷணத்தில் அந்வயமில்லாத நமக்கு. "நாராயணனே" என்கிறவிடத்தில் அவத₃ாரணம், உபாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது; இதில் அவத₃ாரணம், ப்ராப்தாவினுடைய ஆகிஞ்சந்யத்தை அறிவிக்கிறது. அவனுக்கு உபாயப₄ாவம் ஸ்வரூபாந்தர்க₃தம். அத்தலையில் நிறைவாலும் அவனே உபாயம், இத்தலையில் குறைவாலும் அவனே உபாயம். 1. "ப₃லிபு₄ஜி ஶிஶுபாலே தாத்₃ருக₃ாக₃ஸ்கரே வா குணலவஸஹவாஸாத் த்வத்க்ஷமா ஸங்குசந்தீ". போக்கற்றவனுக்குத் திறந்துகிடந்த வாசலிலே புகவேணும்; வைகிறவனுக்கும் பேர்சொல்லி வையவேணும். இத்தனையிறே கா₃கமும் சிசுபாலனும் செய்தது: இத்தனையாலும் விஷயீகரித்தானிறே இருவரையும்; இக்கைம்முதலும் இல்லையென்கிறார்கள் — (நமக்கே) என்கிறவித்தால். (பறைதருவான்) A "உக்கமும் தட்டொளியும்" என்று நாட்டுக்கு ஒரு பேர் சொல்லி, கிட்டினவாறே B "உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்" என்னுநின்றார்களிறே. B "இற்றைப்பறைகொள்வானன்றுகாண்" என்கையாலே யாவத₃ாத்மபா₄வியான அடிமையை நினைக்கிறது. C "பாடிப்பறை கொண்டு" என்றத்தையும் நிஷேதி₄த்துக்கொண்டு B "இற்றைப்பறைகொள்வானன்று காண்" என்றத்தையும் நினைக்கிறது.

(பாரோர்புகழ) இசையாதவர்களும் கொண்டாடும்படி. ஸ்வரூபஜ்ஞாநமுடையாருடைய யாத்ரையை, ஸ்வரூபஜ்ஞானமில்லாதார் நிந்தி₃ப்பர்கள்; அது வேண்டாவிறே இவர்களுக்கு, வர்ஷமுண்டாகையாலே. "படிந்து நீராடப்போதுவீர் போதுமினோ" என்று அந்வயம். (ஏலோரெம்பாவாய்) ஏல்-இப்படியாகில் என்றபடி. 'ஏல்' என்றது ஸம்பே₄த₃நை. (ஓர்) பு த்₃தி₄பண்ணு. "எம்பாவாய்" என்றது — 'எங்கள் ச₂ந்த₃ஸ்ஸைப் பின்சென்று' என்றபடி. அன்றிக்கே, பாத₃பூரணமான அவ்யயமாகவுமாம். "எம்பாவாய்" என்றது - மேல் காமஸமாஶ்ரயணமாகையாலே, "பாவாய்" என்று - ரதியைச் சொல்லிற்றாகவுமாம். எங்கள் ச₂ந்த₃ானுவ்ருத்தியைப் பண்ணு என்னவுமாம். 'ச வை து ஹி'க்கள்போலே, பாத₃த்தைப் பூரித்துக் கிடக்கிறதென்று சொல்லுகிறது.

காலத்தைக் கொண்டாடி, ப₃லத்தைச்சொல்லி, அதி₄காரிகளைச்சொல்லி, இது கேட்டபின்பு அவர்களுக்குப் பிறந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லி, "க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்துக்கு ஏகாந்தமான ஊரிலே பிறக்கப்பெற்ற நீங்களும் சிலரே!" என்று, ஶ்ரீநந்த₃கோபர்க்கும் யசோதைப்பிராட்டிக்கும் பூ₄ர்யனுகையாலே இழக்கவேண்டாவென்று, அவர்கள் ஒளித்தாலும் விடவொண்ணுதபடியான வடிவழகைச்சொல்லி, விரும்பினாலும் விடவொண்ணுதபடியான ப்ராப்தியைச் சொல்லி, உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லி, ஆகிஞ்சந்யத்தில் நைரபேக்ஷ்யம் சொல்லி, உகவாதாரும் உகந்து கொண்டாடும்படி சொல்லித்தலைக்கட்டுகிறார். 1.

A திருப்பாவை 20. B திருப்பாவை 29. C திருப்பாவை 27.

ஈராயிரப்படி—முதற்பாட்டு

1. அவ:— முதற்பாட்டுக்கு வாக்யார்த்தம்:- "ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் நாராயணனே" என்று அருளிச்செய்கிறார்.

வ்யா:—(மார்கழித்திங்கள்) க்ருஷ்ணனுடே தங்களைக் கூட்டின காலத்தைக் கொண்டாடுகிறார்கள். 1."க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று நிலைநின்ற தர்மத்தைப் பற்றுகிற காலம். மழைவிழுந்து ஹ்ருதயம் குளிர்ந்து ஸத்வோத்தரமான காலம். மலையிலுச்சியில் கிடந்த ஸஸ்யங்களும், நிலத்தில் கிடந்த ஸஸ்யங்களும் ஒக்கப் பருவம்செய்யும் காலம். 2. "சைத்ர: ஸ்ரீமாநயம் மாஸ:" என்று பெருமாளை அனுபவிக்க வந்தவர்கள் சைத்ரமாஸத்தைக் கொண்டாடினாற்போலே மார்கழி மாஸத்தைக் கொண்டாடுகிறார்கள். (மார்கழித்திங்கள்) 3."மாஸாநாம் மார்கசீர்ஷோ(ஹம்" என்று எம்பெருமானும் அபிமானித்த மாஸமாகையாலே வைஷ்ணவமாஸம்.

(மதிநிறைந்த) 4."ஆபூர்யமாணே பக்ஷே புண்யே நக்ஷத்ரே" என்று பூர்வபக்ஷமுமாகப் பெற்றது. (மதிநிறைந்த) பஞ்சலக்ஷம்குடியில் சந்த்ரர்களும் திரண்ட நாள். A"திங்கள் திருமுகத்துச் சேயிழையார்"நிறே. (மதிநிறைந்த நன்னாள்) 5."அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிஸா" என்று கம்ஸன் ஸம்பந்தத்தாலே "விடிவு காணப்புகா நின்ருமே?" என்றிருந்த அக்ரூரனுக்கு விடிந்தாற்போலே விடிந்த நாள். (நன்னாளால்) ப்ரக்ருத்யாத்ம விவேகம் பிறந்த நாள்.

(நீராட) அவனைப் பிரிந்த காலமுழுகையாலே ஸீத காலமே கோடைகாலமாய், விரஹதாபமாறக் குளிக்கை. எம்மடுவிலேதான் இவர்கள் நீராடுகிறதென்னில்: B "தயரதன் பெற்ற மரதக மணித்தடம்" திலேயிறே தங்கள் குணசேஷ்டிதங்களாலே வயிரவுருக்காக உருத்கின்வத்தர்களாகக் கொள்ளீர் க்ருஷ்ணனை. (நீராட) என்றது—மாறிமாறித் தங்கள்மெல்லிய தோளிலே அவன் தோயவும், இவர்கள் அவன் மார்பிலே தோயவுமிறே. (தீதாவது C "அப்பன் திருவருள் மூழ்கினள்" இறே. (போதுவீர்) இச்சாமாத்ரமே அதிகாரம். (போதுவீர் போதுமினே) அம்மடுவிலிறங்கும்போது தனி இறங்கவொண்ணுதாய்க் கொள்ளீர். 6. "ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத" என்று—நல்லது தானுண்ணாள் தனி புஜிக்குமவர்களன்றிறே. (போதுவீர் போதுமினே) போருகைதானே ப்ரயோஜனம். D "அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண்" இறே. அவ்விஷயத்துக்குத் தனி வர்த்தகமானவோபாதி இவ்விஷயத்துக்குத் திரள்வர்த்தகம். E "தொண்டீர் எல்லீரும் வாரீர்" இறே. (கோழையீர்) மார்கழி நீராடவென்று நிணைப்பிட்ட பின்பு பெண்களுடம்பிலே பிறந்த செவ்வி. F "உருவுடையார்" என்றபடி வடிவழகமைந்திருக்கிறது. ப்ரதிபத்தியை ஆபரணமாகவுடையார்.

(சீர்மல்குமாய்ப்பாடி) கண்டவிடமெங்கும் க்ருஷ்ணன் தீம்புகளும் அவன் வார்த்தைகளுமாய்ச் செல்லுகை. 7."கோவிந்த தாமோதர மாதவேதி"... (செல்வச்

A திருப்பாவை 30. B திருவாய் 10-1.8. C திருவாய் 8-9-5. D நான்-திருவ 39. E திருவாய் 5-2-3. F நாச்-திரு 1-6.

சிறுமீர்காள்) பெண்களுக்கு ஸ்ரீமத்தையாவது 1. "லக்ஷ்மமேஜ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று இளையபெருமாளைப் போலேயிருக்கை. (சிறுமீர்காள்) A "மறந்தும் புறந் தொழாமாந்தர்".

(கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்) நம் அபேக்ஷிதம் செய்து தலைக்கட்டுவானொருவன்; (கூர் வேல்) பெரியாழ்வார் மகளிறே; அங்குத்தைக்குக் காவலுண்டென்று தரித்திருக்கிறாள். பிள்ளை பிறந்தவாறே வேலைக்கடையவிட்டான். B 'மாணிக்கமே என் மணியே'யிறே. இதுடையவர்கள் காலிலேயிறே லோகமாகக் குனிவது. (நந்தகோபன்) 2."நந்த₃ாமி பர்யங்கபி த₃ர்ஶநேந பூ₃மி த்₃ருஷ்ட்வா ச புனர்யுவேவ" 3. "யுவேவ வஸுதே₃வோ பூ₄த் விஹாயாப்₃யாக₃தாம் ஜராம்"-பிள்ளையைக் கண்ட ப்ரீதியாலே ஆநந்த₃த்தை உடையவனுகவுமாம், நரைதிரை மாறி இளகிப்பதித்தபடி என்றுமாம். (குமரன்) சக்ரவர்த்தித் திருமகன் போலே விநயம் பூ₃வித்திருப்பன்.

(ஏரார்ந்த கண்ணி) 4. "ஸதா₃ பர்யந்தி" என்று பிள்ளையைக் காண்கைக்குத் திறந்திடுவாசலாக நிலைக்கதவைப் பிடுங்கிப்பொகட்ட கண்கள். தமப்பனூர் கையிலே வேலொன்றுங்கொண்டு நோக்கும். C "அம்பன்னகண்ணுள் அசோதை" ஆகையாலே இவள் முகத்திலே அம்பிரண்டுகொண்டு நோக்கும். (அசோதை) D "அஞ்சவுரப்பாளசோதை ஆணடவிட்டிட்டிருக்கும்". அனுமதிபண்ணி நாட்டுக்கும் யஶஸ்ஸைக் கொடுக்கவல்லள். (இளஞ்சிங்கம்) அவனுக்குக் குமரன், இவளுக்கு இளஞ்சிங்கம். ஒருத்தரும் முடிசூட்டவேண்டா அதுக்கு, தானே ம்ருகே₂ந்த்₃ரமிறே. கம்ஸனை முடியச்செய்யவல்ல மிடுக்குண்டாகை.

(கார்மேனி) நம்முடைய விடாயெல்லாம் தீரும்படியான அழகியதிருமேனி. (கார்மேனி) ஆஶ்சர்யமான திருமேனி. 5. "நீலமேக₄நிப₄மஞ்ஜுபுஞ்ஜஶ்யாமகுந்தளம்" என்று ஆழ்வான் அருளிச்செய்தபடியேயிருந்த திருமேனி. அவர்கள் நீராடப் புக்கவாறே பின்பு அவனுடம்பிலே இட்ட செவ்வி. (செங்கண்) நம்பக்கல் வாத்ஸல்யாதிஶயத்தாலே குதறிச் சிவந்தகண்கள். அஞ்ஜனகி₃ரியில் இரண்டு தாமரைப்பொய்கைபோலே. (கதிர்மதிம்) போல்முகத்தான்) தங்களாபத்துத்தீர அவனைக் கண்டால் நகடு கழற்றின சந்த்₃ரனைப்போலே இவர்களைக் கண்ட பின்பு அவன் முகம் குளிர்ந்தபடி. (கதிர்மதியம்) இவன் முகம் வெய்யிலிலே நிலவை ஊட்டினாற் போலேயிருக்கை; 6. "சந்த்₃ரபா₄ஸ்கரவர்ச்சஸம்" E "முளைக் கதிரை" என்று சொல்லும்படியிருக்கை. ஆஶ்ரிதர்க்கு நிலவுபோலே; அநாஶ்ரிதர்க்கு வெய்யில்போலே. ஆஶ்ரிதர்க்குப் F புனலுரு; அநாஶ்ரிதர்க்கு F அனலுரு வாய் இருக்கும். ஆஶ்ரிதர்க்குச் சந்த்₃ரன்; அநாஶ்ரிதர்க்கு ஆதி₃த்யன். (போல் முகத்தான்) நகட்டுச் சந்த்₃ரனும் கார்கால ஆதி₃த்யனும் போலல்லன். அம் முகத்தையுடையவனென்னுமத்தனை. G "என்மகன்முகம் நேரொவ்வாய்" என்றும், 7. "சந்த்₃ரகாந்தாநநம் ராமம்" என்றும் சொல்லுமாபோலே.

A நான்-திருவ 68. B பெரியாழ் திரு 2-4-9 C பெரிய திரு 6-8-6 D நாச்-திரு 3-9 E திருநெடு 14 F திருநெடு 1 G. பெரியாழ் திரு 1-4-3.

(நாராயணனே) கோவர்த்தனேத்தரணுதிகளாலே அபலைகளான பெண்களுக்குங்கூடத் தெரியும்படி ஈச்வரத்வம் இரு பொறியிட்டுக்கொண்டு போருகையாலே இத்திருநாமத்தைச் சொல்லிற்று.

1. "ஏஷ நாராயண: ச்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: 1
நாகபர்யங்கம் உத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் 11"

என்றுரைக்களிறே. ஸமிதைபாதிஸாவித்ரிபாதியாகையன்றிக்கே அவன்தானே செய்யக்கடவனென்கிறது "நாராயணனே" என்ற அவதாரணை. (நமக்கே) அகிஞ்சனரான நமக்கு. A"வெறிதே அருள் செய்வர்" என்றிருந்த நமக்கு. ஸ்வயத்னஸாத்யன் என்றிராத நமக்கு. (பறை தருவான்) நோன்புக்கு உபகரணங்களைப் பறையென்கிறது. அவனுடைய ஸம்ச்லேஷம் அவர்களுக்குப்பறை, நமக்குக் கைங்கர்யம். இது இடைச்சிகள் துடைப்பேச்சு. ஸகோத்ரிகளறியுமத்தனை.

(பாரோர் புகழ) நன்மை தீமையறியாதார் புகழ. க்ருஷ்ணனையும் தங்களையும் சேரவொட்டாத இடையரும் இடைச்சிகளும் கொண்டாடும்படி, அனுகூலர் கொண்டாட, ப்ரதிகூலரும் கொண்டாட, இந்த ரஸமறியார்களாகிலும் நாமும் க்ருஷ்ணனும் சேர்ந்த சேர்த்தி கண்டு நாடு புகழ. (படிந்து) அபிநிவேசித்து முன்பு சொன்ன மடுவிலே அவகாஹித்து. [படிந்து—நீராடப் போருங்கோள்] என்று கீழோடே அந்வயம். (ஏலோரெம்பாவாய்) இது பாதபூரணூர்த்தமான அவ்யயம். ஏல்—கேள், ஓர்—இத்தை அறுதியிட்டுக்கொள், எம்பாவாய்—எம்பிள்ளாய்; நோன்புக்குச் சந்தஸ்ஸென்றுமாம். 1.

நாலாயிரப்படி—முதற்பாட்டு

அவ:— முதற்பாட்டு, ப்ரபந்தாத்பர்யமான ப்ராப்யப்ராபக ஸங்க்ரஹம். காலத்தைக் கொண்டாடுகிறதென்றும் சொல்லுவர்கள்.

வ்யா:—(மார்கழி) B"ஒழிவில்காலம்" என்றும், 2."அநாதிர் பகவாந் கால:" என்றும் காலத்தைக் கொண்டாடினாற்போலே மாஸத்தைக் கொண்டாடுகிறது. க்ஷேத்ர விஷயங்களில் புக்கால் 'ஸமயம் பண்ணின காலம் அறவற்றே' என்றிருக்கும். குணதிக விஷயங்களில் இழிந்தார்க்கு புஜிக்கிற விஷயத்தில் அக்காலந்தன்னைக் கொண்டாடவேண்டும்படியிருக்கும். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் எம்பெருமானுர் கேட்டருளியிருக்க, B "ஒழிவில் காலமெல்லாம் ஒழிவில்காலமெல்லாம்" என்றிங்ஙனே ஒரு நாளெல்லாம் பாடிப்பாடிக் கண்ணநீரோடே விட்டுப்போம்.

(மார்கழி) மழையின்றிக்கே இட்டபயிர் தீய்தல், வெள்ளமாய் இட்டபயிர் அழிதல் செய்யாத காலம். மலையுச்சியில் கிடந்த பீஜங்களோடு நிலத்தில் கிடந்த பீஜங்களோடு வாசியற எல்லாம் பருவம் செய்யும் காலம். (திங்கள்) ஒருநாளில்

A திருவாய் 8-7-8 B திருவாய் 3-3-1.

ப்₃ராஹ்ம முஹூர்த்தம்போலே ஸம்வத்ஸரத்தில் ப்₃ராஹ்ம முஹூர்த்தமென்கை; 1. "ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்த்₂ய சிந்தயேத்₃ஆத்மநோ ஹிதம்" என்று வெளிறு கழிந்து நிலைநின்ற தர்மத்தையிறே இவர்கள் சிந்திக்கிறது. 2. "மாஸாநாம் மார்க்க₂ஸீர்ஷோஹம்" என்று வைஷ்ணவமான மாஸம். திருவத்₃யயநம் தொடங்கும் காலமிறே. 3. "சைத்ர:ஸ்ரீமாநயம் மாஸ:". இதொரு காலமே! என்கிறது. ஜக₃த்தை யடைய வாழ்விக்கும் காலம். 3. [புண்ய:] புண்யமும் தானே. அத்தாவது அவனை அழைத்துத் தரும் காலம், 3. [புஷ்பிதக்₂ராநந:] படைவீடுபோலே நாம் விதானிக்க வேண்டா, தானே அலங்கரித்தது. வ்யதிரேகத்தில் 4. "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:" இறே. அன்றிக்கே பா₃த₄கரான இடையர் உறங்கும் காலமென்றுமாம். 'ஸந்த்₄யை தப்பிற்று' என்று ப்₃ராஹ்மணரைப்போலே அகரணே ப்ரத்யவாயமில்லாமையாலே உணரார்கள்.

(மதிநிறைந்த) க்ருஷ்ணனும் பெண்களும் சேரவேணுமென்று நினைப்பிட்ட நாளாகையாலே, A "நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின்" என்று இருள் தேடவேண்டாக்காலமென்கை. B "இருளின்னமா மேனி" என்று போலியான இருள் தேட வேண்டா; அவனைக்காணப் பெறுகையாலே நிலவுக்கு இருய்க்க வேண்டாக்காலம். பெண்களுக்கு முகங்கண்டு வாழலாம் காலம். திங்கள் முகங்கள் திரண்டகாலம். C திங்கள் திருமுகத்துச் சேயிழையாரிறே. ஜ்ஞாநப₃லம் பூர்ணமான காலம். D "முளைத்தெழுந்த திங்கள் தானுய்".

(நன்னுள்) 5." தாநஹம் த்₃விஷத: க்ரூராந்" என்று இவற்றின் அபராத₄த்தை நினைத்து, பெற்ற தாய் பசலையற்றிருக்குமாபோலே, குழியைக்கல்லி மண்ணை யிட்டு அமுக்குவேனென்னுமது தவிர்த்து. 6. "த₃த₃ாமி பு₃த்₃தி₃யோக₃ம் தம்" என்றும், 7. "ஏஷ ஸர்வஸ்வபூ₄தஸ்து" என்றும் இரங்கப்பண்ணும் நாள். ஊராரிசைந்து மேலெழுத்திட்ட நாள். 8."வத்₃யதாம்" என்ற மஹாராஜர் 9."அஸ்மாபி₄ஸ்துல்யோ ப₄வது" என்றுப்போலே அநாதி₃காலம் பண்ணிப் போந்த விபரீதருசி தவிர்ந்த நாள்: து₃ர்லப₄மான ப₄க₃வத்₃ருசி பிறந்த நாள். 10. "கத₃ா ந்வஹம் ஸமேஷ்யர்மி" என்று அவனுமுகக்கும் நாள். 11."ஸுப்ர(ப₄ாதா)ச(மே நிஶா"—கம்ஸன் சோறுண்டு திரிந்த எனக்கு ஒரு நல்விடிவுண்டாகப்புகாநின்றதோ?' என்றிருந்தேன். இப்படியிருந்த எனக்கு ஒருகாலம் அஸ்தமியாத்படி விடிந்தது. 12. "ஸுப்ரப₄ாதாத்₃ய ரஜநீ மது₃ராவாஸ யோஷிதாம்"—வில்விழவினன்று ஸ்ரீமது₃ரையில் பெண்பிள்ளைகளுக்கு விடிந்தாற போலே. E"பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன்"-இதுக்கு முன்பெல்லாம் ராத்ரி யாயிருந்தபடி; உறங்காத என்னையும் கண்டேன், அஸ்தமியாத ஆதி₃த்யனையும் கண்டேன். ப₃ாஹ்யமான விடிவன்றிக்கே ஆந்தரமான விடிவு. நாராயண₃ாநுபவம்.

(கீரோட) அவனைப் பிரிந்த நாளாகையாலே ஸீதகாலமே கோடையாய்த்து அவ் விரஹதாபம் தீர எம்மடுவிலேயோ இவர்கள் ஆடப்புகுகிறது?-F "தயரதன் பெற்ற மரகதமணித்தடம்" G "மெல்லியல் தோள் தோய்ந்தாய்" 13. "ஏஷ ப்₃ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்₃ரீஷ்மே ஸீதமிவ ஹ்ரத₃ம்"—நீராட்டுமவன் முன்னே சமைந்து நின்றான்; ஆடுவாரையிறே அழைக்க வேண்டுவது. ருசி பிறந்தபின்பு அவ்வருகுள்ள ப்ராப்ய

A நாச்-திரு 12-3 B பெரிய திருவ 26 C திருப்பாவை 30 D திருநெடு 1 E இர். திருவ 81 F திருவாய் 10-1-8 G திருநெடு 13.

தூமும், அர்ச்சிராதி₃கதி₃சிந்தையும், ததீ₃யரையுமவனையுமனுப₄விக்கையும் காலமுடைய ப்ராப்யத்திலே புகுமத்தனை. (நீராட) தம் மகளை நீராட்டினலும் ஆழ்வாரென்னவேண்டுமாப்போலே, ப₄க₄வத்₃விஷயத்துக்கு அண்ணியாரைத் தோழிமாரென்றும் சிஷ்யர்களென்றுமில்லை, பூஜ்யராகக் கொண்டாடவேணுமென்கை. இதுக்கு ஒரு சிஷ்டாசாரமுண்டு. ஆண்டாள் பட்டர் ஸ்ரீபாதத்தைக் கழுவித் தீர்த்த₄ம் கொள்ளும். (நீராட) க்ருஷ்ணனும் பெண்களும் மாறிமாறி முழுக்கிட. (போதுவீர்) இச்சை₄யே அதி₄காரமென்கை, திருவேங்கட யாத்ரை போலே நீராடப் போகையே உத்₃தே₃ச்யம்.

(போது:மினே) அவர்களிரந்தார்களல்லர்; தன் செல்லாமையாலே இரக்கிறள். க்ஷுத்₃ர விஷயங்களுக்குத் தனியல்லது ஆகாதாப்போலே, இவ்விஷயத்துக்குத் திரளல்லது ஆகாது. இவ்விஷயத்தில் இச்சா₂மாத்ரமமைகிறபடி எங்ஙனே புறம்புள்ளவற்றுக்குப் பெருநெறிகள் செல்லாநிற்க? என்னில்; இங்கு அபரிச்சே₂த்₃யமான விஷயமாகையாலும், தானே உபாயமாகையாலும், சேதனனுன வாசிக்கு இச்சா₂மாத்ரம் அமைந்தது. (போதுமினே) அவர்கள் முன்னே போகத் தான் பின்னே போக நினைக்கிறள். அவர்கள் போக இசைவர்களோ? என்னில்; ஸ்ரீ ப₄ரதாழ்வானைப் போலே 'இவளுக்கு ப்ரியம்' என்றவாறே அத்தையுமிசைவர்கள். போகாதேயிருந்தால் ஆற்றலாமாகில் தவிருங்கோள். (நீராட) க்ருஷ்ணனும் தாங்களும் மாறிமாறி முழுகக் கூப்பிட, ஈடுபாட்டாலே அவர்களெழுந்திருக்க சக்தரல்லர்கள்; தன் செல்லாமை இவளிரக்கிறள். ப்ரதிகூலரையுமகப்பட. 1."தே₂ந மைத்₃ரீ ப₄வது தே" என்னக்கடவர்களுக்கு அநுகூலரையொழியச் செல்லுமோ? (நேரிழையீர்) அவனுடு கலந்தார்க்கிறே அவனுடு கலக்கவேணுமென்று ஆற்றுமமிகுவது. A"பூனயிழைகளணிவும்" ஆப₄ரணங்களுடைய மாறுடியிருக்கை. 2. "ஸௌம்யரூப:". பெருநாளை, B"கையார் சக்கரம்" என்றுல் ஊர் புதுக்கணித்திருக்குமாபோலே, 'மார்கழிநீராட' என்ன, இவர்கள் புதுக்கணித்தபடி... ப₄ாவநாப்ரகர்ஷத்தாலே ஒரு படி பூண்டாப்போலேயிருக்கும். 'க்ருஷ்ணன் எப்போது பார்க்குமோ' என்று எப்போதுமிருந்து கோலம் செய்வர்கள்.

(சீமல்குமாய்ப்பாடி) பரமபத₃த்திலும் திருவயோத்₄யையிலும் திருவாய்ப்பாடி ஸம்பத்து மிக்கிருக்கை. உழக்கிலே பதக்கிட்டாப்போலே திருவாய்ப்பாடியில் ஐஸ்வர்யம் பெருத்தபடி; எங்ஙனேயென்னில்: 3.ப்ரீதிரோத₃மஸஹிஷ்ட ஸா புரீ ஸ்த்ரீவ காந்தபரிபோக₄மாயதம்" என்கிறபடியே. (சீர்மல்குமாய்ப்பாடி) பிள்ளைகள் கால்நலத்தாலே நாழிப்பால் நாழிநெய் போருகை. சீர்மல்குகையாவது – ப₄க₄வத்₃கு₃ணங்கள் மாறுதே சேரக்கிடக்கை என்றுமாம். அதாகிறது ஊரடைய க்ருஷ்ணன் தீம்பும் அவன் வார்த்தையுமாய்க் கிடக்கை. (ஆய்ப்பாடி) இக்காலத்துக்கு ஓரூர் நேர்படுவதே! என்கிறள்; திருவயோத்₄யைபோலே வஸிஷ்ட₂ாதி₃கள் புகுந்து நியமியாதே அநாசாரமான ஊர். பட்டர் திருப்பாவை அருளிச்செய்யாநிற்க, பூணூல் சாத்தாதொரு ஸ்ரீவைஷ்ணவர் வர, 'கூசாதே உள்ளே புகுவீர், இவ்விடம் திருவாய்ப்பாடியாய்க்கூணும் செல்லுகிறது' என்று அருளிச்செய்தார்.

(செல்வம்) 4. "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" நாடெல்லாம் தன்னைப்போலே வாழும்படி வாழப்பிறந்த ப₄ாக்₃யவான். 5. "அந்தரிக்ஷக₃த: ஸ்ரீமாந்" ராவண ஸம்ப₃ந்த₄மற்ற

A திருவாய் 8-9-5. B திருவாய் 5-1.

போதே ஸ்வாப₄விகமான வைஷ்ணவஶ்ரீ வந்து மாலையிட்டபடி: 1. "ஸது நாக₃வர: ஶ்ரீமாந்" என்று தன் செயலிலே கைவிட்டு அவன் செயலே செயலாக அத்₄யவஸித்த பின்பு ஶ்ரீ க₃ஜேந்த்₃ராழ்வானை 'ஶ்ரீமான்' என்ருப்போலே. ராவணஸம்ப₃ந்த₄மற்றவோ பாதியாய்த்து ஸ்வாதந்த்ர்யமறுகையும். அவனுக்கு அந்யஶேஷத்வமேயாய் ஸ்வாதந்த்ர்யமின்றியே யிருந்தது; இவனுக்கு அந்யஶேஷத்வமின்றியே ஸ்வஸ்வாதந்த்ர்ய முண்டாயிருந்தது. இருவர்க்கும் இரண்டும் அற்றவாறே லக்ஷ்மி ப்ராபித்தாற்போலே. (செல்வம்) வலிபாதி வழக்குபாதி தூ₃ர்மம்பாதியாக க்ருஷ்ணனுலே எச்சில்படுகை என்ன வுமாம். தூ₃ர்மமாவது-ஆந்ருʼம்ஸ்யத்தாலே மனிச்சு கலக்கும்படி. வழக்கு-மைத்துனமை கொண்டு கலக்கும்படி. வலியாவது — தன் செல்லாமைகொண்டு மேல்விழும்படி. (சிறுமீர்காள்) ஆண்களைக் கண்டால் 'நான், என்னது' என்றிருப்பாரைக் கண்டாற் போலே காணும். பருவம் கழிந்த பெண்களைக் கண்டால், தே₃வதாந்தரப₃ஜநம் பண்ணினுரைக் கண்டாற்போலே காணும், பா₃லகளைக் கண்டால் உகக்கும்;—அதுவென்? என்ருல், பூர்த்தாவுக்கு ஸ்நேஹியாத பா₃லை, அறிந்தவாறே பூர்த்தாவுக்கு ஸ்நேஹிக்கும். பூர்த்ரந்தர பரிக்₃ரஹம் பண்ணினவர்கள் பூர்த்தாவுக்காகாதே. (சிறுமீர்காள்) அவனுக்கு ஸத்₃ருʼமான அநந்யார்ஹஶேஷத்வமுடையராகை.

'எங்களை நீர் இங்ஙனே கொண்டாடுகிறதென்? நமக்கு இந்நோன்பு தலைக்கட்டித் தருவாரார்' என்ன, (நந்தகோபன் குமரன்) என்கிருர்கள். அவன் நமக்குச் செய்யுமோ? என்ன, குடிப்பிறந்தவனன்ருே வென்கிருள். (கூர்வேல் கொடுந்தொழிலன்) சக்ரவர்த்தி வில்பிடிக்க, பிள்ளைகள் வில்பிடித்தாப்போலே: இக்குடிக்கு வேலே ஆயுத₄ம். பிள்ளையைச் சொல்லுமிடத்திலே A "நின் கையில் வேல்போற்றி" என்றிறே சொல்லுவது. (கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்) சிறியாத்தானைப்போலே பசும்புல் சாவ மிதியாத ஶ்ரீ நந்த₃கோ₃பர், தெளியக்கடைந்த வேலைக்கொண்டு பிள்ளைகள் தொட்டிற்காற்கீழே சிற்றெறும்பு வரிலும் எம்பெருமானின் மேலே விழுமாபோலே விழுந்து கொல்வர். ஸாது₃வாய் நின்ற பசு கன்றிட்டவாறே அதின் பக்கல் வாத்ஸல்யாதிரேகத்தாலே முன்னின்ற கன்றையும், புல்லிட வந்தவர்களையுமகப்படக் கொம்பிலே கொள்ளுமாபோலே படுவர். பெரியாழ்வார் பெண்பிள்ளையாகையாலே அங்குத்தைக்குக் காவலுண்டென்றிருக்கிருள். (நந்தகோபன்) B "அம்பரமே தண்ணீரே" என்று ப்ராண தா₃ரகங்களைக் கொடுக்குமவர், நம்பேரிழவுக் கிரங்கி நம் ப்ராண தா₃ரகத்தைத் தாராரோ? (நந்தகோபன்) பிள்ளையைக்கண்டு இளகிப்பதித்து உகப்பு ஒருவடிவு கொண்டாற்போலே யிருக்குமவர். (குமரன்) 'வெண்ணெய்களைக் களவுகண்டான். பெண்களைத் தீமைசெய்தான்' என்று எல்லாரும் வந்து முறைப்பட, கேட்டு, 'என் முன்னே தோற்றுங்கிடீர்' என்றிருந்தவர் முன்னே தோற்றினுல் 'இவனையோ குற்றம் சொல்லுவது' என்று அவர்களைக் கோபிக்கும்படி சக்ரவர்த்தித்திருமகனைப்போலே விநயம் பூவித்திருக்கும்.

(ஏரார்ந்த கண்ணி) அழகார்ந்த கண்ணையுடையவள். அவளை 2. "ஸது₃பா₃ யந்தி" யான கண்கள்: C "அம்பன்ன கண்ணுள்" என்னுமாபோலே ஓராளுமொரு

A திருப்பாவை 24. B திருப்பாவை 17. C பெரிய திரு 6-8-6.

நோக்குமொன்றுயிருக்கை. (அசோதை) A "அஞ்சவுரப்பாளசோதை ஆணுடைவிட்டிட்டி ருக்கும்" என்று அவன் செய்யும் தீம்புக்கும் அவள் அநுமதி பண்ணியிருக்கும். (இளஞ் சிங்கம்) நமப்பனுர்க்கு பவ்யனுய், தாயார் ஸந்நிதியிலே மூலையடியே திரிகை. 'சிங்கக் குருகு' என்று பட்டர். அவர்கள் சிறுமியர், இவன் இளஞ் சிங்கம்; அநந்யார்ஹசேஷத் வமும் சேஷித்வமும். 1. "ராகவோர்ஹதி வைதேஹீம்" என்னுமாபோலே யிருக்கை.

(கார்மேனி) தமப்பனுரும் தாயாரும் ஒளித்து வைத்தாலும் களவுகண்டாகிலும் காணவேண்டியிருக்கும் விஷயம். (கார்மேனி) தாங்கள் ஆடப்போகிற தடாகம். (செங்கண்) கதிர் மதியம்போல் முகத்தான்) அம்மடுவிலே பூத்த தாமரை ஓடத்தை விழவிட்டு வடிவைக் காட்டிக் குளிர நோக்கி, வாயாலே வினவும்படியை நினைக்கிறார்கள். (செங்கண்) ஸ்ரீய:பதித்வத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கை. (கதிர்மதியம்) நகுகழற்றின சந்த்ரனைப்போலேயிருக்கை. 2. "ப்ரஸந்நாதித்யவர்ச்சஸம்" சந்த்ர னுடைய குளிர்த்தியிலே ஆதித்யனுடைய ஒளியையூட்டினாற்போலேயிருக்கை. (கதிர்மதி யம்) ஆண்களுக்கு அநபிபவனீயனுய், பெண்களுக்கு அணைக்கலாயிருக்கை. B "முளைக் கதிரை" C "விரியும் கதிரேபோல்வானே" D "செய்யதோர் நாயிற்றைக்காட்டி". 3. "ஸூர்யமிவோதயஸ்தம்" பிராட்டிவடிவுக்கு (வரவுக்கு) திருவடி அருணோதய மானைப்போலே மார்கழி நீராட நினைத்தபோது பிறந்த செவ்வி.

(நாராயணனே) ஒட்டொட்டியாய், பெண்களை விடாதேயிருக்குமவன். இத்தனை நல்லது நமக்குக் கிடைக்குமோவென்னில், நாம் 'அல்லோம்' என்றிருக்கும் காலத்திலும் தான் 'ஆவேன்' என்றிருக்குமவன். ஆசைப்பட்ட விஷயமே வகுத்த விஷய மாயிருக்கிறபடி. (நமக்கே பறை தருவான்) உடையவனே உடமையை நிர் வஹிப்பான். எவகாரத்தாலே மிடல்வைக்க வேண்டாவென்கை. சணற்கயிறு கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போலே வேருென்று காணில் விடும். 'நமக்கே' என்றதென்? நாராயணத்வம் எல்லார்க்குமேயென்னில், அதிகாரி நியமம் பண்ணுகிறது. ஸ்வரூபத்தில் உணர்த்தியும் ஸ்வரகூணத்தில் அசக்தியுமுடையவனுக்கே என்கிறது. அவனுலே அவனைப்பெறவிருக்குமவர்களென்றுமாம். விலக்காமையையும், அதுக்கடியான ஸம் பந்தத்தை உணர்ந்திருக்கையையுமுடையவர்கள் என்றுமாம். இப்படியல்லவாகில் ஸர்வமுக்தி ப்ரஸங்கமாம். 4. "உபாயோபேயத்வே ததீஹ தவ தத்த்வம்". (நாரா யணனே) குணஹீநனுனுலும் ஸ்வரூபம் நோக்கவேணும். வழிபறிக்காரனுக்கும் பசலுக்குச் சோறிடவேணுமே; பசலுக்குச் சோறிடாதவனுக்கும் தன்வயிறு வளர்க்க வேணுமே. சேதநாசேதநங்கள் அவனுக்கு சரீரமிறே. (பறை தருவான்) நாட்டுக்கு நோன்பு; நமக்குப் பறை. த்வ்யர்த்தகம்.

(பாரோர் புகழ) இந்த ஸம்ஸ்லேஷரஸம் அறியார்களாகிலும் இச்சேர்த்திகண்டு இனியராம்படி படுத்தும். (படிந்து) அவகாஹித்து. (ஏலோர்) இப்படி அர்த்தஸ்திதி. இத்தை ஓநங்கோள். (எம்பாவாய்) மேல் காமநை நோற்கையாலே அவனகமுடையா ளான ரதியைச் சொல்லிற்றுகவுமாம். சந்தஸ்ஸை என்றும், நோன்பென்றும் அருளிச் செய்து போருவது. (ஏலோரெம்பாவாய்) என்று இரண்டவ்யயமும் பாதபூரணார்த்த மென்றுமாம். 1

A நாச்-திரு 3-9, B திரு நெடு 14. C நாச்-திரு 14-6. D திருவாய் 4-4-2.

ஸுத்₃த₃ஸத்வம் தொட்டாசார்யர் அருளிச்செய்த

ஸ்வாபதே₃ஸ்வ்யாக்₃யாநம் — முதற்பாட்டு

அவதாரிகை:— (மார்கழி இத்யாதி₃) இப்பாட்டில் — அதி₄காரிஸ்வரூபத்தையும், உபாயஸ்வரூபத்தையும், உபேயஸ்வரூபத்தையும் ஸங்க்₃ரஹித்து, இந்நோன்புக்குக் காலம் நேர்பட்டபடியைக் கொண்டாடுகிறார்கள்.

வ்யாக்₃யாநம்:— (மார்கழி இத்யாதி₃) ஸத்வோத்தரமான காலத்திலே ஸதா₃சார்யப்ரஸாத₃மடியாக ஸ்வரூப யாதா₂த்ம்ய ஜ்ஞாநம் பரிபூர்ணமாய், இச்சேதநன் ப₄க₃வத்₃விஷயீகார பாத்ர பூ₄தமான தி₃வஸத்திலே தங்களுக்கு ப₄க₃வத்கைங்கர்யத்தில் ருசிபிறந்த இன்று மங்க₃ளகார்யம் செய்யுமவர்களுக்குத் தேட்டமான காலம் தன்னடையே நேர்பட்டபடியைக் கண்டு ஆஶ்சர்யப்படுகிறார்கள்.

(நீராடப்போதுவீர்) ப₄க₃வத்கைங்கர்யம் பண்ணப் போருகையிலே ருசியையுடையவர்களாய்; (நேரிழையீர்) இதுக்குத் தகுதியான ஜ்ஞாந ப₄க்தி வைராக்₃யங்களே உடையராய்; (சீர்மல்கும் இத்யாதி₃) எம்பெருமானுடைய க்ருபா க்ஷமாதி₃ கல்யாண கு₃ணங்கள் தந்தாம் விஷயங்களிலே சேர்ந்து பொங்கி, பரமபத₃த்தளவும் சென்று அலையெறியும்படி அபி₄வ்ருத்₃த₄மாகாநின்றுள்ளதாய், ஜ்ஞாந ஜந்மாக்கள் ஸாத₃ரமாக வர்த்தியாநின்றுள்ள ஊரிலே ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄முடையராய், தத₃நுப₄வபரிகரமான அபி₄நிவேஶாதிஶயத்தையுடையராய், அநந்யார்ஹரானவர்கள். (நீராட-போதுமினே) ப₄க₃வத்கைங்கர்யம் பண்ண வாருங்கோள். ''ஆயர்'' என்னுங்காட்டில் ஜ்ஞாநஜந்மாக்களைக் காட்டுமோ? என்னில்:— லோகத்தில் ஆயர் ப₄க₃வதே₃கபரராயிருக்குமாபோலே ஜ்ஞாநஜந்ம முடையவர்களும் ப₄க₃வதே₃கபர ராகையாலே த்₃ருஷ்டாந்தவிதை₃யாகக் காட்டும்.

''சிறுமீர்காள்'' என்று - ஸ்த்ரீத்வேத நிர்த்தே₃ஶம், அநந்யார்ஹத்வத்₃யோதநார்த்த₂ம். ஶரீரஜந்மமான ஆயருக்கு ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தாலே அந்யபரதை உண்டாகைக்கு யோக்₃யதை உண்டு; ஆகையாலே, உபாயாந்தர ஸம்ஸர்க்க₃ - யோக்₃யதாக₃ந்த₄ - ரஹிதமான விலக்ஷணஜந்மம் ஜ்ஞாநஜந்மமேயாமித்தனையல்லது அத்ரைவர்ணிக ஜந்மமன்று; அந்த ஜந்மந்தன்னிலும் சிலரை உபாயாந்தரபரராகவும் உபேயாந்தரபரராகவும் தே₃வதாந்தரபரராகவும் காணுநின்றோமிறே; ஜ்ஞாநஜந்மந்தன்னில் அப்படி காண விரகில்லையிறே, ஆகையால், நம் ஆசார்யர்கள், உத்க்ருஷ்ட ஜந்மம் என்கிறது - ஜ்ஞாநஜந்மமே என்று கொள்ளவேணும்.

இப்படி நாம் கனக்கப்பாரித்துக்கொண்டு போங்காட்டில் நமக்கு அப்புருஷார்த்த₂ம் ஸித்₃தி₄க்குமோ? என்ன, (கூர்வேல் இத்யாதி₃) கூரியதாய், ஸர்வாநிஷ்டநிவர்த்தகமான மங்க₃ளாஶாஸநத்தையுடையராய்,

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ.எண் 2606
நாள்: 27/10/09
நூலகம்

அல்பாமங்க₃ளஸம்ப₄வனையிலும் அதிஶயித மங்க₃ளாஶாஸநபரராய், ப₄க₃வல்லாப₄த்தாலே களித்து, ப₄க₃வத், விஷயத்தை அசலறியாதபடி ரக்ஷித்துக் கொண்டு போருகிற ஆசார்ய விஷயத்தில் தன்னுடைய நியாம்யதை தோற்றும்படி இருக்குமவனுய்.

''கண்'' என்று - ஜ்ஞாநமாய், அதுக்கு அழகாவது - வஸ்துவை உள்ளபடி க்₃ரஹிக்கையாய், அத்தாலே - பூர்ணமான ஜ்ஞாநத்துக்கு ப்ரகாஶகமாய், தன்னை அநுஸந்தி₄ப்பார்க்கு ஆபி₄ஜாத்யாதி₃ ஸகலாதிஶயப்ரத₃மான திருமந்த்ரத்திலே தன்னுடைய ஸகலகாரணத்வாத்₃யதிஶயங்களெல்லாம் ப்ரகாஶிக்குமவனுய்; 1. ''மந்த்ரோ மாதா'' என்னக்கடவதிறே. இம்மந்த்ரந்தானும் ஸமஸ்த கல்யாண கு₃ணத்மகனை எம்பெருமானைத் தன்னுடைய க₄ர்ப்ப₄த்திலே வைத்துக்கொண்டு எல்லாரும் அறியலாம்படி ப்ரகாஶிப்பிக்கையாலே, இம்மந்த்ரத்தை ''மாதா'' என்னக் குறையில்லை. ஆஶ்ரித ஸகல தாப நிவர்த்தகமாய், பரமோதா₃ரமான திருமேனியையுடையனுய்; இத்தால்-உபாயக்ருத்யம் சொல்லுகிறது. அன்றிக்கே, ''கார்மேனி'' என்று மேக₄ம்போலே த₃ர்ஶநீயமான திருமேனியையுடையவனென்று அழகைச் சொல்லுகையாலே, உபேயத்வம் சொல்லிற்றுகவுமாம். அத்திருமேனிக்குப் ப₃ரபாக₃ஶோப₄வஹமாய் அகவாயில் வாத்ஸல்ய ப்ரகாஶகமாயும் பரத்வப்ரகாஶகமாயுமிருந்துள்ள சிவந்த திருக்கண்மலர்களையுடையனுய். 'கார்மேனி' என்கையாலே ஸௌலப்₄ய ஸௌஶீல்யங்களும், 'செங்கண்' என்கையாலே—வாத்ஸல்ய ஸ்வாமித்வங்களும் தோற்றுகையாலே, ஆஶ்ரயண ஸௌகர்யாபாத₃க கு₃ணசதுஷ்டயமும் சொல்லிற்றாய்த்து.

(கதிர்மதியம் இத்யாதி₃) ஸூர்யகிரணங்களையுடைய மதியம்போலேயிருக்கிற திருமுகமண்டலத்தை உடையனுய். இத்தால்-அநுகூலர்க்கு அணுகலாம்படி இருக்கையும் ப்ரதிகூலர்க்கு அணுகவொண்ணுதபடி இருக்கையும் தோற்றுகையாலே, அநபி₄ப₄வநீயத்வம் ஶக்திகார்யமாகையாலே ஆஶ்ரித கார்யபாத₃க கு₃ணசதுஷ்டயமும் சொல்லிற்றாய்த்து. இப்படி ஆசார்யப₄வ்யத்வாதி₃ கு₃ணங்களையும், வாத்ஸல்யாதி₃ கு₃ணங்களையும், ஜ்ஞாநஶக்த்யாதி₃ கு₃ணங்களையு முடையனை நாராயணனே. (நமக்கே) ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக அவனுலே புருஷார்த்த₃மென்றிருக்கிற நமக்கே. 'நமக்கே' என்கிற விடத்தில் ஏவகாரத்தாலே உபாயாந்தரங்களையும் தன்னையும் உபாயமாகப் பற்றினவர்களுக்கு ஈஶ்வரன் த₃ர்மாநுகு₃ணமாகப் ப₂லங்கொடுப்பானத்தனையல்லது க்ருபாநுகு₃ணமாகப் ப₂லங்கொடானென்னுமிடம் தோற்றுகிறது.

(பறைதருவான் இத்யாதி₃) புருஷார்த்த₃த்தைக்கொடுப்பான், ஆகையாலே பூ₄மிப்பரப்பிலுள்ள லௌகிக வைதி₃க பரமவைதி₃கரெல்லாரும் கொண்டாடும்படி இந்நோன்பிலே அவக₃ாஹித்து — நீராடப் போதுமினே என்று அந்வயம். காம நாதி₃காரிகளுக்கு ஸாத₃நமாயும், நிஷ்காமருக்கு நித்யமாயும், ப₄க₃வத்ப்ரபந்

நர்க்குக் கைங்கர்யமாயும் போருகிற இந்நோன்பிலே ப₄க₃வத₃நுப₄வைகாந்தம் என்று அத்₄யவஸித்து, ஸ்ரத்₃த₄பூர்வகமாக யதா₂விதி₄நம் அநுஷ்டி₂த்தால், லௌகிக வைதி₃க பரமவைதி₃கர்களுடைய கொண்டாட்டம் தன்னடையே ஸித்₃தி₄க்குமிறே. 1.''யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்₃தே₄ மஹாப₄கே₃ மஹீயதே'' என்னக் கடவதிறே.

இப்பாட்டில், 2. ''ஏஷ ப்₃ரஹ்ம ப்ரவிஷ்டோ(அ)ஸ்மி க்₃ரீஷ்மே ஸீதமிவ ஹ்ரத₃ம்'' என்கிறபடியே ''க்₃ரீஷ்ம காலத்தில் ஸூர்யகிரண தப்தனனவன் தன் தாபமாறும்படி குளிர்ந்த மடுவிலே நாமரூபவிப₄கா₃நர்ஹனும்படி ப்ரவேஶிக்குமாபோலே, ஸம்ஸாரதாபார்த்தனான நான் அந்தத் தாபமாறும்படி ஸமஸ்த கல்யாணகு₃ணாத்மகனான ஶ்ரீமந்நாராயணனே அவனேயொழிய ப்₃ருதஸ்ம்ருத்யுபலப்₃தி₄யில்லாதபடி ப்ரவேஶித்து ஸ்வஸத்தையை லபி₄த்தேன்'' என்று ப்₃ரஹ்மாநுப₄வத்துக்கு நீராட்டத்தை த்₃ருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே, ''நீராட'' என்று - ப்ராப்யத்தை ஸங்க்₃ரஹித்தார்கள். ''நீராடப்போதுவீர்'' என்று - இப்புருஷார்த்த₂த்துக்கு இதில் இச்சை₂யையுடையவர்களே அதி₄காரிகள் என்று அதி₄காரியை ஸங்க்₃ரஹித்தார்கள். ''நாராயணனே'' என்று - ப்ராபகத்தை ஸங்க்₃ரஹித்தார்கள். ''நமக்கே'' என்று - உபாய அதி₄காரிகளை ஸங்க்₃ரஹித்தார்கள், இத்தால் - உபாயாந்தர நிவ்ருத்தி பூர்வகமாக அவனேயே உபாயமாகப் பற்றுகை அதி₄காரமென்றதாய்த்து. 1.

மூவாயிரப்படி — இரண்டாம்பாட்டு

அவதாரிகை: - இரண்டாம் பாட்டு, a க்ருத்யாக்ருத்யவிவேகம் பண்ணுகிறது. b இதர விஷயங்களில் விடப்படுமவை விடவும் அரிதாயிருக்கும்; b, பற்றப்படுமவை பற்றவும் அரிதாயிருக்கும். அதுக்கு அடி இவனுடைய கர்மாநுகு₃ணமாக நன்ருயும் தீதாயும் தோற்றுகிற இத்தனை போக்கி, ஸ்வத: விஷயத்தைப்

பெ. அ. இரண்டாம் பாட்டு. (வையத்து) a ஸ்வாபதே₃ஶத்திலே தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (க்ருத்யேத்யாதி₃) க்ருத்யமாவது - ''பரமனடிபாடுகை'' முதலானவை; அக்ருத்யமாவது -''நெய்யுண்ணேம்'' இத்யாதி₃யிற் சொல்லுகிற பே₄தா₃ந்தராந்வயம் முதலானவை. bக்ருத்யாக்ருத்யவிவேகம் பண்ணுகை அரிதன்றே ? என்னும் ஶங்கையில் இதர விஷயங்கள் பே₄தா₃ங்களாகையாலே அங்கே அரிதாமித்தனைபோக்கி, பரமபே₄தா₃யமான ப₄க₃வத்₃விஷயத்தைப் பற்றியிருக்குமவனுக்குப் பற்றுகையும் விடுகையும் ஸுகரமென்று

சி. அ. இரண்டாம் பாட்டு. a ஐஶ்வர்யாதி₃புருஷார்த்த₂ங்களிலே இழிகிறவனுக்கு எல்லாம் அல்பாஸ்தி₂ரத்வாதி₃தோ₃ஷது₃ஷ்டங்களாகையாலே, 'இத்தைப்பற்ற இது நல்லது' என்று த்யாஜ்யோபாதே₃யவிப₄கா₃ம் பண்ணுகை அரிதாயிருக்கும்; ப₄க₃வத்₃ விஷயத்திலே இழிகிறவனுக்கு ப₄க₃வத்₃விஷயம் அனந்தஸ்தி₂ரப₂லமாய், ஐஶ்வர்யாதி₃கள் அல்பாஸ்தி₂ரங்களாகையாலே த்யாஜ்யோபாதே₃ய விப₄கா₃ம் பண்ணுகை எளிதாயிருக்கும்: ஆகையாலே, இந்தப்பாட்டில் (க்ருத்யாக்ருத்ய விவேகம்) என்கிறது; க்ருத்யமாவது:— ''நாட்காலே நீராடி'' ''ஐயமும் பிச்சையுமாந்தனையும்'' இத்யாதி₃கள். அக்ருத்யமாவது —''நெய்யுண்ணேம் பாலுண்ணேம்'' ''மையிட்டெழுதோம்'' இத்யாதி₃கள், b இப்படி பே₄தா₃பே₄தா₃ய

கு. அ- இரண்டாம் பாட்டு (வையமித்யாதி₃) b (இதர விஷயங்கள் இத்யாதி₃) 3.''வஸ்த்வேகமேவ து₃:க்கா₂ய ஸுகா₂யேர்ஷ்யாக₃மாய ச| கோபாய ச யதஸ் தஸ்மாத்₃ வஸ்து வஸ்த்வாத்மகம் குத:||'' என்கிறபடியே வஸ்துத: நல்லதும் தீயதுமில்லையென்கை.

பற்றி வருவதொரு நன்மையும் தீமையுமில்லை. எங்ஙனேயென்னில்:—ஒரு நாள் ஒருவன் ஒன்றையாதரித்து அவன்தானே, பின்பு சிலநாள் சென்றவாறே அதுதன்னையே உபேக்ஷியாநின்றான்; முன்பு உபேக்ஷித்ததுதன்னையே பின்பு ஒரு நாளிலே ஆதரிப்பதும் செய்யாநின்றான்; ஆகையால், இவனுடைய கர்மமடியாக நன்றும் தீதாயும் தோற்றுகிற இத்தனேபோக்கி, விஷயத்தைப்பற்ற வரில் என்றும் ஒருபடிப்பட்டிருக்கவேண்டும்; c அது இல்லாமையால் c_1 புறம்புள்ளவை விடவும் அரிது, பற்றவும் அரிது; d விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசி d_1 தெரிவிக்க அரிதாகையாலே. இங்ஙனன்றியே, அல்பமுமாய் அஸ்திரமுமாய் ஹேயமுமாயிருக்கிற விஷயங்களேவிட்டு ஸமஸ்தகல்யாணகுணாத்மகனேப் பற்றுகையாலே, விடுகையும் பற்றுகையும் இரண்டும் எளிதாமிருக்கும். e கீழிற்பாட்டில் — ப்ராப்யஸ்வரூபத்தையும் ப்ராபகஸ்வரூபத்தையும் e_1 அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லிற்று; இதில்-அந்த அதிகாரிக்கு e_3 ஸம்பாவித ஸ்வபாவங்களேச் சொல்லுகிறது.

பெ.அ. உபபாதித்தக்கிரார் (இதரேத்யாதி) c, d அது இல்லாமையால், விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசிதெரிவிக்க அரிதாகையாலே. புறம்புள்ளவை விடவும் அரிது பற்றவும் அரிது) என்று அந்வயித்துக் கொள்வது: d_2 (தெரிவிக்க) என்றது-தெரிய என்றபடி. e இவ்வதிகாரிக்கு இச்சைக்குமேற்பட க்ருத்யாக்ருத்யங்களுண்டோ? என்ன, அருளிச்செய்கிரார் (கீழிற்பாட்டில் இத்யாதி) e_2 (அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லிற்று) என்று இங்கே கூட்டுகையாலே, முதற்பாட்டில் (ப்ராப்யப்ராபகஸ்வரூபம்) (பக் 28-அவ) என்றது இதுக்கும் உபலக்ஷணமென்று கண்டுகொள்வது. e_3 இவ்வதிகாரிக்கு அவன் குணங்களோ அநுஸந்திக்கதால் அடிபாடுகை முதலானவையெல்லாம் அவர்ஜநீயங்களாய்வருட் என்று—(ஸம்பாவிதஸ்வபாவங்களோ) என்றதுக்குக் கருத்து.

சி. அ. நிபந்தனமான த்யாகஸ்வீகாரங்கள் இதர விஷயங்களிலே கூடாதோ? என்ன (இதர விஷயங்கள் இத்யாதி) அன்றிக்கே, க்ருத்யாக்ருத்யவிவேகம் பண்ணுகை ஸம்பாவிதமாயிருக்க, இதில் சொல்லுகிறதுக்குத் தாத்பர்யமேது? என்ன, இதர விஷயங்களில் வ்யாவ்ருத்த்யர்த்தமென்கிரார் என்னவுமாம். b (இதர விஷயங்களில் விடப்படுமவை விடவுமரிதாயிருக்கும்) என்றது பற்றப்படும் விஷயத்திற்காட்டில் விடப்படும் விஷயத்துக்கு தோஷாதிக்யம் காணுமையாலே விடப்படுமவை விடவுமரிதாயிருக்கும் என்றபடி. b_2 (பற்றப்படுமவை பற்றவுமரிதாயிருக்கும்) என்றது—விடப்படும் விஷயத்திற் காட்டில் பற்றப்படும் விஷயத்துக்கு குணாதிக்யம் காணுமையாலே பற்றப்படுமவை பற்றவும் அரிதாயிருக்கும் என்றபடி. c_2,dஆக, விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசி தெரிவிக்க அரிதாகையாலே புறம்புள்ளவை விடவும் அரிது பற்றவும் அரிது; 1. "வஸ்த்வேகமேவ துஃக்காய ஸுகாய யோர்ஷ்யாகமாய ச। கோபாய ச யதஸ்தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குதः ॥" இதி. d வஸ்துதः நல்லதும் தீயதுமில்லாவிட்டால் பற்றவும் விடவும் போகாதபடி எப்படி? என்ன (விடுகிறவற்றுக்கும் இத்யாதி) e கீழிற்பாட்டில் "பறை" என்று ப்ராப்ய ஸ்வரூபத்தையும், "நாராயணனே தருவான்" என்று ப்ராபக ஸ்வரூபத்தையும், "போதுவீர்" என்று அதிகாரி ஸ்வரூபத்தையும் சொல்லிற்றுஎன்றபடி.

கு. அ. d வஸ்துதः நல்லதும் தீயதுமில்லாவிட்டால் பற்றவும் விடவும் போகாதபடியென்? என்ன அருளிச்செய்கிரார் (விடுகிறவற்றுக்கும் பற்றுகிறவற்றுக்கும் வாசி தெரிவிக்க அரிதாகையாலே) என்று. அதாவது - இதர விஷயங்களில் விடுகிறவற்றிற்காட்டில் பற்றுகிறவற்றுக்கு நன்மையும், பற்றுகிறவற்றிற்காட்டில் விடுகிறவற்றுக்கு தோஷமும் இல்லாமையாலே வாசி தெரியாதென்றபடி.

இரண்டாம் பாட்டு.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாறென்ணி உகந்தேலோர் எம்பாவாய். 2.

பதவுரை — வையத்து — இப்பூவுலகில். வாழ்வீர்காள் — வாழப்பிறந்தவர்களே!, நாமும்-(அவனுலே பேறு என்றிருக்கும்) நாமும், உய்யும் ஆறு எண்ணி—உஜ்ஜீவிக்குய் உபாயத்தை உணர்ந்து, உகந்து—மகிழ்ச்சியுடன், நம் பாவைக்கு—நம்முடைய நோன்புக்கு, செய்யும் கிரிசைகள்—பண்ணும் காரியங்களை, கேளீரோ—கேளுங்கள்; நாம்—, பால் கடலுள் — திருப்பாற்கடலினுள், பைய துயின்ற பரமன் — கள்ளநித்திரை கொள்ளும் புருஷோத்தமனுடைய, அடிபாடி—திருவடிகளைப்பாடி, ஐயமும் — தகுந்தவர்களுக்குக் கொடுக்கும் பொருளையும், பிச்சையும்—(ப்₃ரஹ்மசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் கொடுக்கும்) பி₄க்ஷையையும், ஆந்தனையும் — (அவர்கள்) கொள்ளவல்லராயிருக்குமளவும், கை காட்டி—கொடுத்து, நெய் உண்ணேம் — நெய் புசிக்கமாட்டோம்; பால் உண்ணேம்—பாலும் அமுதுசெய்ய மாட்டோம்; நாட்காலே—விடியற்காலையில், நீராடி—ஸ்நானம் செய்துவிட்டு, மை இட்டு எழுதோம்—(கண்ணில்) மையிட்டு அலங்கரித்துக்கொள்ளமாட்டோம்; மலர் இட்டு முடியோம் — பூக்களைக்கொண்டு குழலிலே முடியமாட்டோம்; செய்யாதன—(பெரியோர்கள்) செய்யாதவற்றை, செய்யோம் —, செய்யமாட்டோம்; தீக்குறளை—(பிறருக்கு) அநர்த்த₄த்தைத்தரும் கோட்சொற்களை, சென்றோதோம்—(எம்பெருமானிடம்) சென்று சொல்லமாட்டோம்.

வ்யாக்₃யானம்;— f(வையத்து f, வாழ்வீர்காள்) g ஸர்வேஶ்வரன் திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனுய்வந்து திருவவதரித்துத் தன்னைத்தாழவிட்டுப் பரிமாறுகிறகாலத்திலே வாழப்பிறந்த ப₄க்₃யவதிகாள்! h இங்குத்தை வாழ்ச்சிக்குப் பரமபத₄மும் ஸத்₃ருஶமன்று. அங்கு மேன்மைகாணலாமித்தனைபோக்கி, நீர்மை கண்டு அநுப₄விக்கலாம்படியிருப்பது இங்கேயிறே. அங்கு போ₄க்தாக்கள் அஸங்குசிதராயிருப்பர்கள்; இங்கு போ₄க்₃யம் அஸங்குசிதமாயிருக்கும். i த₃யநீயகுண்டான இடத்திலேயிறே த₃யாதி₃குணங்கள் அநுப₄விக்கலாவது; j அங்கு விஷயமில்லாமையாலே j, த₃யாதி₃குணங்கள் ப்ரகாஶிக்கப்பெறுதே; k அக்குறை

பெ.அ. (இரண்டாம்பாட்டு) f,g வையத்திலே :- திருவாய்ப்பாடியிலே; வாழ்வையுடையவர்களேயென்று ஶப்₃தா₃ர்த்த₂ம் திருவுள்ளம் பற்றி, அர்த்த₂ஸித்₃த₄மான ஹேதுக்களைக் கூட்டித்தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன் இத்யாதி₃) h "வாழ்வீர்காள்!" என்றவிடம்-பெண்களை ஸம்போ₃தி₄க்கும்போது க்ருஷ்ணன் அவதரித்த தே₃ஶத்தில் வாழ்ச்சி இதுவென்று ஸித்₃த₄மாயிருக்க, "வையத்து" என்று விஶேஷிப்பானென்? என்ன ₂ருளிச்செய்கிறார் (இங்குத்தை இத்யாதி₃) பரமபத₃த்தில் வாழ்ச்சியிலும் வையத்து வாழ்ச்சி விஞ்சினது என்று தோற்றுகைக்காக "வையத்து" என்று விஶேஷித்தென்று கருத்து. i, j விஞ்சி

சி. அ. f "வையத்து வாழ்வீர்காள்" என்றதுக்கு மூன்று பொருள். g முந்தினது "வையம்" என்று திருவாய்ப்பாடி மாத்ரத்திலே; h...m இரண்டாவது — பூ₄மிதன்னை;

கு: அ. f "வையம்" என்றதுக்கு மூன்று தாத்பர்யம். g முந்தினது முதற்பாட்டில் "ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்" என்றத்தைக்கடாக்ஷித்து. h...m இரண்டாமர்த்த₂ம்

தீருகைக்காகவிறே நித்யஸூரிகள் இங்கேவந்து அநுபவிக்கிறது. அவதாரத்தில் l நீர்மையிலே அகப்பட்டார்க்கும் மற்றேரிடம் பொருதபடியாயிருக்கும். m 1. "பாவோ நாந்யத்ர கச்சதி" என்ருனிறே திருவடி. A "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்ருருமுண்டிறே. B "கண்ட கண்கள் மற்ருென்றினைக் காணவே" என்ருரிறே. n அதவா, மருபூமியில் தண்ணீர்போலே C இருள்தருமாஞாலமான n, ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்து க்ருஷ்ணனுபவம் பண்ணி வாழப்பிறந்தீர்காள்! என்றுமாம். o (வாழ்வீர்காள்) p அவ்வூர்தன்னில் பிறந்துவைத்துப் பருவம் நிரம்பியிருக்கையன்றிக்கே, அவனுடைய கடாக்ஷத்துக்கு இலக்காம்படி ஒத்த பருவமாயிருக்கை. q க்ருஷ்ணவதாரத்துக்கு முன்னுதல் பின்னுதலன்றிக்கே ஸமகாலத்திலே பிறக்கப்பெறுவதாம்; r அதுதன்னிலும் இவ்வூரையொழிந்த விடத்தேயன்றியே இவ்வூரிலே பிறக்கப்பெறுவதாம்; s அதுதன்னிலும் அவனோடொத்த பருவமாகப் பெறுவதாம்; t இது ஒரு பாக்யாதிஶயம் இருக்கும்படியென்! (வாழ்வீர்காள்) u அவ்வூரில் வர்த்தநமென்றும் வாழ்ச்சியென்றும் இரண்டில்லைகாணும்! v அவன் நித்யவாஸம் பண்ணுமிடத்தில் வர்த்தநமே வாழ்ச்சியாயிருக்குமிறே; w D "வேங்கடத்தைப்பதியாக வாழ்வீர்காள்" என்னக்கடவதிறே. x இது கோயிலில் வர்த்தநம்போலே காணும். சொல்லுகிற தங்களுக்கும் வாழ்ச்சி ஒத்திருக்க, "வாழ்வீர்காள்" என்று பிறரைச் சொல்லுகிறதென்? என்னில்: —

பெ.அ. னமையை உபபாதிக்கிறார் (தயநீயர் இத்யாதி வாக்யத்வயத்தாலே.) k இவ்விடத்தில் வாழ்ச்சி விஞ்சியிருக்குமென்றதுக்கு நியாமகங்களாப் பலபடியாகக் காட்டுகிறார் (அக்குறை இத்யாதி). l (நீர்மையிலே) என்றது - தயாதிகுணங்களுக்கும் உபலக்ஷணம். j, m ஆதி ஸப்தத்தாலே விவக்ஷித்த குணத்தை அருளிச்செய்கிறார் (பாவ இத்யாதி) 1. "பக்தேஶ நியதா வீர" என்ருனிறே என்று கருத்து. n "வையத்துக்கு உண்டான பகவத்நுபவ விரோதித்வத்தைத் திருவுள்ளம் பற்றி, 'வையத்து' என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (அதவா இத்யாதி) o,p "வையத்திலுள்ளீர்" என்னுதே "வாழ்வீர்" என்கைக்குத் தாத்பர்யத்தை "சிறுமீர்காள்"(1) என்றதுக்கு அநுகுணமாக அருளிச்செய்கிறார் (அவ்வூர் இத்யாதி) q,r,s,t, உக்தார்த்தங்களை வ்யாவ்ருத்திபூர்வகம் அநுஸந்தியாநின்றுகொண்டு வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (க்ருஷ்ணவதாரத்துக்கு இத்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே) u, v, w, x ஒத்தபருவமாய்ப்

சி.அ. n மூன்றுவது-லீலாவிபூதிக்கு உபலக்ஷணம். g "ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்" (1) என்று திருவாய்ப்பாடியிலே க்ருஷ்ணனுய் வந்தவதரித்துத் தன்னைத்தாழவிட்டுப்பரிமாறுகிற காலத்திலே வாழப்பிறந்த பாக்யவதிகள் என்னுதல். n மருபூமியில் தண்ணீர்போலே C இருள்தருமாஞாலமான ஸம்ஸாரத்திலேயிருந்து க்ருஷ்ணானுபவம்பண்ணி வாழ்வீர்கள்; என்னுதல்; q, r, s, t எல்லாவற்றாலும் பரிதமானத்தை அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணவதாரத்துக்கு இத்யாதி) f, g, p வாழ்ச்சி வாழ்வுதானேயாதல்; u, v, w, x வர்த்தனமாதல், g, p வாழ்ச்சி சொன்ன பக்ஷத்திலே வாழ்ச்சியை இரண்டு ப்ரகாரமாகக் கொள்வது. x (இது

கு.அ. "சீர்மல்கும்" என்றதைக் கடாக்ஷித்து. n மூன்றுவது ஸப்தஸ்வபாவத்தாலே. g முந்தின அர்த்தத்துக்கு "வையம்" என்று திருவாய்ப்பாடி மாத்ரத்திலே ஒதுக்கிக் கொள்வது. f, g...x வாழ்ச்சிக்கு இரண்டு பொருள்; g, p வாழ்ச்சிதன்னையே என்னுதல்;

A திருமாலை 2. B அமலனாதி 10. C திருவாய் 10-6-1. D நாச்-திரு. 8-9.

தாங்கள் தனியே அநுப₄விக்கும் அநுப₄வம் ரஸாநுப₄வமாய்த் தோற்றுமையாலே அத்தை ரஸமாக்கித் தருமவர்களைக் கொண்டாடுகிறார்கள்.

y (நாமும்), z ''அத்தலையாலே பேறு'' என்று இருக்கிற நாமும். a அவனாலே பேறுகிலும் ருசி இருந்தவிடத்தில் இருக்கவொட்டாதிறே; b இந்தப் ப₃லம் ஒருநாள்வரையிலே கைவந்ததாகவற்றே! என்று இருக்கிற நாமும் என்னவுமாம். c (நம்பாவைக்கு) நம்முடைய நோன்புக்கு. d அவனையும் அவனுடையாரையும் அழிக்கைக்குப் பண்ணும் இந்த்₃ரஜித் d₄ ப்ரப்₃ருதிகளுடைய யாக₃ம் போலன்றியே, ததீ₃யரும் அவனும் வாழுகைக்குப் பண்ணும் யாக₃ம்; e ப்ரயோஜநாந்தரபரமான நோன்பன்றியே, க்ருஷ்ணனும் க்ருஷ்ணவிபூ₄தியும் e₃உண்டாகைக்குப் பண்ணுகிற நோன்பு.

(செய்யுங்கிரிசைகள்) f பண்ணக்கடவ க்ருத்யங்கள். g சேதநனுகையாலே, ப்ராப்யஸித்₄தி₄யளவும் காலக்ஷேபத்துக்காக இழிந்து அநுப₄விக்கக்கடவ அநுஷ்டா₂நமென்றபடி. h ஆரம்பி₄த்துத் தவிரும்வையல்ல; i பத்தும் பத்தாகச்செய்து

பெ.அ. பிறந்தவன், பே₂க₃த்துக்கு இலக்காமளவும் வேண்டாவிறே, அவன் பிறந்த ஊரிலிருப்பே வாழ்ச்சியென்ன அமையுமென்று விலக்ஷிக்குத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (அவ்வூரில் இத்யாதி₃ வாக்யசதுஷ்டயத்தாலே)

y ''நாமும்'' என்றதுக்கு இரண்டு அர்த்த₂ம் — ''நாராயணனே நமக்கே பறைதருவான்'' என்று உபாயாத்₄யவஸாயத்தையுடைத்தான நாமும் என்றும், உபேயாத்₄யவஸாயவிஸ்₂லேஷ்டர் என்றும்; z முந்தினது (அத்தலையாலே இத்யாதி₃) a, b இரண்டாவது (அவனாலே இத்யாதி₃ வாக்யத்₃வயம்) c, d ''பாவைக்கு'' என்ன அமைந்திருக்க, ''நம்'' என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவனையும் இத்யாதி₃) d₄ ப்ரப்₃ருதிகளென்றது-பௌண்ட்₃ரக வாஸு₄தே₃வாதி₃களைச் சொல்லுகிறது. அவனிறே க்ருஷ்ணனையும் த்₃வாரகையையும் நலிகைக்காக யாக₃ம்பண்ணி க்ருத்யையைப் பிறப்பித்தான். e கீழே ''நம்'' என்றத்துக்கு – ப₄க₃வத்₃விரோதி₄ வ்யாவ்ருத்திபரமாக ஒரு யோஜநை அருளிச்செய்து, ப்ரயோஜநாந்தரபர வ்யாவ்ருத்திபரமாகத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ப்ரயோஜநாந்தரபரவ்யாவ்ருத்திபரமாகத் இத்யாதி₃) e₃ உண்டாகையானது—பெண்களையும் அவனையும் எழுப்பிக் கூட்டிப் பேரோலக்கத்திலே இருத்திக் காண்கை. f, g ஸித்₃த₄ ஸாத₄ந நிஷ்ட₂னுக்குக் கர்த்தவ்யமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (சேதநனுகையாலே இத்யாதி₃) h, i, j காலக்ஷேபார்த்த₄மாகச் செய்கிறக்ரியைகளென்று கீழ் அருளிச்செய்து ''செய்யும்'' என்றதுக்கு–அவச்யம் செய்யத்தக்கதென்று விவக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஆரம்பி₄த்து இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே)

கி. அ. கோயில் வர்த்தனம்போலே) என்ற இடத்தில் 'இது' என்று திருவாய்ப்பாடியைச் சொல்லுகிறது. c,d,e ''நம்பாவை'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம் வாக்யங்களிலே கண்டு கொள்வது. f,g ஸித்₃தே₄பாய நிஷ்ட₂ருக்குச் செய்யத்தக்க வ்யாபாரமொன்றுமில்லையிறே; ஆயிருக்கச் செய்தேயும் ''கிரிசைகள்'' என்கிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (சேதநனுகையாலே இத்யாதி₃) h ''செய்யும்'' என்கிற வர்த்தமாநார்த்த₄ம் (ஆரம்பி₄த்துத்தவிரும்

(பாற்கடல் இத்யாதி,) திருப்பாற்கடல்நடுவே திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவர்களுக்கு முகங்கொடாதபடி ஜக₃த்₃ரக்ஷணசிந்தையிலே அவஹிதனுய்க் கண் வளர்ந்தருளுகிறவனுய், அத ஏவ பரமபத₃த்தில் நின்றும் ஸம்ஸாரிசேதநஸம் ரக்ஷணார்த்த₂ம் திருப்பாற்கடலிலே அவஸரப்ரதீக்ஷனுய்க்கொண்டு கண்வளர்ந் தருளுகையால் வந்த கு₃ணதி₃யத்துக்கு ஒப்பில்லாதவனுய், திருவநந்தாழ் வான் மேலே சாய்ந்தருளுகையால் வந்த பரப₄க, போ₄கை₃க்கு ஒப்பில்லாத வனுயிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளே ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடி போ₄க்₃யாந்தரங்களில் அந்வயியோம்.

(நாட்காலே நீராடி) ப்ராதஸ் ஸ்நாநத்தைப் பண்ணி, இத்தால்-கர்ம யோக₃த்தை உபலக்ஷிக்கிறது, இத்தால்-தத்தத்₃வர்ணோ₄சிதமான ஸ்நா நாதி₃ நித்யகர்மங்கள் இவ்வதி₄காரிக்கு யதா₃வத₃நுஷ்டே₃யமென்றதாய்த்து. ''பாடி'' என்றது - பாடக்கடவோமென்றபடி. ''நீராடி'' என்றது - நீராடக் கடவோமென்றபடி. 1. ''தத்து கர்ம ஸமாசரேத்'' என்று-இவ்வதி₄காரிக்கு அநபி₄ஸம்ஹிதப₂லமான கர்மம் அநுஷ்டே₃யமென்றதிறே, (மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்) மை கண்ணுக்கு ப்ரகாஶகமாகையாலே ஆத்மயாதா₂ம்யப்ரகாஶக மான ஜ்ஞாநயோக₃த்தில் அந்வயிக்கக்கடவோமல்லோம்; பூச்சூடுகை போ₄க₃ ரூபமாகையாலே, ''மலரிட்டுநாம் முடியோம்'' என்று - ப₄க₃வத₃நுப₄வரூபமான ப₄க்தியோக₃த்தில் அந்வயிக்கக்கடவோமல்லோமென்கிறது.

(நாம் முடியோம்) நாமாய் ப₄க₃வத்ப்ராப்தி ஸாத₄நங்களான ஜ்ஞானயோக ப₄க்தியோக₃ங்களிரண்டிலும் அந்வயியாதொழிகையே வேண்டுவது; அவன்தானே இவ்வாத்மவஸ்துவை அநுப₄விக்கும்போது ஜ்ஞாநப₄க்திகளிரண்டையுங் கொடுத்து ''இவற்றை நீ தவிராதொழியவேணும்'' என்று நிர்ப்ப₃ந்தி₄க்கும்போது, நம்மால் செய்யலாவதொன்றில்லையிறே. நாமாய் அநுஷ்டி₂க்கிறபோதும், அவன் கொடுக்க நாம் பரிக்₃ரஹியாதபோதும் ஸ்வஸ்வாதந்த்ரியம் குலையாமையாலே, அது குலைகைக்காக நாமாய் அநுஷ்டி₂யாதொழிகையும் வேணும், அவன்தர நாம் பரிக்₃ரஹிக்கையும் வேணும்.

(செய்யாதன இத்யாதி,) ப்ரமாணமுண்டேயாகிலும் பூர்வாசார்யர்கள் அநுஷ்டி₂யாதவற்றை அநுஷ்டி₂க்கக்கடவோமல்லோம். அதாவது—எம்பெருமான் வாத்ஸல்யாதி₃கு₃ணவிஶிஷ்டனேயாகிலும் ததீ₃யரை முன்னிட்டல்லது அவனைப் பற்றக்கடவோமல்லோம். (தீக்குறளே சென்றோதோம்) பராநர்த்த₂ாவஹமான பொய் சொல்லக்கடவோமல்லோம்,

(ஐயம் இத்யாதி,) ப₄க₃வத்₃வைப₄வத்தையும் பா₄க₃வதவைப₄வத்தையும் தாம் அறிந்தவளவும் உபதே₃ஶித்து ''நாம் ஒன்றும் உபதே₃ஶித்திலோம்'' என்று தம் கார்ப்பண்யத்தை அநுஸந்தி₄த்து, அர்த்தி₂களுள்ளவளவும் உபதே₃ஶிக்கக்கடவோம்.

(உய்யுமாறெண்ணியுகந்து) ஏவம்ப்ரகாரேண உஜ்ஜீவிக்கும்படி எண்ணி யுகந்து; ''செய்யுங் கிரிசைகள் கேளீரோ'' என்று அந்வயம். 2.

மூவாயிரப்படி — மூன்றும் பாட்டு

அவதாரிகை:— மூன்றும்பாட்டு—a §ஸ்வர்க்க₂ார்த்த₂மாக யஜிக்குமவனுக்கு ஸ்வர்க்க₂ம் ப்ரத₄ாநப₂லமாயிருக்கச்செய்தேயும், 1. ''ஆயுராஶாஸ்தே'' என்கிற படியே ஆயுஸ்ஸை a₂புத்ரன் என்று அவாந்தரப₂லமாயிருப்பன சில உண்டா யிருக்கும்; b இவர்களுக்கு அங்ஙனம் ஒன்றுமின்றிக்கே, 2. ''ஸர்வலாப₄ாய கேஶவ:'' 3. ''மாதா பிதா ப்₄ராதா'' A ''சேலேய் கண்ணியரும்'' என்று b₂ எல்லாம் அவன்தானேயாகையாலே, தங்களுடைய நோன்புக்கு அநுமதி பண்ணினர்க்கு வரக்கடவதான ப₂லமிருக்கும்படியைச் சொல்லுகிறார்கள். c 4.''அநஸூயவே'' என்று அஸூயையைப் பண்ணுதொழிய அமையுமிறே அதி₄காரிகளாகைக்கு.d 5.''யத்ராஷ் டாக்ஷர ஸம்ஸித்₃த₄:'' இத்யாதி₃யாலே ஒருத்தனைச் சொல்லக்கடவது; ஆனபின்பு இவர்கள் இத்தனை பேர் இருந்தால் நாடு வாழச் சொல்லவேண்டாவிறே.

பெ. அ. மூன்றும்பாட்டு (ஒங்கி இத்யாதி₃) a, b கீழிரண்டுபாட்டாலும் எம்பெருமானே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று நிஶ்சயித்திருந்த இவர்களுக்குப் ப₂லாந்தரங்கள் இப்பாட்டிற் சொல்லும்படி எங்ஙனே கூடுவது? இது ப்ரத₄ாநப₂லமென்றுதல், ஆநுஷங்கி₃கப₂லமென் றுதல் சொல்லக்கூடாமையாலே—என்னும் ஶங்கையிலே அருளிச்செய்கிறார் (ஸ்வர்க்க₂ார்த் த₂ம் இத்யாதி₃) a₂ (புத்ரன்) என்றது 1. ''ஸுப்ரஜாஸ்த்வம்'' என்றத்தைப் பற்ற, b₂ (எல் லாம் அவன்தானேயாகையாலே) என்றது — ''உன்றன்னோடுற்றேமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்'' (29) என்றத்தைப் பற்ற. c ஒருவர் நோன்புநோற்க மற்றொருவர்க்கு அநுமதிமாத்ரத்தாலே ப₂லம் ஸித்₃தி₄க்கும்படியென்னென்ன அருளிச்செய்கிறார் (அநஸூ யவே இத்யாதி₃) 4. ''இத₃ம் து தே கு₃ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே'' என்று கீ₃தோபநிஷத₃ாசார்யன், அஸூயாராஹித்யமே உபாயாந்வயத்துக்கும் ப₂லாந்வயத்துக்கும் அமையுமென்றிறே திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தது; ஆகையால் இவர்களும் அஸூயை யின்றிக்கே அநுமதியும் பண்ணினர்களாகையால் இந்நோன்பால் ப₂லாந்வயம் வரத் தட் டில்லியென்று கருத்து. d அவதாரிகாந்தரம் அருளிச்செய்கிறார் (யத்ரேத்யாதி₃) 5. ''யத்ராஷ் டாக்ஷர ஸம்ஸித்₃த₄: மஹாபா₄கோ₃ மஹீயதே। ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி₄துர்ப்- பி₄க்ஷுதஸ்கரா:॥'' என்று ஒருவர் இருக்கும்போது நாடுவாழச் சொல்லுகையாலே, அப்படி இவர்கள் பலர் அஷ்டாக்ஷரஸித்₃த₄ராயிருந்தால் அநுமதிபண்ணினாரோடு அநுமதி பண்ணுதாரோடு வாசியற வாழச் சொல்லவேண்டாவிறே என்று கருத்து.

சீ. அ. மூன்றும்பாட்டு (ஒங்கி) a, bக்ருஷ்ண ஸம்ஶ்லேஷம் ப₂லமாயிருக்க, காம்ய புரு ஷார்த்த₂ங்களிலே அந்வயித்தாரைப்போலே, அவாந்தர புருஷார்த்த₂ங்களை அபேக்ஷிக்கிற தென்? என்ன (ஸ்வர்க்க₂ார்த்த₂மாக இத்யாதி₃) a₂ புத்ரன் யஜ்ஞஸந்ததி விச்சி₂ன்னமாகா மைக்கு அபேக்ஷிதம்; c அநுமதி பண்ணினமாத்ரம் கொண்டு அவர்களுக்கு அதிஶயம் தேடுகிற தென்? என்ன அருளிச்செய்கிறார் (அநஸூயவே இத்யாதி₃) d இவர்கள் அபேக்ஷித்த மாத்ரத்தாலே லோகத்துக்கு நன்மை உண்டாமோ? என்ன அருளிச்செய்கிறார் (யத்ராஷ் டாக்ஷர இத்யாதி₃)

கு. அ. மூன்றும்பாட்டு (ஒங்கி இத்யாதி₃) a, b க்ருஷ்ணஸம்ஶ்லேஷம் ப₂லமாயிருக்க, காம்ய புருஷார்த்த₂ங்களிலே அந்வயித்தாரைப்போலே அவாந்தரபுருஷார்த்த₂ங்கள் அபேக்ஷிக்கிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (ஸ்வர்க்க₂ாதி₃ புருஷார்த்த₂ங்கள் என்று தொடங்கி) c அநுமதிபண்ணின மாத்ரத்துக்கு அவர்களுக்கு அதிஶயம் தே_வேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (அநஸூயவே என்று தொடங்கி)

---

§ (பா) ஸ்வர்க்க₂ாதி₃புருஷார்த்த₂ங்களுக்காக A திருவாய் 5-1-8.

மூன்றும் பாட்டு

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் *பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

பதவுரை:— ஓங்கி—உயர வளர்ந்து, உலகு—மூன்று உலகங்களையும், அளந்த—(தன் திருவடிகளாலே) அளந்துகொண்ட, உத்தமன் — புருஷோத்தமனுடைய, பேர் — திரு நாமங்களை, நாங்கள்பாடி—(திருநாமத்தைச் சொல்லாவிடில் உயிர் தரிக்காத) நாங்கள் பாடி, நம்பாவைக்கு சாற்றி — எங்கள் நோன்புக்கு என்றெரு வ்யாஜத்தையிட்டு, நீராடினால்—ஸ்நானம் செய்தால், நாடு எல்லாம்—தேசமெங்கும், தீங்கு இன்றி—ஒரு தீமையுமில்லாமல், திங்கள்—மாதந்தோறும், மும்மாரி பெய்து—மூன்றுமழை பெய்திட, (அதனால்) ஓங்கு பெரும் செந்நெல் ஊடு—உயர்ந்து பருத்த செந்நெற்பயிர்களின் நடுவே, கயல் உகள — கயல் மீன்கள் துள்ள, பொறி வண்டு — அழகிய வண்டுகள், பூங்குவளைப் போதில் — அழகிய நெய்தல் மலரிலே, கண் படுப்ப—உறங்க, வள்ளல்—வண்மையை உடையனவாய், பெரும் பசுக்கள்—பெருத்திருப்பனவான பசுக்களை, தேங்காதே—தயங்காமல், புக்கு—(பால் கறக்கப்) புகுந்து, இருந்து—நிலையாக இருந்து, சீர்த்த முலை—பருத்த முலைகளை, பற்றி—(இரு கைகளாலும்) அணைத்து, வாங்க—இழுக்க, குடம் நிறைக்கும்—குடங்களை நிறைக்கும்; நீங்காத செல்வம்—(இப்படிப்பட்ட) அழிவில்லாத ஸம்பத்து, நிறைந்து—நிறைந்திடும். (ஏல் ஓர் எம்பாவாய்—அசைகள்.)

வ்யாக்₃யானம்:— e (ஓங்கியுலகளந்த) f இவர்கள் முதலே தொடங்கி "நாராயணன்"(1) என்று-உப₃யவிபூ₄தியோக₃த்தைச் சொல்லி, "பாற்கடலுள் பையத்துயின்ற"(2) என்று அவதாரார்த்த₃மாகப் பள்ளிகொண்டருளினபடியைச்சொல்லி, அங்குநின்றும் போந்து அவதரித்தவளவும் வர f₁ அடியொற்றுகிறார்கள்.

g (ஓங்கி) h ஜக₃த்₃ரக்ஷணார்த்த₃மாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளின போது ஆர்த்தரக்ஷணம் பண்ணப்பெருமையாலே, பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலேயாய், அது ஆதி₃த்யகிரணம்-பட்டுக் கிளம்புமாபோலே, மஹாப₃லியாலே

பெ. அ. e, f 'நாராயணனடிபாடி' என்றுதல், 'பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி' என்றுதல் சொல்லுகையன்றிக்கே, "ஓங்கியுலகளந்த" என்றதுக்கு நியாமகம் அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி₃) g, h "ஓங்கி" என்று இப்போது சொல்லுகையாலே முன்பு இப்படி ஓங்குதலில்லாமை தோன்றுகையாலும், கீழ்ப்பாட்டில் "பையத்துயின்ற"(2) என்ற பத₃த்தைக் கடாக்ஷித்தும் இரண்டுக்கும் ஹேதுபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்

சி. அ. f₁ (அடியொற்றுகிறார்கள்) அவன் வந்த வழியை அனுஸரிக்கிறார்கள். j பிறர்கார்யம் செய்கை திருவுள்ளத்துக்கு உகப்பாயிருக்குமோ? என்ன அருளிச்செய்கிறார்

---

* (பா) வரி.

நோவுபட்ட தே₃வர்களார்த்தத்₄வநி கேட்டபின்பு பேர்ந்து வளர்ந்தபடி. i பிறர் காரியஞ் செய்யப்பெறுகையாலே வளர்ந்தபடி என்னவுமாம், j A''உவந்தவுள்ளத் தனையுலகமளந்து'' என்னக்கடவதிறே. அங்ஙனன்றிக்கே, இரப்புப் பெறுவதற்கு முன்னே வாமநனானவன் இரப்புவாய்த்த ப்ரீதியாலே வளர்ந்தபடியாகவுமாம். k கையில் நீர்விழுந்தபின்பு வளர்ந்த k_1 கடுமை, k_3 ப்₃ரஹ்மா திருவடிகள் விளக்கின நீரும் கூட விழுந்தபடியிறே. l (உலகு அளந்த) 1. ''விசக்ரமே ப்ருதி₂வீமேஷ ஏதாம்'' என்கிறபடியே l_1 கு₃ணகு₃ணநிரூபணம் பண்ணுதே ஸர்வப்ராணிகள் பக்கலிலும் திருவடிகளை வைத்தபடி. m வ்யாப்தியில் m_1 வரைதலில்லாதாப் போலேயாய்த்து இத்துவும், n வ்யாப்திக்குக் கருத்து—இவற்றினுடைய ஸத்தை n_1 உண்டாக்குகைக்காக. o இங்கு இவற்றுடை ஸ்பர்ஶம் தனக்கு த₄ாரகமாக விறே நினைத்திருப்பது. p இவற்றுக்கு ‡ அபேக்ஷிதமின்றிக்கேயிருக்கச்செய்தேயும், உறங்குகிற ப்ரஜையை அணைத்துக்கொண்டு கிடக்கும் மாதாவைப்போலே, இவற்றுடை p_1 ஸ்பர்ஶந்தனக்குத் தான் உகக்கிருனிறே. q வரையாமையும், அதி மாநுஷ சேஷ்டிதங்களும், வடிவழகும் க்ருஷ்ணவதாரத்தோடு ஒத்திருக்கை யாலே, ஸ்ரீவாமனவதாரத்தை அநுப₄விக்கிருர்கள்.

பெ.அ. கிருர்(ஜக₃தி₃த்யாதி₃) i ஆர்த்தத்₄வநி கேட்கையே வளருகைக்கு ஹேதுவானபடி என்? என்ன அருளிச்செய்கிருர் (பிறர் இத்யாதி₃) j ''உவந்த'' என்றதுக்கு-பிறர்காரியம் செய்யப்போருகையாலே உகந்த என்று கருத்து, k 'வளர்ந்து உலகளந்த' என்னுதே ''ஓங்கி'' என்றதால் ப₃ஹிதமான த்வரையின் மிகுதியை அருளிச்செய்கிருர் (கையில் இத்யாதி₃) இத்தால் த₄ாராஜலமும் ஸ்ரீபாத₃தீர்த்த₄மும் கூட விழும்படியான வேக₃ம் சொல்லிற்றாய்த்து.

l, l_2 உலகுபத₃வாஸனை (கு₃ணகு₃ணஇத்யாதி₃) m உக்தார்த்த₃த்தை த்₃ருஷ்டாந்த பூர்வகம் ஸ்தி₂ரீகரிக்கிருர் (வ்யாப்தியில் இத்யாதி₃) m_1 வரைதல்-தாரதம்யம். n, o ஆகில் வ்யாப்தியே அமையாதோ. உலகளப்பானென்? என்ன அருளிச்செய்கிருர் (வ்யாப்திக்கு இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) n_1 (உண்டாக்குகைக்காக) என்ற அநந்தரம், 'என்று' என்று ஸேஷம். p திருவடிகளோட்டை ஸ்பர்ஶம் லோகத்துக்கு த₄ாரகம் என்னவேண்டி டிருக்க, அவாப்தஸமஸ்தகாமனான தனக்கு த₄ாரகமாகக் கூடுமோவென்ன அருளிச்செய் கிருர் (இவற்றுக்கு இத்யாதி₃) p_2 ஸ்பர்ஶந்தனக்கு - முழுச்சொல்லு. q க்ருஷ்ணன்பக்கல் வ்யாமுக்₃த₄ரான இவர்கள், மதுரையில் பிறந்த உத்தமனென்ன வேண்டியிருக்க, ''ஓங்கி யுலகளந்த'' என்னக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிருர் (வரையாமையும் இத்யாதி₃) க்ருஷ்ணன்பக்கல் வ்யாமோஹம் இவன்போலியளவும் பெருகிச்சென்றது என்று கருத்து,

---

சி. அ.(உவந்த உள்ளத்தனுய்) என்று. k_2 கடுமை-வேக₃ம்; k_3 ப்₃ரஹ்மா திருவடி விளக்கின நீரும் த₄ாராஜலமும் கூட விழும்படியிறே கையில் நீர்விழுந்தபின்பு வளர்ந்த வேக₃ம். l_2, m(வ்யாப்தியில் வரைதலில்லாதாப்போலே) என்றது கு₃ணகு₃ண நிரூபணம் பண்ணுதாப் போலே என்றபடி, pஇவற்றுடை ஸ்பர்ஶம் த₄ாரகமாக நினைத்திருக்குமோ? என்ன அருளிச் செய்கிறர் (இவற்றுக்கு அபேக்ஷையின்றிக்கேயிருக்கச்செய்தேயும் இத்யாதி₃) q க்ருஷ்ணனை விட்டு வாமனவதாரத்தை அனுஸந்தி₄க்கிறதென்? என்ன அருளிச்செய்கிருர் (வரை

கு. அ. k_3 (ப்₃ரஹ்மா திருவடி விளக்கின நீரும்கூட) என்றது கையில் த₄ாரை வார்க்கிற நீரோடும்கூட என்றபடி. l_2, m (வ்யாப்தியில் வரைதலில்லாதாப்போலே) என்றது கு₃ணு

A அமலனதி 2. ‡ (பா) அபேக்ஷையின்றிக்கே.

r (உத்தமன்) s இத்தை, s₁ இவர்களுக்கு ஒரு உபகாரம் பண்ணினதை வன்றிக்கே s₂ தன்பேருக நினைத்திருக்கிறபடி; t பிறரை ஹிம்ஸித்துத் தன்வயிற்றை வளர்க்கவேணுமென்று இருக்குமவன்-அத₂மன்; u 'பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்கவேணும்' என்று இருக்குமவன் - மத்₄யமன்: v தன்னை அழியமாறியாகிலும் பிறர் ஜீவிக்கவேணுமென்னுமவன் - உத்தமன். w 1.''ப₄க்தாநாம்'' x 2. '' அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்'' என்றிருக்கை.

y (பேர்பாடி) z இக்கு₃ணங்களுக்கு வாசகமான திருநாமங்களைப்ரீதிபூர்வகமாகப்பாடி. a ''உத்தமன்பேர்'' என்கிறது - திருமந்த்ரத்தை, b முதற்பாட்டில், ''நாராயணன்'' என்கையாலும், இரண்டாம்பாட்டில், ''ப்ரமன்'' என்று அந்த மந்த்ரார்த்த₃மான கு₃ணபூர்த்தியைச் சொல்லுகையாலும், இதில் மந்த்ரோக்த வ்யாப்திக்கு b₁ப்ரத்யபி₄ஜ்ஞாகரமான த்ரைவிக்ரமாபதா₃நத்தைச் சொல்லுகையாலும், திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. திருமங்கையாழ்வார் A ''மந்திரத்தை மந்திரத்தால்'' என்று மந்த்ரத்தைச் சொல்லி, அநந்தரத்திலே அதில் உக்த

பெ. அ. s (இத்தை) என்றது-மஹாப₃லி நிரஸநார்த்த₃மாக உலகளந்ததை என்றபடி. s_2 (இவர்களுக்கு) என்றது-இந்த்₃ராதி₃தே₃வதைகளுக்கு என்றபடி. r...v ''உத்தமன்'' என்றதுக்கு - தன்பேருக நினைத்திருக்கை அர்த்த₃மாக அருளிச்செய்து, தன்னை அழியமாறியும் பிறர்காரியஞ் செய்கையென்று அர்த்த₂ாந்தரம் அருளிச்செய்கிறார் (பிறரை இத்யாதி₃ வாக்ய த்ரயத்தாலே) w, x இரண்டு அர்த்த₂த்துக்கும் அடைவே ப்ரமாணங்கள் அருளிச்செய்கிறார் (ப₄க்தாநாம் இத்யாதி₃) w 1. ''ந தே ரூபம் ந சாகாரோ நாயுதா₄நி ந சாஸ்பத₃ம் । ததா₂பி புருஷாகாரோ ப₄க்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥''—இது நிஷேத₄மன்று; ஸ்வாதீ₄நதையைத் தவிர்க்கிறது; தமக்கு 3. ''அஹமபி ந மம ப₄கா₃வத ஏவாஹமஸ்மி'' போலே, இவனுக்கு 1.''ந தே ரூபம்-ப₄க்தாநாம்'' என்கை. x2. ''அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணம்। ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்₃ராஹ்மணேப்₄யோ விஶேஷத: ॥'' என்று என்னையும் என்னுடைமையையும் நேர்ந்தாகிலும் ஒருவருக்குச் செய்கிறேமென்றதைத் தவிருகிறிலேன் என்கிறபடியே தன்னை அழியமாறியும் பிறர்காரியஞ் செய்யுமவனென்கை.

y,z,a ''பேர்'' என்றதுக்கு – எல்லாத் திருநாமங்களையும் என்று அருளிச்செய்து, திருமந்த்ரபரமாக அர்த்த₂ம் அருளிச்செய்கிறார் (உத்தமன் இத்யாதி₃) b ''பேர்'' என்று திருமந்த்ரத்தைச் சொல்லும்படி எங்ஙனேயென்ன அருளிச் செய்கிறார் (முதல் இத்யாதி₃) தம் ஆசார்யர்களுக்கு ஸப்₃த₃ம் முன்னுதல், அர்த்த₂ம் முன்னுதல் சேர்ந்த திருமந்த்ரத்தை அநுஸந்தி₄க்கை நியதமாகையாலே - முதற்பாட்டில் ஸப்₃த₃மும், இரண்டாம்பாட்டில் ''பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்'' என்கையாலே-தத்புருஷனிற்சொன்ன கு₃ணயோக₃

சி. அ. மாமையுமித்யாதி₃) r, s_3, t உத்தமன் என்றுல் (தன்பேருக நினைத்திருக்கிறபடி) என்று காட்டுமோ? என்ன அருளிச்செய்கிறார் (பிறரை இத்யாதி₃) w தன்னை அழியமாறியும் பிறர் ஜீவிக்கவேணும் என்றிருக்கவேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (ப₄க்தாநாமித்யாதி₃) y,z,a பேருக்கு இரண்டு பொருள். a, b ''உத்தமன் பேர்'' என்றுல் திருமந்த்ரத்தைக்

கு. அ. கு₃ண நிரூபணம் பண்ணுதாப்போலே என்றபடி. x 2.''அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணம்। நஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்₃ராஹ்மணேப்₄யோ விஶேஷத: ॥'' r, t, u ''உத்தமன்'' என்றது புருஷ, உத்தர புருஷர்களை வ்யாவர்த்திக்கிறது.

A திருநெடு 1.

மான வ்யாப்திக்கு b, ப்ரத்யபி₄ஜ்ஞாகரமான த்ரைவிக்ரமாபதா₄நத்தை அநந்தரம் பாட்டிலே அருளிச்செய்தாரிறே. (உத்தமன்பேர்) c அவன்தனக்கும் பிறர்க்கு முண்டான வாசிபோரும், அவனுக்கும் திருநாமத்துக்கும். கட்டிப்பொன்போலே அவன்; d பணிப்பொன்போலே திருநாமம். e அவன்தன்னை e, இல்லைசெய்கிற வர்களும் திருநாமங்கொண்டு கார்யங் கொள்ளாநிற்பர். அதாவது - வ்யாதி₄ ப்ரிஹாரார்த்த₂மாகத் திருநாமஸங்கீர்த்தநத்தை விதி₄த்தால் அப்போதே அத்தைச் செய்யாநிற்பர்கள். f இனி, மாத்ருகா₄துகனுக்கும் கைநொந்தால் ''அம்மே!'' என்ன f, ப்ராப்தியுண்டாமாபோலே, திருநாமம் சொல்லுகைக்கு எல்லார்க்கும் ப்ராப்தி உண்டாயிருக்கும். g திருநாமஞ்சொல்லுகைக்கு யோக்₃யதை ஸம்பா தி₄க்கவேண்டா. h இது தானே யோக்₃யதையைப் பண்ணிக்கொடுக்கவற்று.

i (நாங்கள்) jதிருநாமத்தை வாயாலே சொல்லாவிடில் த₄ரிக்கமாட்டாத நாங்கள், k 'நெஞ்சு காவலிடுகிற ஊரிலே k, இது நமக்கு ஸித்₃தி₄ப்பதே!' என்று

பெ.அ. மும் இப்பாட்டில் ''ஒங்கியுலகளந்த'' என்று ப₃ஹுவ்ரீஹ்யர்த்த₂மான வ்யாப்தியும் ப₃லித்ததாகையாலே, இது திருமந்த்ரத்தைச் சொல்லுகிறதென்று கருத்து. b, (ப்ரத்யபி₄ஜ்ஞாகர மான த்ரைவிக்ரமாபதா₃நம்) என்றது—கு₃ணகு₃ணநிரூபணமின்றிக்கேயிருக்கையாகிற ஸாத்₃ ருஶ்யத்துக்கு ஸ்மாரகம் என்றபடி. c உத்தமணைப்பாடியென்றால் பாடும்போது பேரின்றிக்கே பாடக்கூடாதே, ''பேர்'' என்று விஶேஷிப்பானென்னென்ன, அருளிச்செய்கிறார் (அவன் தனக்கும் இத்யாதி₃) d பணிப்பொன் - ஆபரணரூபமான பொன். இத்தால், அவனிலும் அவன்திருநாமம் பரமபோ₄க்₃யமாகையாலே அவனுடைய அதிஶ யத்தையே உள்ளீடாக வைத்துத் திருநாமத்தைப் பாடுகை விவக்ஷிதமென்றதாய்த்து, e கீழே-போ₄க்₃யதையால் வந்த வைப₄வத்தை நியாமகமாக அருளிச்செய்து, ப₂லப்ரதா₃த் வத்தாலும் அவனிலும் இதுக்கு உண்டான பெருமையை நியாமகமாக அருளிச் செய்கிறார் (அவன்தன்னை இத்யாதி₃) e, (இல்லைசெய்கிறவர்) நிரீஶ்வரமீமாம்ஸகர். f, g, h இப்படி சீர்மையையுடைத்தான திருநாமத்தைச் சொல்லும்போது ப்ரீதனாய்ச் சொல்லவேண்டாவோ? என்ன அருளிச்செய்கிறார் (இனி இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) f₃ (ப்ராப்தியுண்டாமாபோலே) என்றது-யோக்₃யதை உண்டாமாபோலே என்றபடி.

i,j,k ''நம்பாவைக்கு'' என்றபோதே 'நாங்கள்' என்றது அர்த்த₂ஸித்₃த₄மாயிருக்க வும், ''நாங்கள்'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (திருநாமத்தை

சி. அ· காட்டுமோ? என்ன அருளிச்செய்கிறார் (முதற்பாட்டிலித்யாதி₃) y,c, உத்தமணைப்பாடி என்னுதே ''பேர்பாடி'' என்கையாலே அவனிலும் திருநாமத்துக்குண்டான ப்ராதா₄ன்யம் தோற்றுகிறது என்கிறார் (அவன் தனக்கும் இத்யாதி₃) e திருநாமத்துக்கு அப்படி ஆதி₄க்ய மேது? என்ன அருளிச்செய்கிறார் (அவன்தன்னை இத்யாதி₃) f அவனை இல்லைசெய்கிறவர் கள் திருநாமம் சொல்லுவார்களோ? என்ன அருளிச்செய்கிறார் (இனி மாத்ருகா₄துகனுக்கும் இத்யாதி₃) 'மாதாவை வெட்டுகிறபோது கைநொந்தால்' இதி ஶேஷ:. k (நெஞ்சு காவலிடு

கு· அ.y,c ''உத்தமணைப்பாடி'' என்னுதே, ''உத்தமன்பேர்பாடி'' என்கையாலே திருநாமத்தி னுடைய ப்ராதா₄ன்யம் தோற்றுகிறது.

f விமுக₂ரானவர்களுக்குத் திருநாமம் சொல்ல யோக்₃யதை உண்டோ? என்ன (மாத்ருகா₄துகனுக்குமித்யாதி₃) மாத்ருகா₄துகனுக்கும் கை நொந்தால் என்றது, வெட்டும் போது கைநொந்தாலென்றபடி.

ப்ரீதைகளாய், தங்களை ஸ்லாகி₄க்கிறார்களென்னவுமாம். l (நம்பாவைக்கு) m ப்ராபகதயாவன்றிக்கே, ப்ராப்யருசி இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமல் செய்கிற நோன்புக்கு. n (பாவைக்குச் n₂ சாற்றி நீராடினுல்) o நாட்டார்க்கு 'நோன்பு' என்று ஒரு o₂ வ்யாஜத்தையிட்டு நம்முடைய விரஹதாபம் போக நாம் குளித்தால். நோன்பு என்று ஒரு வ்யாஜத்தையிட்டு க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தைப் பண்ணினுல் என்றுமாம்; p (பேர்பாடி - நீராடினுல்) q ஸம்ப₂ந்த₂ஜ்ஞாநபூர்வகமாக க்ருஷ்ணஸம்ஸ்லேஷம் பண்ணினுல்; ப₂லமும் ப₂லப்ர்த₂தாவான உலகளந்த வன்படியாகை.

(தீங்கின்றி நாடெல்லாம்) நாட்டில் வ்யாதி₄துர்ப்பி₂க்ஷாதி₃ அமங்க₂ளங்க ளெல்லாம்போய் r ஸம்ருத்₃த₄மாய். s தந்தாமுடைய ஸுக்ருதம் அநுப₄விக்கி லிறே அவ்வளவிலே நன்மையாவது. t 1. ''ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி'' என்கிற படியே தந்தாமுடைய புண்யாநுகு₃ணமாகவன்றிக்கே பெருமாளுடைய ப₄க்₃யத் தாலே 2. ''ப்ரஹ்ருஷ்டமுதி₃தோ லோக:'' என்று ராஜ்யம் சென்ருற்போலே இவ் வூரேயன்றிக்கே இவ்வூரோடு ஸம்ப₃ந்தி₄த்த நாடெல்லாம் t₂ மங்க₂ளமாகை, (திங் கள் மும்மாரிபெய்து) வெள்ளக்கேடும் வறட்கேடும் இன்றிக்கே u ''ஊறெண்ணெய் விட்டாற்போலே யிருக்கை; ஒன்பதுநாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய்''

பெ.அ.இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) k_2 (இது) என்றது-க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தை. i,m, 'நாங்கள் பாவைக்கு' என்ன அமைந்திருக்க, '' ''நம்'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய் கிறார் (ப்ராபக இத்யாதி₃) l,n,o, ''நம்பாவைக்கு'' என்ற அநந்தரம், ''பாவையென்றொரு பேரை'' என்று அத்₄யாஹரித்து. ''சாற்றி'' என்றதுக்கு-இட்டு என்று அர்த்த₂மாய், தாத் பர்யம் அருளிச்செய்கிறார் (நாட்டார்க்கு இத்யாதி₃) y, a, q ''பேர்'' என்றதுக்கு - திருமந்த்ரம் அர்த்த₃மான பக்ஷத்திலே அருளிச்செய்கிறார் (ஸம்ப₃ந்த₄ இத்யாதி₃)

r (ஸம்ருத்₃த₄மாய்)என்றதுக்கு மேலே, 'நீங்காத செல்வம் நிறைந்து'', என்றது-ஊரில்ஸம்ருத்₃தி₄யைச் சொல்லுகையாலே, நாட்டுக்கு அமங்க₃ளங்கள் போகையைச் சொன் னது உபலக்ஷணமாய், ஸம்ருத்₃தி₄பர்யந்தம் சொல்லுகிறது என்று கருத்து. s ''நீராடினுல் நாடெல்லாம் ஸம்ருத்₃த₄மாம்படி ஏங்ஙனேஎன்ன?'' அருளிச்செய்கிறார் (தந்தாம் இத்யாதி₃) இத்தால்-சேதநகர்மோபாதி₄கமன்றிக்கே இவர்களிடத்தில் அநுக்₃ரஹத்தாலே இவர்களிருந்த நாடெல்லாம் ஸம்ருத்₃த₄மாமென்று கருத்து. t த்₃ருஷ்டாந்த பூர்வகம் உக்தார்த்த₂த்தை விவரிக்கிறார் (ராமே ராஜ்யம் இத்யாதி₃) t_2 (மங்க₃ளமாகை) என்ற அநந்தரம் 'கூடும்' என்று ஶேஷம். u(ஊறெண்ணெய் விட்டாற்போலே) என்றது-தலையிலே ஊறவூற எண்ணெயிட்

சி.அ. .கிற ஊரிலே) என்றது—நெஞ்சாலும் நினையாதபடி நிஷே₂தி₄க்கிற ஊரிலே என்றபடி. n, o ''பாவைக்குச் சாற்றிநீராடினுல்'' என்றதுக்கு ஶப்₃த₃ார்த்த₂ம்-நோன்புக் கென்கிறவ்யாஜத் தாலே நீராடினுல் என்று. n_2,o_2 சாற்றி–வ்யாஜத்தையிட்டு.

s இவர்கள் நோன்பு நோற்றுல் திருவாய்ப்பாடி மாத்ரமன்றிக்கே நாட்டில் வ்யாதி₄துர்பி₄க்ஷாத்₃யமங்க₃ளங்கள் எல்லாம் போம்படியென்? என்ன அருளிச்செய்கிறார் (தந்தாமுடைய ஸுக்ருதமித்யாதி₃) u (ஊறெண்ணெய்) என்றது, குழந்தைகளுக்கு உறைக்கத்தேய்க்கப் பொருமையாலே உச்சியிடுவர்களிறே, அத்தைச் சொல்லுகிறது.

கு. அ. n, o ''பாவைக்குச் சாற்றி''—நோன்பென்று வ்யாஜத்தையிட்டு. s திருவாய்ப் பாடி மாத்ரமன்றிக்கே நாடெல்லாமென்னக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (தந்தா முடைய ஸுக்ருதம் இத்யாதி₃) u ஊறெண்ணெயாவது பிள்ளைகளுக்குத் தலையிலே

1.''நிகாமேநிகாமே ந; பர்ஜந்யோ வர்ஷதி'' என்று அபேக்ஷித்த காலத்திலே உண்டா யிருக்கை. v (ஒங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள) w கீழ்ச்சொன்ன திரு வுலகளந்தருளின ஸர்வேச்வரனோடு ஒத்திருக்கை. x விடிவோரைநட்டு x_1 நாயிறு பட்டபோது வந்துபார்த்தால் x_2 கைகவித்துப் பார்க்கவேண்டும்படியிருக்கை, y ''மாரீசன் பெருமானே 2.''வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி'' என்றுற்போலே, இவர் களுக்கும் ஸ்ரீவாமநநிமித்தமாக 2. ''வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி'' இருக்கிறபடி. z (ஒங்குபெருஞ் செந்நெல்) a ஒருமுதலே ஒரு செய்யை விளாக்குலைகொண்டு அங்ஙன் ஒருவரம்பில்லாமையாலே ஆகாசஅவகாசமுள்ளவளவும் வளர்ந்திருக்கை. (ஊடுகயல் உகள) செருக்காலே யானைக்கன்றுபோலே வளர்ந்த கயல்களானவை செந்நெல்களின் உள்ளேபுக்குப் போர இடம் பெருமையாலே துள்ளாநிற்கும்; விழுக்காடறியாமே அகப்பட்டபடி, b திருவுலகளந்தருளின ஸர்வேச்வரனைக் கண்ட அநுகூலர் பட்டது படாநிற்குமாய்த்து இவை.

c (பூங்குவளைப்போதில் c_1 பொறிவண்டு c_2 கண்படுப்ப) பூத்த குவளை யிலே என்னுதல், காலத்திலே என்னுதல், தர்சநீயமான குவளைப்பூவிலே என் னுதல். (பொறிவண்டு கண்படுப்ப) d மதுபானத்தாலும் அந்யோந்ய ஸம்ச்லேஷத் தாலும் பிறந்த புகரடைய வடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கிற வண்டு

பெ.அ.டசற்போலே என்றபடி. v,w. ''பெருஞ்செந்நெல்'' என்ன அமைந்திருக்க, ''ஒங்கு'' என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கீழ்இத்யாதி$_3$) x ''வளர்ந்த பெருஞ் செந்நெல்' என்ன அமைந்திருக்க, ''ஒங்கு'' என்றத்தாலே தோற்றுகிற அர்த்த$_2$த்தை அரு ளிச்செய்கிறார் (விடிவோரை இத்யாதி$_3$) x_2 (நாயிறு பட்டபோது) என்றது-ஸூர்யன் உச்சிப் பட்டபோது என்றபடி, x_3 (கைகவித்து) என்றது-ஸூர்யகிரணங்கள் கண்ணுக்குத் தாங்காத படி தன் கையை வைத்துக்கொண்டு என்றபடி. y தாங்கள் நீராடினால் வரும் ஸம்ருத்$_3$தி$_4$ சொல்லுமளவில், 1. ''நிகாமே நிகாமே ந: பர்ஜந்யோ வர்ஷதி'' ''திங்கள் மும்மாரி'' என்றுற் போலே ஸ்வாப$_4$விகமான ஸம்ருத்$_3$தி$_4$யைச் சொல்லவேண்டியிருக்க, ஒங்குகையை இப்படி விசேஷித்து அதிசயோக்தியாகச் சொல்லுவானென்னென்ன அருளிச்செய்கிறார் (மாரீசன் இத்யாதி$_3$) ப$_4$யத்தாலே மாரீசனுக்குத் தோற்றுமாபோல இவர்களுக்கு ப்ரேமாதி$_4$க்யத்தாலே வாமநனுடைய த$_4$ர்மங்கள் எங்குந் தோற்றிச் சொல்லுகிறார்களென்று கருத்து. z,a, கீழெல்லாம் தாத்பர்யம் அருளிச்செய்து, ''பெரும்'' என்றதுக்கும் 'ஒங்கு' என்றதுக்கும் ஹேதுபூர்வகம் ஸப்$_3$தா$_3$ர்த்த$_2$ம் அருளிச்செய்கிறார் (ஒருமுதலே இத்யாதி$_3$) ''செந்நெல்'' என்ற ஏகவசநத் தாலே (ஒருமுதலே) என்றது. b ஸஸ்யங்களை இப்படி வர்ணித்ததுக்கு ஹேதுவை அருளிச் செய்கிறார் (திருவுலகளந்தருளின இத்யாதி$_3$).

சி.அ. x_2 (நாயிறுபோது) மத்$_4$யாஹ்நம்; 'நாயிறுபட்ட' என்று பாட$_2$மாகில் அந்தியம்போது என்றபடி. z, a 'செந்நெல்' என்ற ஏகவசனத்துக்கும், பெருமைக்கும் தாத்பர்யம் (ஒருமுதலே இத்யாதி$_1$) c_3 'கண்படுப்ப'-கண்ணுறங்க. c' குவளை'-நெய்தல். c_2 'பொறி'-தேஜஸ்ஸு.

சு.அ.ஸாறத்தக்கதாக வார்த்தாற்போலென்கை. z, a ''செந்நெல்'' என்ற ஏகவசனத்துக்கும் பெருமைக்கும் தாத்பர்யம் (ஒருமுதலே இத்யாதி$_3$) c_2 ''வரிவண்டு'' வரி—அழகு; c_3, e ''கண் படுப்ப'' என்றதுக்குத் தாத்பர்யம் (தன்னில்தான் இத்யாதி$_3$) c_3 கண்படுப்ப—கண்ணுறங்க.

கள் e தன்னில்தான்—ஒரு மஹாபாரதத்தைப் பாரித்துக்கொண்டு புக்கு புஷ்பத்திலே ஸ்பர்ஶஸௌக்யத்தாலே நஞ்சுண்டாரைப் போலே கிடந்து உறங்கியுணர்ந்து எழுந்திருக்கும்போது, ''என்னை நீ எழுப்பிற்றிலை, என்னை நீ எழுப்பிற்றிலை'' என்று ஒன்றுக்கொன்று ''சீறு, பாறு'' என்னுநிற்கும். f A ''பள்ளிகமலத்திடைப்பட்ட f_1 பகுவாயலவன் முகம் நோக்கி f_2 நள்ளியூடும்'' என்னக்கடவதிறே. g (ஊடு கயல் உகள-பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்ப) h குவளைப்பூவிலே வண்டுமதுபாநம்பண்ண என்று படிந்த தஶையிலே கயல் ஊடே உகள, செந்நெல்லும் குவளையும் ஒக்க அசைந்து, தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்ரர்களைப்போலே வாயில் மதுவோடே வண்டு கண்படுப்ப என்றபடி,

இது வயலின் ஸம்ருத்தி; இனி, ஊரில் ஸம்ருத்தியிருக்கும்படி சொல்லுகிறது—i (தேங்காதே i_1 புக்கிருந்து) j எத்தனையேனும் முன்கை உரவியராயிருப்பார் இழியவேணுமாய்த்து பசுகறக்கப்புகும்போது. k இதுக்கு அடி-பால் மாறுமையாலே எழுந்திருக்கப் போகாது. l இத்தால், l_1 பால்போரும் பெருமையை அநுஸந்தித்தவாறே கறக்க ஒருப்படுவாரில்லை. m திருவடி ஸமுத்ரம் கடக்க ஒருப்பட்டாற்போலே, ஒருப்பட்டுக்கொண்டு இழியவேண்டும்படியாய்த்து இருப்பது.

பெ.அ. c, d ''பொறி'' என்று அழகாய், அதுக்கு ஹேது பூர்வகம் அர்த்தமும் அருளிச்செய்கிறார் (மதுபாநம் இத்யாதி$_3$) c_3, e கண்படுக்கை-உறங்குகையாய் எல்லை நிலத்தை அருளிச்செய்கிறார் (தன்னில்தான் இத்யாதி$_3$) f_2பகுவாயலவன்-பெரிய வாயையுடைய புருஷநண்டு. f_3 நள்ளி-பெண்நண்டு; ஊடும்-வெறுக்கும் என்றபடி. g, h ஸமபிவ்யாஹார தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (குவளை இத்யாதி$_3$)

i, j—m தேங்காதே - ஏங்காதே, புக்கு-கறக்க ஒருப்பட்டு, இருந்து-ஒருநிலையாக இருந்து என்று ஈப்$_3$தஶார்த்த$_2$மாய், ஏங்குகைக்கு ப்ரஸக்தியையும், ஒருப்படுகையிலுள்ள அருமையையும், இருக்கைக்கு ஹேதுவையும் அருளிச்செய்கிறார் (எத்தனையேனும் இத்யாதி$_3$ வாக்ய சதுஷ்டயத்தாலே) l_1 (பால்போரும்) என்றது பால்சுரக்கும் என்றபடி.

சி.அ. c_3,e'கண்படுப்ப' என்றதுக்குத் தாத்பர்யம்(தன்னில்தானித்யாதி$_3$) f திர்யக்குகளுக்கு ப்ரணயகோபமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (பள்ளிகமலத்திடை இத்யாதி$_3$) f_2 (அலவன்) ஆண் நண்டு. f_3 (நள்ளி) பெண்நண்டு. i 'தேங்காதே'-பயப்படாதே; J ''ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத$_4$:'' என்று ப$_4$யப்பட யோக்$_3$யதையுண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (எத்தனையேனுமித்யாதி$_3$) i_2, m 'புக்கு' என்றதுக்குத் தாத்பர்யம் (திருவடி இத்யாதி$_3$) ''ததஶ்து வை ஜாம்ப$_3$வதாபி$_4$சோதி$_3$த: ப்ரதீதவேக$_3$: பவநாத்மஜ: கபி:| ப்ரஹர்ஷயம் ஸ்தாம் ஹரிவீரவாஹிநீம் சகார ரூபம் மஹதாத்மநஸ்ததா$_2$ || ஸம்ஸ்தாயமாநோ ஹநுமாந் வ்யவர்த்த$_4$த மஹாகபி: | ஸமாவித்$_4$ய ச லாங்கூ$_3$லம் ஹர்ஷாச்ச ப$_3$லமேயி

கு.அ. f திர்யக்குகளுக்கு ப்ரணயகலஹமுண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (பள்ளிகமலத்தித்யாதி$_3$) i 'தேங்காதே'–ப$_4$யப்பட:தே. l_2 'ப்ரஸக்தஸ்ய ப்ரதிஷேத$_4$: அன்றே:பயப்பட யோக்$_3$யதை உண்டோ' என்ன (பால்போருமித்யாதி$_3$) இத்தால் ப$_4$யப்பட யோக்$_3$யதையுண்டு என்றபடி. i_2,m'புக்கு' என்றதுக்குத் தாத்பர்யம் (திருவடி என்று தொடங்கி) pசீர்த்தமுலை–கனத்தமுலை.

A பெரிய திரு 6-7-8.

n(இருந்து) o பால்மாறிலிறே எழுந்திருக்கலாவது; ஸ்த₂ாவரப்ரதிஷ்டை₂போலே இருந்து. p (சீர்த்த முலை) q விரலிட்டுச் சுற்றிப்பிடிக்கவொண்ணாது இரண்டு கையாலும் அணைத்துக் கறக்கவேண்டும்படி கனத்திருக்கை. r(பற்றி r₃வாங்கக் r₄குடம் நிறைக்கும்) s வாங்குகை-வலிக்கையாய், பற்றிக்கறக்கக் குடம் நிறைக்கும் என்னுதல், t முலையைப்பற்றிக் கைவாங்க, தானே நின்று பால் சொரியும் என்னுதல், u இட்ட குடங்கள் வாங்கவாங்க நிறைக்கும் என்னுதல். v குடமிடாதார் இழக்கிறது பசுவின் குற்றமன்றே. w இச்சை₂யுடையார் ஈஶ்வரனைப்பற்றி க்ருத க்ருத்யராமாபோலேயாய்த்து இவையும்.

(வள்ளல்) கீழே பால்போரும் பெருமையைச் சொல்லிற்றுகில், இனி, வள்ளல்தனமாவது என்னென்னில்:— க்ருஷ்ணன்படி இவற்றுக்கும் உண்டாயிருக்கை. ஆரேனும் இவன் கழுத்திலே ஓலைகட்டி ''தூதுபோ'' என்ருல் போமாபோலே யாய்த்து, இவையும்; சிறு ப்ரஜைகளுக்குங்கூடக் கட்டவும் அடிக்கவும் ஆம்படி தன்னைக் கொடுத்துக்கொண்டு நிற்கை. x (பெரும்பசுக்கள்) y புல்லும் தண்ணீரும் த₄ாரகமாக வளர்ந்தவையன்றிக்கே, க்ருஷ்ணஸ்பர்ஶமே த₄ாரகமாக வளர்ந்தவையாகையாலே, y, ஸ்ரீ ஶத்ருஞ்ஜயனைப்போலேயாய்த்து இருப்பது.

(நீங்காத செல்வம் நிறைந்து) அழிவில்லாத ஸம்பத்து நிரவதி₄கமாம்படி, z சேதநருடைய புண்யபாபானுரூபமாகப் படிவிடும் ஸர்வேஶ்வரனடியாக வந்த ஸம்பத்தாகிலிறே அளவுபட்டிருப்பது; a 1.''பாபானாம் வா ஶுபா₄னாம் வா'' என்னுமவளடியாக வந்த ஸம்பத்தாகையாலே ஊற்றுடைத்தாயிருக்குமிறே இது; ஆகையாலே, ''நீங்காத செல்வம்'' என்கிறது. 3.

பெ. அ. n,o ''இருந்து'' என்றதுக்குச் சொன்ன அர்த்த₂த்தை விவரிக்கிறார் (பால் இத்யாதி₃) p,q, ''சீர்த்த'' என்றதுக்கு-பருத்த என்று அர்த்த₂மாய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (விரல் இத்யாதி₃) r,u,v,w பற்றி என்றது-பற்ற என்றும், ''சீர்த்த முலைபற்றி - குடம்-வாங்க-நிறைக்கும்'' என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி மூன்றுமர்த்த₂ம் அருளிச்செய்கிறார் (இட்ட இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) r₃ ''குடம்'' என்றது-ஜாத்யேகவசநம்.

z ஐஹிகப₂லமான ஸம்பத்தை தே₃ஶவிச்சே₂த₃மும் காலவிச்சே₂த₃முமின்றிக்கே நிரவதி₄கமென்னக் கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (சேதநருடைய இத்யாதி₃) a (பாபானாம்) இத்யாதி₃க்கு - புண்யபாபமடியாக வருமதன்றிக்கேயிருக்கையாலே அவள் க்ருபை அளவுபட்டிராமையால், அத்தால் வரும் ஸம்பத்தும் அளவில்லாதே நிரவதி₄கமாம்படியிருக்கும் என்று கருத்து.

(ஓங்கி இத்யாதி₃) நீராடினுல்-நாடெல்லாம்-தீங்கின்றி, திங்கள் மும்மாரி பெய்திடும்; கயல்-ஓங்கு பெருஞ்செந்நெலூடு-உகள, பொறிவண்டு-பூங்குவகூப்போதில் - கண்படுப்ப இருக்கும்; வள்ளல் பெரும்பசுக்கள்-தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக்கும்; இப்படி நீங்காத செல்வம் நிறைந்திடும்; எம்பாவாய்-எங்கள் வார்த்தையைப் பின்சென்று, ஓர்-ஒருங்கோள்; [அஷ்டாக்ஷர மந்த்₃ரருடைய வைப₄வத்தை பு₃த்₃தி₄ பண்ணுங்கோள் என்றபடி] என்று அந்வயம் கண்டுகொள்வது. 3.

சி.அ. வாந்||''. p''சீர்த்தமுலை''-கனத்தமுலை r₂,s,t,u ''வாங்கக்குடம் நிறைக்கும்'' என்றதுக்கு மூன்று பொருள்; t இரண்டாமர்த்த₂ம் கையாலே முலையைத்தொட்டுக் கைவாங்க என்றபடி. v இப்படியானுல் குடங்கள் எங்கே? அத்யுக்தியன்றே? என்ன (குடமிடாதாரித்யாதி₃) x. y பெருமைக்குத் தாத்பர்யம் (புல்லும் தண்ணீருமித்யாதி₃) 3.

சு. அ. r₂, t ''வாங்க' என்றதுக்கு இரண்டாமர்த்த₂ம் 'கையாலே முலையைத்தொட்டுக் கைவாங்க' என்றபடி. vஇப்படியானுல் குடங்களெங்கே? என்ன (குடமிடாதார் இத்யாதி₃) y₂ ஶத்ருஞ்ஜயன்—சக்ரவர்த்திதிருமகனுருடைய ஆனை.

ஆருயிரப்படி — மூன்றும்பாட்டு

அவ:— மூன்றும்பாட்டில், சேதநர் — 1.''ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க₃காமோ யஜேத'' என்று-ப்ரத₂நப₄லம் ஸ்வர்க்க₃மென்றிருப்பர்கள். இனி, 2.''ஆயுரா ஸ்தே'' என்று தந்தாமுக்கு நன்மைவேண்டியிருக்கையாலே அவாந்தரப₄லம் புத்ரர்கள் க்₃ருஹக்ஷேத்ரங்கள் த்₃ருஷ்டாதி₃களென்றிருப்பர்கள்; இவர்களுக்கு இரண்டும் த்யாஜ்யமிறே. ''உன்றன்னேடுற்றேமேயாவோம் உனக்கே நாமாட்செய் வோம்''(29) என்னுமதிறே இவர்கள் ப்ரத₂நப₄லமாக நினைத்திருப்பது; இனி அவாந்தரப₄லமாக நினைத்திருப்பது தாங்கள் இருந்த நாடு ஸம்ருத்₃த₄மாயிருக்கை; ஆகையாலே, இனி அதுக்கு அநுமதிபண்ணினூர்க்கு நன்மையை ஆசைப்படுமித்தனை யிறே. 3. ''ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே'' என்றுமினிறே. அதிர்ந்திராத மாத்ரமே யிறே வேண்டுவது. அவனுகப்பைப் பின்செல்லுகை ஸ்வரூபம் என்றிருக்குமவர்களே இவர்களும்; அவனும் பரஸம்ருத்₃த₄யேகப்ரயோஜநனே.

வ்யா: — (ஓங்கி) கீழிற்பாட்டிலே — ''பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்''(2) என்றார்கள்; ஆர்த்தரக்ஷணத்துக்காகவிறே இக்கிடை. இந்த்₃ராதி₃கள் ஆர்த்தத்₃வனி கேட்டு ஸ்ரீவாமநனாய் வந்தவதரித்து அவர்கள் கார்யஞ்செய்தபடி. ''ஓங்கி'' என்கை யாலே - இவ்வளர்த்திக்குப் பூர்வத₃ஶையில் வாமநத்வம் தோற்றுகிறது. இந்த்₃ரன் கண்ணீர்கண்டு சிரும்பினபடியும், மஹாப₃லி நீர்வார்த்தவாறே வளர்ந்தபடியும்; யனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் ஆதி₃த்யகிரணம் பட்டவாறே வளருமாபோலே, அபேக்ஷி தம்பெற்று வளர்ந்தபடி. 4. ''ஸதை₃கருபரூபாய'' என்கிற தத்த்வமிறே சிறுப்பது பெருப்பதாகிறது — ஸம்ஸாரிகளுடைய வ்ருத்தி₃ஹ்ராஸாதி₃கள் கர்மாநுகு₃ண மாகையாலும், ஸ்வார்த்த₂மாகையாலும், தோ₃ஷாய ஆகாநிற்கும்; ஸர்வேஶ்வரன் ரெயல் பரார்த்த₂மாகையாலும், க்ருபையாலேயாகையாலும், கு₃ண்ய ஆமத்தனையிறே, ''ஸ்ரீவைகுண்ட₂த்திலிருக்கும்போது ஸம்ஸாரிகளுடைய இழவுக்குத் திருவுள்ளம் நொந்திருக்கும்'' என்று பட்டரருளிச்செய்ய; சிலர் அத்தைக்கேட்டு, ''அவாப்த ஸமஸ்தகாமனாய், நிரதிஶயாநந்த₃யுக்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரனுக்கு ஓரிழவுண்டோ திருவுள்ளத்தில்?'' என்ன; 5.''வ்யஸநேஷு மநுஷ்யாணாம்'' என்கிறது கு₃ணப்ரகரணமோ, தோ₃ஷப்ரகரணமோ?' என்றருளிச்செய்தார். 5. ''து₃:க்கி₃த:'' என்னுநோக்கச்செய்தே கு₃ணமாகிறதிறே; 5. ''ப்₃ரூம:'' இவர்களளவல்ல திருவுள்ளம் நொந்திருக்கிறபடி. இவன்தன் காவற்சோர்வாலன்றே படுகிறது. 6. ''ப்₃ரஹ்மவிஷய வாஸிந:'' என்று எல்லைக்குள்ளே கிடக்குமத்தனையிறே இவனுக்கு வேண்டுவது. இவன் இடரைக் காண்கையாலும், நம் காவற்சோர் வாலே வந்ததென்றிருக்கையாலும் து₃:க்க₂ம் இரட்டித்திருக்கும். 5. ''ப₄வதி'' இன்ன வ்யஸநங் கழிந்தவாறே, உண்டு புடவையுடுத்து வெற்றிலையும் தின்று ஸுகித்துப்போம். 7. ''கு₃ணம் ப்ரவ்ருத்₃த₄மிவ மே'' என்று உள்ளதனையும் நினைப்பூட்டுகும் அவன். இங்ஙனேயிருப்பது தி₃வ்யாந்த:புரத்துக்கோவென்னில்: 5. ''மநுஷ்யாணாம்'' ஜந்த₃ர்மாக்களெல்லார்க்கும். மாறனேரிமிலே ''ராமாநுஜ

தாஸன்'' என்பாரொருத்தர் ''அவன் வருகிறபடியைக்கண்டு கடக்கப்போவென்பதே! நாலடி விலங்கிப்போதல் இல்லையாகில் ஒரு முழுக்கிட்டுக்கொள்ளுதல்—செய்யவன்றோவடுப்பது''என்ன; '' 'சண்டாளனேயாகிலும் அவன் ஆர்த்தனனஸமயத்தில் அல்லாதார் விலங்கிப்போவார்; த்விஜனாகில் அவன் விலங்குவான்' என்று விதி விலோஷித்த அம்ஸம் அழிந்ததே'' என்று அவர்கள் சொல்ல, ''கெடுவிகாள்! விதிபூர்வகமாயோ க்ருபையிருப்பது?'' என்று அருளிச்செய்தார்*. 1.''பாபாநாம் வா ஸுபாநாம் வா''—என்றருளிறே பிராட்டி. இவர்களுடைய பூர்வவ்ருத்தம் கிடக்கிடாய், உன் கையிலேயகப்பட்டு வதப்ராப்தைகளாய் நிற்கிறமை மெய்யேயென்கிருள். ஆகையாலே ஸர்வேஸ்வரன் செயல்களுக்கெல்லாம் குணதிக்யமுண்டித்தானேயிறே. 2.''ஏகதா பவதி, த்விதா பவதி'' என்று முக்தரும் பரார்த்தமாகப் பல வடிவு கொள்ளாநின்றார்களிறே, அதுவும் குணத்திலே செருகாநின்றதிறே. (உலகளந்த) எதிர்த்தலை அறிந்து அபேக்ஷிக்கப்பெற்றதில்லைகிடீர். A ''என்னிது மாயம்! என்னப்பனறிந்திலன்'' என்ற நமுசி ப்ரப்ருதிகளைப்போலே விலக்குகையில்லாமையே பற்றாசாகச் செய்ததத்தானேகிடீர்; B ''அடிச்சியோம் தலைமிசை நீயனீயாய்'' என்று ஆசைப்பட்டு மடலெடுக்கவேண்டும்படியான அத்திருவடிகளைக் கொண்டுகிடீர் காடுமோடையுமளந்தது. C ''பொல்லாக் குறளுருவாய்ப் பொற் கையில் நீரேற்று'' என்று — B ''நீயனீயாய்'' என்று இரந்துபெறவேண்டும் கைபைக்கொண்டுகிடீர் இரந்தது. D ''கொண்டானையல்லால் கொடுத்தாரை யார் பழிப்பார்'' — ஈஸ்வரனுடைமையை என்னது என்றிருந்தவன் பக்கலிலே குணங் கொண்டு, தன்னுடைமையை ''தன்னது'' என்று எல்லைநடந்து கொண்டவன் பக்கலிலே குற்றங்கொள்வதே! E ''நீள்வான்குறளுருவாய்'' — வளருகைக்கு நரிப் பூணூலிட்டவித்தனே. E''தக்கணைக்கு மிக்கானே''—பூஜ்யதமனனவனே. E''கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே'' 3.''பிலே பதோருக்ரமவிக்ரமாந் யே''—ஸர்ப்பங்கள் புகும் பிலத்தோடு அச்செவிகளோடு வாசியில்லை. 'ப்ரஸ்துதம் க்ருஷ்ணவதாரமாயிருக்க, ஸ்ரீவாமநாவதாரம் ப்ரஸங்கிப்பானென்?' என்னில்; செய்யும் தொழில்களும், ஆஸ்ரித பக்ஷபாதமும், வடிவழகும், வாத்ஸல்யமும், அவனொரு ஊருக்குக் கையாளானைப்போலே இவனொரு நாட்டுக்காக எளியனாயாலுமாக, அமைந்திருக்கையாலே சொல்லுகிறார்கள்.

(உத்தமன்) பரஹிம்ஸைபண்ணியும் தந்தாம் வயிறு வளர்ப்பார்-அதமர்; பிறர் ஜீவநத்தை அநுமதி பண்ணியிருப்பார்-அவனிலும் உத்க்ருஷ்டர்; ''பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்கவேணும்'' என்றிருப்பார்-மத்யமர்; உதாரனனவன் பக்கலிலே தன்னையழியமாறியும் பிறரை ஜீவிப்பிக்குமவன்- உத்தமனாகிறான். 4.''அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்'' என்கிறபடியே என்னையும் என்னுடைமையையும் நேர்ந்தாகிலும் ஆஸ்ரிதர்க்கு ஓரங்கொடுத்துச் செய்யக்கடவோமென்றிருக்குமவனே.

A பெரியாழ் திரு 1-8-8. B திருவாய் 10-3-6 & 5 C நாச்-திரு 11-5 D முதல் திருவ 79. E பெரியதிரு 11-7-2.

---

* சுணைமையோடு வரும் சண்டாளனைப் பார்த்து 'விலகிப்போ' என்று சில த்விஜர் சொல்ல, அவர்களைக் குறித்து, கருணைமிக்க ராமாநுஜதாஸர் அருளிய வார்த்தை இது. அல்லாதார்—த்விஜரல்லாதார்.

A "அன்று கருமாணியாய்" உனக்கு வேண்டிச் செய்தாயோ? உன்னுடையார்க்கு வைத்த சந்தாநச்சாபமிறே.

(பேர்பாடி) கழஞ்சு மண் பெறுவாரும் இழப்பாருமாய், அதில் லாப₂ லாப₂மிறே அவர்களுக்குள்ளது. அங்ஙனன்றிக்கே, பேர்பாடுகையே எங்களுக்கு உத்₃தே₃ஶ்யமென்கிறார்கள். கட்டிப்பொன்போலே அவன்; பணிப்பொன்போலே திருநாமம். வாச்யபூ₃தனனவன் ஸத்தையையுண்டாக்கும்; அவனுக்கு வாசகமான திருநாமங்களாலேயிறே அநுப₂விப்பது. "திருநாமம் சொல்லுகைக்கு அதி₄காரஸம்பத்தி வேண்டாவோ?" என்று நஞ்ஜீயர் ப₄ட்டரைக் கேட்டருள; "யோக்₃யனுகில் இருந்தபடி சொல்லுகிறன்; அயோக்₃யனுகில் யோக்₃யதை ஸம்பாதி₃க்கவேண்டா" என்று அருளிச்செய்தார். எங்ஙனேயென்னில்:- "மேலுள்ள நன்மைகளைத் தரக்கடவதாக விஶ்வஸித்தவனுக்கு, கீழுள்ள விரோதி₄களையும் போக்கமாட்டாதோ?" என்று அருளிச்செய்தார்; க₃ங்கை₃யாடப் போமவனுக்கு வேறொரு குழியிலே முழுகிப் போகவேணுமோ? மாத்ருகா₃துகனுக்கும் கைநொந்தால் "அம்மே!" என்னப்ராப்தியுள்ளவோபாதி, ப₄க₃வத்₃விஷயத்தில் விரோதி₄த்தார்க்கும் திருநாமஞ்சொல்லப்ராப்திபுண்டு. திருநாமந்தான் எல்லா அதி₄காரிகளுக்கும் வேணும். கர்மயோக₃நிஷ்ட₂னுக்கும் பாபக்ஷயத்துக்குத் திருநாமம் வேணும்; ஜ்ஞாநயோக₃ நிஷ்ட₂னுக்கும் ஜ்ஞாநவைஶத்₃யத்தைப் பண்ணிக்கொடுக்கும்; ப₄க்தியோக₃ நிஷ்ட₂னுக்கும் ப₄க்திஸ்வரூப₂நி₃ஷ்பத்திக்கு வேணும்; ப்ரபந்நனுக்கு தே₃ஹயாத்ரைக்கு வேணும், "விரோதி₃யைப் போக்கித் திருநாமஞ்சொல்லவேணும்" என்னும் விளம்ப₃ம் பொறுதவனிறே இதுக்கு அதி₄காரி. 1. "க்ருஷ்ணநுஸ்மரணம் பரம்" க்ருஷ்ணனுக்குத் தன்னைத் தநுவாக ஸ்மரிப்பான்-ப்ரகாரமாக ஸ்மரிப்பானென்றபடி, 1, "பரம்" — அவனில் மேற்பட்டாரொரு ஶேஷியுண்டாகிலிறே தனக்கு ப்ராயஶ்சித்தம் பண்ண வேண்டுவது, (பேர்பாடி) ப்ரீதிபூர்வகமாகப்பாடுகை. B"ஆர்வத்தால் பாடாதார்" என்னுமாபோலே. (நாங்கள்) பாடி மடிகோலாதே, இதுதானே ப்ரயோஜநமாகவுடைய நாங்கள். "பாடிநெய்யுண்ணுமே" (2) என்றவர்கள் பாட்டிறே. C "இன்று வந்தித்தனையும் அழுது செய்திடப்பெறில்" என்றிருக்குமவர்களிறே. என்னையுங் கொடுத்து என்னுடைமையுங் கொடுத்து என்கிறார்கள். (நம் பாவைக்குச் சாற்றி) நாட்டார்க்கு "நோன்பு" என்று ஒரு பேரையிட்டு. (நீராடினால்) விரஹதாபம் போகக் குளித்தால். (திங்கின்றி நாடெல்லாம்) 2."யத்₃ராஷ்டாக்ஷரஸம்ஸித்₃தே₄ர் மஹாப₄ாகே₃ர் மஹீயதே ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி₄து₃ர்பி₄க்ஷதஸ்கரா: ॥". அவித்₃யாதி₃ஸகலது₃ரிதங்களும் போம். இவர்கள் தாங்களும் முதல்தன்னிலே "நாராயணனே"(1) என்று துணிந்திறே இழிந்தது. (நாடெல்லாம்) இத்திரளிலேயுண்டாய்ப்போகிறதன்றே ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம், அசல் தாக்குமிறே. *தேவப்பிள்ளைக்கு "லோகஹிதார்த்த₂மாகக் காண் நீ போகிறது" என்று அருளிச்செய்தவார்த்தை. D ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போலே ஆக்கிக்கொண்டிறேயிருப்பது.

A இர. திருவ 61. B பெரிய திரு 11-7-4. Cநாச்-திரு 9-7. D திருவாய் 6-7-2.

---

*ஆளவந்தான் தேவப்பிள்ளையை லோகஸாரமத்தின்பொருட்டு ஒரிடத்திற்குப் போகச்சொல்ல, ஆளவந்தானது பிரிவை எண்ணித் தயங்கிய தேவப்பிள்ளைக்கு ஆசார்யன் அருளியவார்த்தை.

A தீதில்நன்னெறிகாட்டி B தீர்த்தகரராமின்திரிந்திறே. C"கலியுங்கெடும்" என்னும்படியிறே. (தீங்கின்றி நாடெல்லாம்) 1. "ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி" என்கிற நாடு போலே. 2. " நகஂராணி ச ராஷ்ட்ராணி தஂநதஂான்யயுதாநி ச "; தந்தாம் புண்ய பாபாநுகுணமாகவன்றிக்கே பெருமாள் சென்ற நிலையாலே நாடு வாழ்ந்தாற் போலே. (திங்கள் மும்மாரிபெய்து) வறட்கேடுபோலே வெள்ளக்கேடாகவொண்ணாதே, ஊறெண்ணெய்விட்டாற்போலே அபேக்ஷிதஸமயங்களிலே வர்ஷிக்கை. ஒன்பதுநாள் வெயிலும் ஒருநாள் மழையுமாவதுகாணும்!

(ஒங்குபெருஞ் செந்நெல்) குனிந்து நின்று முதலிட்டு மேலே நோக்கிப்பார்த்தால் ஆகாஶத்தை வெளியடைப்பதுகாணும்! ஆகாஶத்திலே வரம்பில்லையே. திருவுள்ளந்தருளினவனைப்போலே. (பெருஞ்செந்நெல்) சுற்றிலே பணைக்கை. D "செய்கொள் செந்நெலுயர்" என்னுமாபோலே, (ஊடு கயலுகள) வைரத்தூண்போலே நெல் நிற்கையாலே நேரே ஸஞ்சரிக்கப்பெறாது, ஒருக்கடித்து உலாவுமத்தனையாய்த்து- ஜலசரஸத்வங்களும், நீரிலும் நிழலிலும் கிடந்து வளர்ந்த செருக்காலே களித்து மேல்நோக்கிப்பாயாநிற்குமாய்த்து; E "பள்ளச்செருவில் கயல்கள" என்னுமாபோலே. F "சலங்கொண்டு மலர்சொரியும்" இத்யாதி. (பூங்குவளைப் போதில்) அழகிய குவளைப்பூவிலே, குவளைப்பூ அலர்ந்தபோதிலே என்று காலபரமாகவுமாம். (பொறிவண்டு) மதுபானத்தாலே இளகிப்பதித்திறே வண்டிருப்பது. (கண்படுப்ப) அலர்கிற செவ்வியிலே மதுபாநம்பண்ண என்றிழிந்து, படுக்கைவாய்ப்பாலே மயங்கிக்கிடந்து, "நீயெழுப்பிற்றிலை, நீயெழுப்பிற்றிலை" என்று பேடையும் தானும் விடிவோறே "சிறுபாறு" என்னுமாய்த்து.

வயலில் ஸம்ருத்தி, சொல்லி ஊரில் ஸம்ருத்தி, சொல்லுகிறது — (தேங்காதேபுக்கு) பால் வெள்ளந்தான் கறக்கப்புக்கவர்கள் அஞ்சிப் பிற்காலிக்கும்படியிறேயிருப்பது, திருவடி ஸமுத்ரதரணத்துக்கு அஞ்சாதே இழிந்தாற்போலே இழியவேணுமாய்த்து. முத்துக்கு முக்குமவர் கடலுக்கு அஞ்சாதாப்போலே; "நனைத்தில்லம் சேறாக்கும்" (12) இறே. (இருந்து) ஸ்தாவர ப்ரதிஷ்டையாக. (சீர்த்த முலை) பால் விம்மி இரண்டு கையாலும் பற்ற வேண்டும்படியிருக்கை. (பற்றி வாங்க) பற்றி வலிக்க; தொட்டுவிடக் குடங்கள் நிறையாநிற்குமாய்த்து. பற்றிப்பற்றி வாங்கக் குடங்கள் நிறைக்குமென்றுமாம்.

(வள்ளல்) கீழே பால் போரும்படி சொல்லிற்றுகில், இனி வள்ளல்தனமாவது— கழுத்திலே ஓலைகட்டி, 'தூதுபோ' என்னலாம்படியான க்ருஷ்ணனைப்போலே, சிறுபிள்ளைகளும் கழுத்தைக் கட்டலாம்படி தன்னைக் கொடுத்துக்கொடுநிற்கை, (பெரும்பசுக்கள்) ஸ்ரீ பாத்ருஞ்ஜயனைப்போலேயிருக்கை. புல்லாலே வளருகிறவை

A பெரு-திரு 2-6. B இர. திருவ 14. C திருவாய் 5-2-1. D திருவாய் 6-1-1. E பெரிய திரு 5-1-2 F பெரிய திரு 3-9-1.

யன்றே. திங்குழலோசை அசையிட்டிறே வளருவது. A [கானகம்படி இத்யாதி₂] அவன் கணிசியாதே நடக்க, அவர்கள் கருதி ஆடுகிற கூத்தை மறந்தார்கள். நடைச் சக்ர்வத்துப்பிடிக்கலாம்படியிறே நடப்பது. அவன் குழலூத இவர்கள் பாட்டுமறந் தார்கள். B[சிறுவிரல்கள் தடவிப்பரிமாற] இவருக்குச் சிறுவிரலிலே கண்செல்லு கிறபடி. B [செங்கண் கோட] துளைதோறும் கண்ணோடுகிறபடி. B [செய்ய வாய் கொப்பளிப்ப] ஸௌகுமார்யத்தாலே திருப்பவளம் கொப்பளிப்ப, B [குறுவியர்ப் புருவம் கூடலிப்ப] வேர்த்துப் புருவம் வளைய. B [கோவிந்தன் குழல்கொடுதினபோது] பசுக்கள்மேய்த்து, அவற்றின் வயிறு நிறைந்த ஹர்ஷத்தாலே தான்குழலூதா நிற்குமாய்த்து,

(நீங்காதசெல்வம் நிறைந்து) 1.''ந கஶ்சிந்நாபராத்₃யதி'' என்னுமவ ளடியாக வந்த ஸம்பத்தாகையாலே ஊற்றுமாருத ஸம்பத்திறே, 3:

ஈராயிரப்படி — மூன்றும்பாட்டு

வ்யா:— மூன்றும் பாட்டு— (ஓங்கி) பிறர்கார்யம் செய்ய என்றுல் பணைக்கு மென்கை. C "உவந்த உள்ளத்தனுய்" இத்யாதி₂—பனியில் சாய்ந்த மூங்கில் ஆதி₃த்ய கிரணங்கள் பட்டால் எழுமாபோலே ஓங்குகை. வெய்யில்—ஆர்த்த நாத₃ம். (உலகளந்த) ஏகதே₂ஶத்தையன்றியே எல்லாரையுமடைய குணகு₃ண நிரூபணம் பண்ணுதே ரக்ஷிக்கை. (உத்தமன்) தென்றலும் நிலவும்போலே பிறர்க்கேயாயிருக்கை. 2. "ந தே ரூபம்" இத்யாதி₃ப்படியே. நமக்கு 3. "ப₄க₃வத ஏவாஹமஸ்மி" போலே, அவனுக்கு 2. "ந தே ரூபம்–ப₄க்தாஹாம்" ஆகையும்; ஆகை யாலே உத்தமனுனன். (பேர்) பிறர்க்கும் அவனுக்குமுள்ள வாசி போரும் திருநாமத் துக்கும் அவனுக்கும். க₃ங்கா ஸ்நாநம் பண்ணுமவனுக்குப் பூர்வத்திலே ஸ்நாநம் வேண்டாதாப்போலே, இதுதானே எல்லாமாத்₃தி₃யும். (பேர்) இதுதான் எல்லா அதி₄காரிகளுக்கும் அபேக்ஷிதம்; கர்மயோகி₄க்கு விரோதி₄போகைக்கும் கர்மம் செய்து தலைக்கட்டுகைக்கும், ஜ்ஞானயோகி₄க்கு ஜ்ஞானம் விஶத₃மாகைக்கும் விரோதி₄ போகைக்கும், ப₄க்தியோகி₃க்கு ப₄க்தி வர்த்தி₄க்கைக்கும் விரோதி₄ போகைக்கும், ப்ரபன்னனுக்குச் சோறும் தண்ணீரும் போலேயாகைக்கும் திரு நாமம் போல் இல்லையென்றபடி. (பாடி) D "ஆர்வத்தால் பாடாதார் பாட் டென்றும் பாட்டல்ல" என்றிறே பாட்டுக்கு லக்ஷணம்.

(நாங்கள்) பாடாவிடில் த₄ரியாத நாங்கள். உபாயம் அவனேயானுல் த₄ரகமாமத்தனையிறே. (நம்பாவைக்கு) பெறுவது க்ருஷ்ணனையாய், பெறு விப்பானும் க்ருஷ்ணனேயான நோன்புக்கு. (சாற்றி நீராடினுல்) நாட்டுக்குப் புண்யம், நமக்கு விரஹராஹித்யம்.

(தீங்கின்றி நாடெல்லாம்) எல்லாப்பொல்லாங்குகளும் போக ஸேஶ்வர மான ஜக₃த்தடைய வாழ. (திங்கள் மும்மாரி) நெடுநாள் மழையின்றிக்கே வ்ய ஸனப்பட்டாற்போலே வெள்ளத்தாலும் கேடாகாமே ஒன்பதுநாள் வெய்யி லெரித்து ஒருநாள் தலைக்கெண்ணெய் ஊறவிட்டாற்போலே நன்றும் படி மழைபெய்ய வேணுமென்கை. 4. "யத்₃ராஷ்டாக்ஷர" இத்யாதி₂வத். E "நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந் தனவே" என்று சொல்லுகிறபடியே.

A பெரியாழ் திரு 3-6-4. B பெரியாழ் திரு 3-6-8. C அமலனாதி 2. D பெரிய திரு 11-7-4. E பெரியாழ் திரு 5-4-3.

(ஒங்கு பெருஞ்செந்நெல்) கவிழ்ந்து நின்று முதலியிட்டு அநந்தரம் அண்ணாந்து பார்க்கவேண்டுகை. மேல்நோக்கி உயரும் என்கை. (ஊடு கயலுகள) A "ஒண்மிதியில்" என்னுமாபோலே பயிர் மேல்நோக்குந்தனையும் ஆனைக்கன்றுகள் போலே செருக்கித் திரிகிற கயல்களுக்குத் தாவித் திரியலாம்படியிருக்கை.

(பூங்குவளைப் போதில்) அழகிய குவளைப் பூவிலே; "போது" என்று காலபரமாகவுமாம். கயலுடைய ஸஞ்சாரத்தாலே பூக்கள் நெகிழ்கிறபடி. (பொறிவண்டு) ரஸாயனஸேவை பண்ணினாற்போலே நரை திரை மாறி இளகிப் பதித்திருக்கை. (கண்படுப்ப) ஸௌக்யத்தாலே உறங்கி 'நீ எழுப்பிற்றில்லை நீ எழுப்பிற்றில்லை' என்று உணர்ந்து விடிவோறே வெறுத்துத் தன்னில்தான் சீறுபாறென்கை.

(தேங்காதே புக்கிருந்து) இனி ஊரில் ஸம்ருத்தியைச் சொல்லுகிறது. (தேங்காதே) திருவடி ஸமுத்ர தரணத்துக்கு ஒருப்பட்டாற்போலே; முத்துக்கு முழுகுவார் கடலுக்கு இருயாதாப்போலேயாய்த்து இருயாதே புக்கபடி. (இருந்து) பால் வற்றி எழுந்திருக்க வ்ரகில்லை; ஸ்தாவரப்ரதிஷ்டைபோலே. (சீர்த்தமுலை பற்றி) விரலாலே பிடிக்கவொண்ணாதே இரண்டு கையாலே அணைக்கவேண்டும் படியிருக்கை. (பற்றி வாங்க) தொட்டுவிட அமையும். (வாங்கக் குடம் நிறைக்கும்) ஒருகால் பற்றி வலிக்க இட்ட குடம் நிறைக்கை. 'வைப்பார் தாழ்வே; வைத்தகுடமெல்லாம் நிறைக்கும்' என்றுமாம். (வள்ளல்) சிறுபிள்ளைகளும் கட்டி விடலாய், கழுத்தைக்கட்டிக்கொண்டு நாலலாயிருக்கை. (பெரும் பசுக்கள்) க்ருஷ்ணனுடைய ஸ்பர்சமுண்டாகையாலே, ஸ்ரீ சத்ருஞ்ஜயனைப் போலேயிருக்கை. (நீங்காத செல்வம்) ஈஸ்வரன் பார்த்தவிடம்போலே ஸாவத்யன்றிறே இவர்கள் பார்த்தவிடம். 3.

நாலாயிரப்படி — மூன்றும் பாட்டு

3. அவ:—மூன்றும் பாட்டு. தங்கள் நோன்பாலே லோகத்துக்குப் பலிக்கும் பலம் சொல்லுகிறது. B "சாது கோட்டியுட் கொள்ளப்படுவாரே" என்று தங்களோடு ஒரு கோவையாகக் கூடுகை பரமபுருஷார்த்தம். அதில்லாத பின்பு ஐஹிக போக்யத்தையாகிலும் இழவாதே பெற்றிடுவர்களென்கை. 'நம்மார்த்தி தீர நாம் குளிக்க நாடுவாழப்பெறுவதே!' என்கிறார்கள். ருஸ்யசிருங்கன் திருவயோத்யையிலே (அங்கதேசத்திலே)? புகுந்த பின்பு அநாவ்ருஷ்டி நீங்கி ஸம்ருத்தமானாற் போலே. ஸ்ரீபரதாழ்வான்வ்யாஜம் தீர, நாடு 1."ப்ரஹ்ருஷ்டமுதிதம்" ஆய்த்திறே. இவர்களும் க்ருஷ்ணனும் கூடினபின்பு நாட்டுக்கு வர்ஷஸம்ருத்தியிறே. இவர்கள் விச்லேஷமேயிறே நாட்டுக்கு அநாவ்ருஷ்டி.

A திருநெடு 5. B பெரியாழ் திரு 3-6-11.

வ்யா:—(ஓங்கி) 'பிறர்கார்யம் செய்ய' என்ருல் பணைக்குமிறே. A "உவ்ந்தவுள்ளத் தனுயுலகமளந்தண்டமுற நிவந்த நீண்முடியன்" — பனியில் சாய்ந்த மூங்கில் ஆதி₃த்யனைக்கண்டால் எழுமாபோலே பிறர்கார்யம் செய்கை ஸத்தாப்ரயுக்தமென்கை. ஓங்குலகுக்கடியான வெய்யில் அங்கு; இங்கு ஆர்த்தநாத₃ம். வளர்ந்த சடக்கு—கையில் விழுந்த நீரும் ப்₃ரஹ்மா திருவடி விளக்கின நீரும் ஒக்க விழும்படியாகை. (உலகளந்த) ஏகதே₃ஶத்துக்கன்றியே இருந்ததே குடியாக கு₃ணைகு₃ண நிரூபணம் பண்ணுதே ரக்ஷிக்கை. அகவாயில் வ்யாப்தியில் வரைதலில்லாதாப்போலே திருவடிகள் புறம்பெல்லாரோடும் கலந்தபடி. அன்யத்ர 1. "அநஶ்நந்நந்ய:" என்று ஒட்டற்று நின்ருன். இங்கு தனக்கு தா₃ரகமாக நின்ருன். உறங்குகிற ப்ரஜையைத் தாய் கட்டிக்கொண்டு கிடக்குமாபோலே இவ்விடம் தனக்கு தா₃ரகம். இவ்வவதாரமெல்லாம் இணைந்துபோருகையாலே க்ருஷ்ணவதாரத்தோடொக்கும். இசையாதார் பக்கல் விழுமவன் இசைந்தார் பக்கல் மேல்விழச் சொல்லவேணுமோ?

(உத்தமன்) தனக்காயிருத்தல் செய்யாதே, தென்றலும் நிலாவும் போலே பிறர்க்கோயாயிருத்தல். 2."ந தே ரூபம் ந சாகார:" — நிஷேத₄ம் தன்னதென்கையைத் தவிர்க்கிறது. நமக்கு 3."அஹமபி ந மம ப₄கு₃வத ஏவாஹமஸ்மி" போலே இவனுக்கு 2. "ந தே ரூபம் - ப₄க்தாநாம்" என்கை. (உத்தமன்) ஸ்வாதி₄கனென்கை. தான் நிர்ஹேதுகமாக ரக்ஷிக்கையும் அது தன் பேருயிருக்கையும். ஈஶ்வரர்களுமகப்பட இவன் காலிலே வணங்கப்புகுகையாலே இவனே பரதத்வம். தன் திருவடிகளை க்ருபையாலே தன் பேறுகத் தலைகளிலே வைக்கையாலே ப்ராப்யமும் ப்ராபகமும் தானே.

(பேர்) பிறர்க்கும் அவனுக்குமுள்ள வாசி போரும் திருநாமத்துக்கும் அவனுக்குமுள்ள வாசி. ஒருவன் திருநாமத்தைச் செவியிலே சொல்லி உறவையறிவித்துத் தலையிலே திருவடிகளை வையாமையாலேயன்றே எனக்கு உன்திருவடிகள் ஸம்ப₃ந்த₄ம் அந்தராத்மதையோடொத்து நிலையில்லாதே போய்த்து. (பேர்) 'அம்மே' என்பார்க்கு சடங்குவேண்டா. மாத்ருகா₃துகனுக்கும் கைகொந்தால் 'அம்மே' என்ன ப்ராப்தியுண்டாமாபோலே ஸ்வாதி₄காரம். ப்ரயதனுய்ச் சொல்லவேண்டாவோவென்னில்: க₃ங்கா₃ஸ்நாநம் பண்ணப்போமவனுக்கு வேறொரு குழியிலே தோயவேண்டாதாப்போலே, இது தானே எல்லா ஶப்₃தி₃யையும் பிறப்பிக்கும். எம்பெருமானையொழிந்த ஶப்₃தி₃கள் இவனுக்கு து₃ரபி₄மானத்தையே பிறப்பித்து எம்பெருமானை அகலப்பண்ணும். அவன் பண்ணும் ஶப்₃தி₃யே ஶப்₃தி₃யாக, தான் அஶப்₃த₃னென்று இருக்குமவனுக்கு, தானும் தன்னை விட்டு, பிறரும் தன்னைக்கைவிட்டு, எம்பெருமான் பரிக்₃ரஹிக்கைக்குடலாய்விடும். 4."மத்₃வ்ருத்தமசிந்தயித்வா".- கர்மயோகி₃க்கு, விரோதி₄ போகைக்கும் கர்மம் செய்து நிலைக்கட்டுகைக்கும் திருநாமம் வேணும். ஜ்ஞானயோகி₃க்கு ஜ்ஞானம் விஶத₃மாகைக்கும் விரோதி₄ போகைக்கும், ப₄க்திமானுக்கு விரோதி₄போகைக்கும் ப₄க்தி வர்த்தி₄க்கைக்கும், ப்ரபந்நனுக்குச் சோறும் தண்ணீரும்போலே தே₃ஹயாத்ரைக்கும் வேணும். இப்படி எல்லார்க்கும் திருநாமம் போக்கி இல்லை. (பாடி) B ஆர்வத்தால் பாடும் பாட்டிறே பாட்டுக்கு லக்ஷணமாவது; அல்லாதது பாட்டல்ல.

(நாங்கள்) பேர்பாடாவிடில் தரியாத நாங்கள்; உபாயாம்ஶம் அவனேயாகையாலே தா₃ரகமும் அவனேயாமத்தனையிறே. (நம்பாவைக்கு) அநுஷ்டா₂நமும்

A அமலனாதி 2. B பெரியதிரு 11-7-4.

அநுஷ்டானமும் விகல்பிக்கலாம்படியிருக்கை. அநுஷ்டித்ததாகில் ஸாதனமென்று கொள்ளவொண்ணுதே ப்ராப்யருசியால் வந்ததென்கை; அநுஷ்டித்ததில்லையாகில் அவனை உபாயமென்கையாலே பலத்தில் அழிவில்லாமை. பெறுமதுவும் க்ருஷ்ணனேபாய், பெறுவிப்பவனும் க்ருஷ்ணனேயான நோன்பென்றுமாம். (சாற்றி நீராடினால்) நாட்டுக்குப் புண்யம். நமக்கு விரஹ ஸமயம். 1. "வ்ருத: ப்ரக்ருதிபி: நித்யம் ப்ரயாதி ஸரயூம் நதீம்"—ஸ்ரீபரதாழ்வானைப்போலேயென்கை. 2. "நமே ஸ்நாநம் பஹுமதம்" இத்யாதியால் சொல்லுகிறபடியே அவனுடைய விரஹதாபம்தீரும்.

(தீங்கின்றி நாடெல்லாம்) எல்லாப் பொல்லாங்குகளும் போகை. தந்தாம் பண்ணின புண்ய பலமன்றே அநுபவிக்கிறது. ஸேஶ்வரமான ஜகத்தடைய வாழ. (திங்கள் மும்மாரி) நெடுநாள் மழையின்றிக்கே வ்யஸநப்பட்டாற்போலே வெள்ளத் தாலும் கெடாமே ஒன்பது நாள் வெய்யிலெறித்து ஒரு நாள் மழைபெய்து தலைக்கு எண்ணெய் ஊறவிட்டாற்போலே நன்றும்படி மழை பெய்யவேணுமென்கை. 3. "யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தே: மஹாபாகோ மஹீயதே । ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா: ॥" என்றும் A "நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்பெறுத்த கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தன" என்றும் சொல்லுகிறபடியே.

(ஓங்கு பெரும் செந்நெல்) கவிழ்ந்து நின்று முதலிட்டு அநந்தரம் அண்ணாந்து பார்க்கவேண்டுகை. B "செய்கொள் செந்நெலுயர்" என்னுமாப்போலேயும், C "வரம் புற்றதிர்ச்செந்நெல்" என்னுமாபோலேயும்.

(ஓங்குபெரும் செந்நெல்) சுற்றுடைமையும் ஓக்கமும் வரம்புக்கு அவ்வருகுபோகவொண்ணுமையாலே ஒருமுதலே செய்யுள்ளதடையக்கொண்டு, ஆகாஶத்துக்கு எல்லையில்லாமையாலே மேல்நோக்கி உயராநின்றதென்கை. (ஓங்கு பெரும் செந்நெல்) 4. "வ்ருஷ்ஷே வ்ருஷ்ஷே". (ஊடுகயலுகள) பயிர் நெருங்கினதனையும் ஆனைக்கன்று போலே செருக்கித்திரிகிற கயல்களுக்குத் தாவித் திரியலாமென்கை. திருவுலகளந்தருளின எம்பெருமானைக்கண்டு அனுகூலர் செருக்கி ப்ரீதிக்குப் போக்குவிட்டு ஸஞ்சரிக்குமாபோலே கயல்கள் திரிகிறபடி.

(பூங்குவளைப்போதில்) அழகிய குவளைப்பூவிலே. 'போது' என்று காலபரமாகவுமாம். கயல்களுடைய ஸஞ்சாரத்தாலே பூக்கள் கட்டு நெகிழ்கிறபடி. (பொறிவண்டு) ரஸாயநஸேவை பண்ணினுரைப்போலே நரைதிரைமாறி இளகிப்பதித்திருக்கை. இவர்களுக்கு அங்குள்ளதெல்லாம் உத்தேஶ்யமாயிருக்கை. (கண்படுப்ப) ஒரு மஹாபாரதத்தை நினைத்துவந்து ஏறிப் படுக்கையில் ஸௌக்யத்தாலே உறங்கி விடிந்தவாறே உணர்ந்து "நீ எழுப்பிற்றில்லை, நீ எழுப்பிற்றில்லை" என்று தன்னில்தான் சீறுபாடென்கை. க்ருஷ்ணனும் பெண்களும் படுவதெல்லாம் படாநிற்கும்; D "பள்ளி கமலத்திடைப்பட்ட" இத்யாதி.

A பெரியாழ் திரு 5-4-3 B திருவாய் 6-1-1 C பெரியாழ் திரு 4-9-8
D பெரியதிரு 6-7-6

(தேங்காதே புக்கிருந்து) இனி ஊரில் ஸம்ருத்₃தி₄ சொல்லுகிறது. (தேங்காதே) திருவடி ஸமுத்₃ரதரணத்துக்கு ஒருப்பட்டாற்போலே புக்கு; கடலிலே முழுகுவார் கடலுக்கு இருயாதாப்போலேயாய்த்து இருயாதே புக்கபடி. (தேங்காதே) 1, "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும் விஷயத்த, அத்தலையை உண்டாக்குகைக்காக, தம்குற்றம் பார்த்து இருயாதே ஸ்வீகரிக்குமாபோலே. (இருந்து) பால் ஸம்ருத்₃தி₄யாலே தேங்குமித்தனை; பால் வற்றி எழுந்திருக்க விரகில்லை; ஸ்த₃ாவரப்ரதிஷ்டை₂. (சீர்த்த முலைபற்றி) விரலால் பிடிக்கவொண்ணாது. இரண்டு கையாலும் அணைக்க வேண்டியிருக்கை. (பற்றிவாங்க) தொட்டுவிட அமையும்.

(வாங்கக் குடம்நிறைக்கும்) ஒருகால் பற்றிவலிக்க இட்ட குடங்கள் நிறைக்கை. வைப்பார் தாழ்வே; வைத்த குடமெல்லாம் நிறைக்குமென்றுமாம். (வள்ளல்) சிறு பிள்ளைகளுக்கும் கட்டிவிடலாய், கழுத்தைக் கட்டிக்கொண்டு நாலலாம்படியிருக்கை. (பெரும்பசுக்கள்) கண்ணன் குழலோசையை அசையிட்டு வளருகையாலும், அவனுடைட ஸ்பர்₃முண்டாகையாலும், ஸ்ரீமத்திருஞ்ஜனைப் போலேயிருக்கை.

(நீங்காத செல்வம்) ஈச்வரன் பார்த்தவிடம்போலே ஸாவதி₄யன்றிறே இவர்கள் பார்த்தவிடம். புண்யமடியாக வருதல், ஈச்வர கடாக்ஷமடியாக வருதல் செய்யுமவை போலன்று; அவனுடைய ஐச்வர்யத்துக்கு அடியான் கடாக்ஷமுள்ளவர்களிறே இவ்வைச்வர்யத்துக்கு அடி. (நிறைந்து) ஏலோரெம்பாவாய்.

"உத்தமன்"—பட்டர் அருளிச்செய்த வார்த்தை A "கருமாணியாயிரந்த கள்வனே உன்னைப் பிரமாணித்தார் பெற்றபேறு" என்று சிறு காலைக்காட்டி இரந்து பெரிய காலைக்கொண்டு அளந்து நீ பண்ணின (ஓரம்) உன்னையாச்ரயித்தார் நிர்ப்ப₄ராகைக்கு அவர்களுக்கு நீவைத்த சந்தானச் சாபமிறே? இவ்வாந்தராளிகத்₃ருஷ்டாத்₃ருஷ்டங்களில் ஒருவர்க்கஞ்சாதே, யமாதி₃களுக்கு முழங்கை காட்டிச் செருக்காய் இவர்கள் திரிகைக்கடியென்? என்னில்; அறிந்தோம்; ஒரு பர்மதா₄ர்மிகன் செவியிலே "துர்ப்ப₃லரான நம்மால் நம் கார்யம் நிர்வஹித்துக்கொண்டு கரையிலேறவொண்ணாது; உன்னுடைய ரக்ஷணத்துக்கு ஒரு ப்ரப₃லனை அண்டைகொண்டு த்₃ருஷ்டாத்₃ருஷ்ட விஷயமான உன்னுடைய யத்னங்களையடைய அவன் வசத்திலே பொகட்டு நிர்ப்ப₄யனாயிரு" என்று சொல்லிப்போம்; இவனும் அத்தையே விச்வஸித்து 'அப்படியே' என்றிருக்கும். "எம்பெருமான் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோயும், மார்பிலே அம்பேற்றும், ஸாரத்₂யம் பண்ணியும், பகலை இரவாக்கியும், ஸத்யப்ரதிஜ்ஞனையும், அஸத்யப்ரதிஜ்ஞனையும், பொய் சொல்லியும் மெய்சொல்லியும், வார்க்கொத்துக்குத்தியும், எல்லை நடந்தும், இங்ஙனெத்த செயல்களைச் செய்து இவர்கள் கார்யமே நிர்வஹியாநிற்கும்" என்றார்.

B "மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே" என்று திருமந்த்ரத்துக்கு அர்த்த₂மாக C "மண்முழுது மகப்படுத்து நின்றவெந்தை மலர்புரையும் திருவடியே வணங்கினேனே" என்று அநுஸந்தி₃த்தாற்போலே, இவளும் 'ஓங்கியுலகளந்த உத்தமன்' என்று திருநாமத்தினுடைய அர்த்த₂த்தை முந்துற அநுஸந்தி₃த்து, பின்னை அதுக்கு வாசகமான திருநாமத்தை 'பாடி' என்கிறாள். 3

A இர-தி நுவ 61 B திருநெடு 4 C திருநெடு 5

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம் - மூன்றும்பாட்டு

அவதாரிகை:— மூன்றும்பாட்டு. (ஓங்கி இத்யாதி₃) இப்பாட்டில் தங்கள் நோன்புக்கு அநுமதித₃ாநம்பண்ணினருக்கு வரக்கடவ த்₃ருஷ்டப₂லத்தைச் சொல்லுகிறார்கள்.

